# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
# பட்டயம் (சோதிடவியல்)

## தாள் - 2 சோதிடக் கூறுகள்

## பொருளடக்கம்

**அலகு–I : திருமணப் பொருத்தம்**

1. திருமணப் பொருத்தம் ... 2

**அலகு–II : ஜாதகம் கணிக்கும் முறை**

2. ஜாதகக் கணிதமும் பஞ்சாங்கப் படிப்பும் ... 21

**அலகு–III : இராசியும் அதன் விவரங்களும்**

3. இராசியும் பொதுத் தன்மைகளும் ... 37

**அலகு– IV: சோதிடம் பார்த்தல்**

4. சோதிடர் கடைபிடிக்க வேண்டியவை ... 41
5. பரிகாரங்கள் ... 47
6. அறிந்ததும் அறியாததும் ... 49

**அலகு–V : கோள்களும் இயற்கையும்**

7. கோள்களும் கடவுளும் ... 59
8. இயற்கை தரும் பாடம் ... 71

**அலகு–VI : ஜாதகப் பலன் எழுதுவது எப்படி?**

9. ஜாதகம் பலன் சொல்லுவது, எழுதுவது எப்படி? ... 76
10. ஜாதக முழுப் பலன் - ஒரு எடுத்துக்காட்டு ... 82

# தாள் – 2 சோதிடக் கூறுகள்

## அலகு 1 –திருமணப் பொருத்தம்

## பாடம் 1 – திருமணப் பொருத்தம்

இரு மனம் ஒரு மனமானால் திருமணம் நிகழும். திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது நம்மவர்கள் கருத்து. மேலை நாட்டு யாத்திரிகர் மார்க்கோபோலோ இந்தியாவிற்கு வந்து பல இடங்களைச் சுற்றிப்பார்த்தபின், தன் குறிப்பில் எழுதியது: ஒன்று இந்தியர்கள் எப்போதும் ஆடுகள் தழையைத் தின்பதுபோல ஏதோ ஓர் இலையைத் (வெற்றிலை) தின்றவண்ணம் இருக்கின்றார்கள். இரண்டாவது, இரு வெள்ளைத்தாட்களில் ஏதோ எழுதி, ஆண்– பெண் இருவரையும் நேரில் பார்க்காமல் பொருத்தம் பார்த்து திருமணம் செய்விக்கிறார்கள். இந்த இரண்டு கருத்துக்களையும் பார்க்கும் போது நம்மவர்களின் விஞ்ஞான அறிவு மற்றும் மருத்துவ ஆரோக்கிய அறிவு குறித்து அவர்கள் அறிந்திருக்க வில்லை எனத் தெரிகிறது. இரண்டு தாட்கள் என்று அவர் சொன்னது ஆண், பெண் இருவருடைய ஜாதகங்களே. இந்த விஷயத்தை இத்தோடு விடுத்து, பொருத்தம் பார்க்கும் விஷயத்தை இங்குக் காண்போம்.

நம்மவர்களுக்கும் 10 ஆம் எண்ணிற்கும் நிறைய தொடர்பு உண்டு. தசாவதாரம், தசமுகன் என்று பார்த்தது போல், ஓர் ஆணிற்கும் ஒரு பெண்ணிற்கும் திருமணம் செய்வதற்கான பொருத்தங்களிலும் பத்து வகைப் (தசவிதம்) பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன.

### 1.1. பத்துப் பொருத்தங்கள்

தசவிதப் பொருத்தம் என்பது ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் திருமணம் செய்வதற்காக, பத்துப் பொருத்தங்கள் பார்ப்பதாகும். அவை:

1. நட்சத்திரப் பொருத்தம் (தினப் பொருத்தம்).
2. கணப் பொருத்தம்.
3. மாகேந்திரப் பொருத்தம்.
4. ஸ்திரி தீர்க்கப் பொருத்தம்.
5. யோனிப் பொருத்தம்.
6. இராசிப் பொருத்தம்.
7. இராசியாதிபதிப் பொருத்தம்.
8. வசியப் பொருத்தம்.
9. ரஜ்ஜுப் பொருத்தம்.
10. நாடிப் பொருத்தம்.

**பிறபொருத்தங்கள்**

மேற்கண்ட 10 பொருத்தங்கள் மட்டுமின்றி, 1. பாதப் பொருத்தம், 2. செவ்வாய் தோஷம், 3. ஐம்பொருத்தம், 4. ஐந்ததிபதிப் பொருத்தம், 5. தெசாபுக்தி விவரம், 6. தெசாபுக்தி பலன்கள் ஆகியவை கண்டு, பின் முடிவைச் சொல்ல வேண்டும்.

**1. நட்சத்திரப் பொருத்தம்**

முதலில் நட்சத்திரம் பொருந்தினாலே மற்றவை பொருந்தி விடும். முதலில் பெண் நட்சத்திரம் எதுவென்று அறிந்தபின், அந்த நட்சத்திரத்திலிருந்து ஆண் நட்சத்திரம் எத்தனையாவது நட்சத்திரம் என அறியவேண்டும். அவ்விதம் பார்க்கையில் பெண் நட்சத்திரத்திலிருந்து ஆண் நட்சத்திரம் இரட்டைப் படையாக வந்தால், அதாவது பெண் நட்சத்திரத்திற்கு ஆண் நட்சத்திரம், 2 ஆவது, 4 ஆவது, 6 ஆவது, 8 ஆவது நட்சத்திரமானால், (2, 4, 6, 8) பொருத்தம் உண்டு.

9 ஆம் எண் வந்தால் மற்றப் பொருத்தங்களைப் பார்த்தே சொல்ல வேண்டும். பெண் நட்சத்திரம் முதல் 2, 11, 20, 4, 13, 22, 6, 15, 24, 8, 17, 26 ஆகிய விரிவு எண்களும் பொருந்தும். 22 ஆம் எண் யோசித்துச் செய்ய வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அசுபதிக்குத் திருவோணம், பரணிக்கு அவிட்டம், கார்த்திகைக்குச் சதயம் என்று எண்ணிப்பார்த்தால் 22 ஆவது நட்சத்திரமாக வரும். இதைத் தவிர்ப்பது நல்லது.

பெண் நட்சத்திரத்திற்கு 1, 3, 5, 7 ஆகிய நட்சத்திரங்கள் சேராது. அதன் விரிவு 1, 10, 19, 3, 12, 21, 5, 14, 23, 7, 16, 25 நட்சத்திரங்கள் சேராது. ஆனால், 7 மற்றும் 25 ஆம் எண் மகேந்திரப் பொருத்தத்தைக் காட்டுவதால் சில இடங்களில் சேரும்.

சுருங்கச் சொன்னால் பெண் நட்சத்திரமும், ஆண் நட்சத்திரமும் இரட்டைப் படையானால் (2, 4, 6, 8) சேரும். ஒற்றைப் படையானால் (1, 3, 5) சேராது. இந்த முதல் படியில் 9 ஆம் எண் (9, 18, 27) ஆகிய நட்சத்திரங்களைச் சிறப்புப் பார்வை கொண்டு பார்க்க வேண்டும். பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் 9 இல் வந்தால் சேரும் என்று அவசரப்பட்டுவிடக் கூடாது. கேட்டைக்கு உத்திரட்டாதி 9 ஆம் எண். ஆனால் பெரும்பாலான கேட்டை-உத்திரட்டாதி தம்பதிகள் சுகமாய் இருப்பதில்லை.

**2. கணப்பொருத்தம்ெ**

கணங்கள் மூவகைப்படும். 1. மனித கணம், 2. தேவ கணம், 3. ராட்சஸ கணம். சிலர் தேவ, மனித, ராட்சஸ கணம் என்று சிறப்புக் கருதி சொல்லுவர். எல்லாம் ஒன்றுதான்.

பில்லி, சூனியம், ஏவல் போன்றவை தேவ கணத்தைச் சேர்ந்தவரையும், ராட்சஸ கணத்தைச் சேர்ந்தவரையும் பாதிக்காது என்றும், மனித கணத்தைப் பாதிக்கும் என்பார் உளர். ஆனால், அது தவறானது.

தேவ கணத்தினர் பிறரை ஏமாற்றுபவர்கள், பிரச்சினைகளைக் கண்டு பிறரிடம் ஒப்படைத்து விடுவர்.

ராட்சஸ கணத்தினர் போராட்டங்களை எதிர் கொள்வர். விரோதிகளை எதிர்த்து நேரிலேயே போராடுவர். சொல்லிக் காட்டுவர்.

மானுட கணத்தவர் பயம், மறைந்து இருந்து பார்த்தல் போன்ற குணமுடையவர்.

அதன்படி மானுட கணத்தவர் அமைதி (சாத்வீக) குணமுள்ளவர். ராட்சஸ கணத்தவர் சோம்பல் (தாமச) குணமுள்ளவர். தேவ கணத்தவர் அரச (ராஜஸ) குணமுள்ளவர் என்று கொள்ள வேண்டும்.

தேவ கணத்தையும் மனித கணத்தையும் சேர்க்கலாம்.

தேவ கணத்தையும் ராட்சஸ கணத்தையும் சேர்க்கலாம்.

ராட்சஸ கணத்தையும் ராட்சஸ கணத்தையும் சேர்க்கலாம்.

மனித கணத்தையும் மனித கணத்தையும் சேர்க்கலாம்.

மனித கணம் – ராட்சஸ கணம் சேர்க்கக் கூடாது. (இருபாலருக்கும்)

தேவ கணம் நட்சத்திரங்கள் : அசுபதி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், ரேவதி ஆகியவை.

ராட்சஸ கணம் நட்சத்திரங்கள் : கார்த்திகை, மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், ஆயில்யம் ஆகியவை.

மானுட கணம் நட்சத்திரங்கள் : பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகியவை.

27 நட்சத்திரங்களை ஒன்பது ஒன்பதாகப் பிரித்திருக்கின்றனர்.

தேவ கணக்காரர்கள் சிரித்தப்படி காரியத்தைச் சாதிப்பர். ராட்சஸ கணக்காரர்கள் சண்டையிட்டு போராடி வாங்குவர். மனித கணக்காரர்கள் தோல்வி கண்டு, மேற்கண்ட இருகணத்தவர் உதவியுடன் காரியம் சாதிப்பர். ( இவற்றையெல்லாம் மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. கொஞ்ச நாள் பஞ்சாங்கத்தை வைத்துப் பொருத்தம் பார்க்கப் பழகினால் தானாக மனப்பாடமாகும்.)

ராட்சஸ கணக்காரரை மனித கணக்காரர் மணந்தால் மனித கணக்காரர் துன்புறுவார். தேவ கணக்காரரை ராட்சஸ கணக்காரர் மணந்தால் ராட்சஸ கணக்காரர் துன்புறுவர்.

தேவ – தேவ கணம், ராட்சஸ – ராட்சஸ கணம், மானுட – மானுட கணக்காரர் என்று திருமணமானால் மிக உத்தம வாழ்வு உண்டு. மகிழ்வு, புத்திர இலாபம் உண்டு.

1, 3, 5, 7 என்று பெண் – ஆண் நட்சத்திரங்கள் வேற்று சாதி, மத திருமணம் செய்யக்கூடிய புத்திரர்களைப் பெற வைக்கும். 1 மற்றும் 3 ஆம் நட்சத்திரம் அவர்களின் குழந்தைகளுக்குப் பிற மத மணத்தை ஏற்படுத்தும். 5 மற்றும் ஏழாவது நட்சத்திரம் (பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரை கண்டது) பெண் குழந்தைகள் நிறையப் பிறக்கும். பணமுடை உண்டாகும்.

மற்றொரு விஷயம். பஞ்சாங்கத்தின் முதல், கடைசி 5 பக்கங்களை ஓய்வு நேரங்களில் பார்வையிட்டு வந்தாலே கைதேர்ந்த சோதிடராகலாம்.

### 3. மாகேந்திரப் பொருத்தம்

இப்பொருத்தம் புத்திர சந்தான விருத்திக்கு உகந்தது. பெண் ஜென்ம நட்சத்திரம் முதல் ஆண் ஜென்மநட்சத்திரம் நான்கின் (4) அடுக்கில் அமைந்தால், சத் புத்திர இலாபம் உண்டு. எடுத்துக்காட்டு: பெண்: அசுபதி, ஆண்: ஆயில்யம். பெண்: அசுபதி, ஆண்: புனர்பூசம்.

அதாவது பெண் ஜென்ம நட்சத்திரம் முதல் ஆண் ஜென்ம நட்சத்திரம் 4 ( 4, 5, 6, 7), 7 (7, 8, 9, 10), 10 என்ற வரிசையில் 4, 7, 10, 13, 16, 19, 22, 25) ஆகிய நட்சத்திரமானால் குழந்தை பாக்கியம் உண்டு. இங்கு ஒன்று கவனிக்க வேண்டும். நட்சத்திரப் பொருத்தத்தில் பார்க்கும் போது 1 மற்றும் 7 ஆம் எண் ஒதுக்கப்பட்டது. இங்கோ 1 இன் அடுக்கம் 10, 19 ஏற்கப்படுகிறது. அதேபோல் ஸ்திரி தீர்க்கமும் 7 ஆம்

நட்சத்திரத்திற்கு மேல் உள்ளதை ஏற்கிறது. இதிலிருந்து நட்சத்திரப் பொருத்தம் 1 அல்லது 7 இன் அடுக்கத்தில் (1, 10, 19, 7, 16, 25) சுமாராய் சேரும்போது ஸ்திரி மாகேந்திரம் தீர்க்கப் பொருத்தங்கள் சேருகிறது என்று தெரிகிறது.

எனவே, சுருக்கமாய் பெண் நட்சத்திரத்திலிருந்து ஆண் நட்சத்திரம் 3 அல்லது 5 என்று இருந்தால் மட்டுமே சேராது என்றும், 3, 5 நட்சத்திரங்களைச் சேர்க்க வேண்டாம் என்றும் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, அசுபதிக்குக் கார்த்திகை, மிருகசீரிடம், பரணிக்கு ரோகிணி, திருவாதிரை என்று கொள்ள வேண்டும். அதேபோல் அசுபதிக்குக் கார்த்திகை, உத்திரம், உத்திராடம் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் சேராது என்றும் பரணிக்கு ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், திருவாதிரை, சுவாதி, சதயம் சேராது என்றும் கொள்ள வேண்டும். பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் 3, 5 ஐத் தவிர எல்லாம் சேரும் என்று உணர்ந்தால் முதல் நான்கு பொருத்தங்களை வெற்றிகரமாகப் பார்க்கலாம்.

### 4. ஸ்திரி தீர்க்கம்

பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் 7 அல்லது 13 நட்சத்திரங்கள் தாண்டிவந்தால் தீர்க்க சுமங்களியாய் இருப்பர். அதாவது அசுபதிக்குப் பூசம் முதல் வரும் நட்சத்திரங்களோ அல்லது உத்திரம் வரை உள்ள நட்சத்திரங்களோ சேரும். (பூசம், ஆயில்யம், மகம் என்றும், உத்திரம், ஹஸ்தம், சித்திரை என்றும் பார்க்கலாம். அதில் யோனிப் பொருத்தம் வராததைத் தவிர்க்கவேண்டும்.

### 5. யோனிப் பொருத்தம்

யோனி என்றால் பிறப்பு என்று பொருள். ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு மிருக குணம் உண்டு. பூனைக்கு எலி வாடை பிடிக்காது. புலிக்குப் பசு வாடை பிடிக்காது என்பது போல் மனிதருள்ளும் உள்ள மிருக பலத்தை எடுத்து இயம்புவது யோனிப் பொருத்தம்.

மனித குணங்களை 14 மிருகங்களுடன் இணைத்து சோதிட சாஸ்திரம் பலன் கூறுகிறது. அவை. 1. குதிரை, 2. யானை, 3. ஆடு, 4. பாம்பு, 5. நாய், 6. பூனை, 7. எலி, 8. பசு, 9. எருமை, 10. புலி, 11. மான், 12. குரங்கு, 13. கீரி, 14. சிங்கம் என்பனவாகும். இதில் வனவிலங்கு வீட்டு விலங்கு என்பதுவாய் அமைந்துள்ளது கவனிக்க வேண்டும். குதிரைக்கு குதிரை (அசுபதி–சதயம்). யானைக்கு யானை (பரணி–ரேவதி) இப்படிச் சேர்ப்பது நல்லது. குதிரைக்கு எருமை பகை. அதனால் அசுபதி, சுவாதி, ஹஸ்தம் சேராது. இப்படியே வன விலங்கு வீட்டு விலங்கு என்று பாராமல், சேரும் சேராது என்ற மிருகப் பொருத்தம் பார்ப்பது நல்லது.

பகை மிருகங்கள் உள்ள நட்சத்திரத்தைச் சேர்ப்பதால் விவாகரத்து, கருத்து வேறுபாடுகள், புத்திர பாக்கியமின்மை உண்டாகும். இப்பொருத்தம் இன்றியமையாதது.

1. அசுபதி – சதயம் : குதிரை யோனி (வீட்டு விலங்கு)
2. பரணி – ரேவதி : யானை யோனி (காட்டு விலங்கு)
3. கார்த்திகை – பூசம் : ஆடு யோனி (வீட்டு விலங்கு)
4. ரோகிணி – மிருகசீரிடம் : பாம்பு யோனி (வன விலங்கு)
5. திருவாதிரை – மூலம் : நாய் யோனி (வீட்டு விலங்கு)
6. புனர்பூசம் – ஆயில்யம் : பூனை யோனி (வீட்டு விலங்கு)

8. உத்திரம் – உத்திரட்டாதி : பசு யோனி (வீட்டு விலங்கு)

9. ஹஸ்தம் – சுவாதி : எருமை யோனி ( வீட்டு விலங்கு)

10. சித்திரை – விசாகம் : புலி யோனி ( காட்டு விலங்கு)

11. அனுஷம் – கேட்டை : மான் யோனி ( வன விலங்கு)

12. பூராடம் – திருவோணம் : குரங்கு யோனி ( வன விலங்கு)

13. உத்திராடம் : கீரி யோனி (வன விலங்கு)

14. அவிட்டம் – பூரட்டாதி : சிங்கம் யோனி (வன விலங்கு)

மேற்கண்ட நட்சத்திரங்களை ஒன்றுக்கொன்று அப்படியே சேர்க்கலாம். ஆனால்,

1. குதிரை, எருமை ஒன்றுக்கொன்று விரோதம் என்பதால், ஆண் பெண் யாராக இருந்தாலும். அசுபதி, சதயத்தோடு சுவாதி, ஹஸ்தத்தைச் சேர்க்கக் கூடாது.

2. யானை, சிங்கம் ஒன்றுக்கொன்று விரோதம் என்பதால், பரணி, ரேவதியைப் பூரட்டாதி, அவிட்டத்துடன் சேர்க்கக்கூடாது. அதாவது பரணி/அவிட்டம் பூரட்டாதி, ரேவதி/ அவிட்டம் பூரட்டாதி, இப்படியே எல்லா கிரகங்களுக்கும் சேர்க்கலாம். ஆனால், அவிட்டம், பூரட்டாதி சிம்ம இராசியுடன் சேர்க்கலாம்.

3. கார்த்திகை, பூசம் (ஆடு–குரங்கு) திருவோணம், பூராடம் சேராது. சஷ்டாஷ்டகம் வேறு.

4. ரோகிணி, மிருகசீரிஷம் முதலியவற்றுக்கு (பாம்பு), கீரியான உத்திராடமும், எலியான மகம், பூரமும் சேராது.

5. நாய் யோனிகளான திருவாதிரை, மூலத்திற்கு அனுஷம், கேட்டை சேராது. (சஷ்டாஷ்டக தோஷம்)

6. புனர்பூசம், ஆயில்யத்திற்கு (பூனைக்கு) திருவாதிரை, மூலம், மகம், பூரம் சேராது.

7. மகம், பூரத்துக்கு மிருகசீரிஷம், ரோகிணி, ஆயில்யம், புனர்பூசம் சேராது.(பாம்பு–எலி–பூனை)

8. உத்திரம், உத்திரட்டாதிக்கு (பசு) விசாகம், சித்திரை (புலி) சேராது.

மேற்கண்டவற்றைப் பார்த்துப் பழகினாலே எல்லாவற்றுக்கும் சுத்தமாகப் பொருத்தம் பார்க்க இயலும்.

### 6. இராசிப் பொருத்தம்

பெண் ஜென்ம இராசிக்கு ஆண் ஜென்ம இராசி 1 , 7 , 9 , 10 , 11 ஆகிய இராசிகளாய் அமைந்தால் சேரும். எடுத்துக்காட்டாக, பெண் மேஷ இராசியானால் ஆண் மேஷம், துலாம், தனுசு, மகரம், கும்பம். இராசியானால் சேரும். பெண் இராசிக்கு ஆண் இராசி 2 , 5 , 6 , 8 ஆவது இராசியானால் சேராது. 6–8 ஆம் வீடுகள் சஷ்டாங்கம் (சஷ்ட்– 6, அட்டாங்கம்–8 : சஷ்ட்டாங்கம்) ஆனால் சேராது.

மேஷ இராசிக்கு எட்டாவது இராசி விருச்சிகம். மேஷம், விருச்சிகம் இரண்டுமே செவ்வாய் வீடுகள் என்பதால் சஷ்ட்டாங்க தோஷம் இல்லை. அதே போல், துலாம் இராசிக்கு எட்டாவது இராசி ரிஷபம் (துலாம்–ரிஷபம்) இரண்டுமே சுக்கிரன் வீடு என்பதால் சஷ்ட்டாங்க தோஷம் இல்லை.

அதே போல் விருச்சிகத்துககு ஆறாவது இராசி மேஷம். ரிஷபத்துக்கு ஆறாவது இராசி துலாம். எனவே சஷ்டாஷ்டகம் தோஷம் இல்லை. இரண்டுமே செவ்வாய் – சுக்கிரன் வீடு என்பதால் தோஷம் இல்லை.

பொதுவாக நடைமுறையில் பார்த்ததில், கேந்திர வீடுகளான மிதுனம் – கன்னி இராசியில் பெண்–ஆண் ஜாதகம் அமைந்தால் (எடுத்துக்காட்டாக, பெண் மிருகசீரிடம், ஆண் ஹஸ்தம் நட்சத்திரம் என்றால்) மணவாழ்வு சுகமாய் இருப்பதில்லை. மாறாக, பிரிவு உண்டாகி விடுகிறது. அதிக அழுத்த வசியம் இதற்குக் காரணம். அதே போல் தனுசு – மீன இராசியில் பெண்–ஆண் பொருத்தம் அமைந்தால் வருமானம் குறைந்து வறுமையில் வாட நேருகிறது.

**சஷ்டாஷ்டகம் (6, 8 வீடுகள்)**

அனுகூல சஷ்டாஷ்டகம்/ பிரதிகூல சஷ்டாஷ்டகம் என்று இருவகை இருப்பதாகக் கூறுவர். அப்படியெல்லாம் எதுவும் கிடையாது. பெண் ஜாதகமும் ஆண் ஜாதகமும் சஷ்டாஷ்டகம் பெற்றிருந்து இருவருக்கும் பிடித்திருந்தால் ஆறுதலுக்குக் கூறும் வார்த்தையே இதுவாகும். இதை நம்பக் கூடாது.

பெண் இராசிக்கு ஆறு அல்லது எட்டாம் வீடாக ஆண் இராசி இருந்தால் சஷ்டாஷ்டகமே.

எடுத்துக்காட்டு: பெண் இராசி: தனுசு– ஆண் இராசி கடகம். இது ஒரு வகை சஷ்டாஷ்டகம். ஆறு எட்டு மறைவு ஸ்தானம் என்பதால் இந்தத் தோஷமுள்ளது. இப்படி அமையும் ஜாதகம் பிரிவினையை உண்டாக்கும். எப்படி? பெண்ணுக்குக் காப்பி பிடிக்கும். ஆண் வரனுக்குக் காப்பி பிடிக்காது. பெண்ணுக்குக் குளிர் சாதன வசதி ஒத்துக்கொள்ளும். ஆண் வரனுக்குக் குளிர் சாதன வசதி ஒத்துக்காது. இப்படித்தான் பிரிவு வரும்.

சுருங்கச் சொன்னால், ஏக இராசி (1, 3, 5) ஆகிய வீடுகளைத் தவிர்த்தாலே, அதாவது பெண் இராசியிலிருந்து பையன் ஜாதகம் 1, 3, 5 ஆம் வீடுகளைத் தவிர்த்தாலே சரியாக அமைந்துவிடும்.

**7. இராசி அதிபதிப் பொருத்தம்**

பெண் இராசிநாதனுக்கு ஆண் இராசிநாதனும் ஒருவராய் இருந்தால், அதாவது பெண் தனுசு இராசி, பையன் மீன இராசி (இருவருக்கும் குரு) இராசியாதிபதி என்றாலும், பெண் தனுசு இராசி, பையன் மேஷ இராசி (குரு–செவ்வாய்) நட்பு என்றாலும் ஜாதகம் சேரும். குருவுக்கு விரோதமான சுக்கிரன் இராசியான ரிஷபம், துலாம், புதன் இராசிகளான மிதுனம், கன்னியுடன் சேராது. இதைப் பஞ்சாங்கத்தின் கடைசிப் பட்டியலில் உச்சம், நீச்சம் பக்கத்தில் காணலாம். இரு இராசி அதிபதிகளும் ஆட்சி, உச்சமானால் நன்றாய் சேரும்.

கடக இராசிப் பெண்களுக்குத் துலாம், ரிஷபம், மகரம், கும்பம் இராசி சேராது. சிம்ம இராசிக்கும் (அதாவது சூரியன்–சந்திரருக்கு சுக்கிரன்–சனி) விரோதி. மேற்கண்டது பொருந்தும்.

செவ்வாய்க்குப் புதன் விரோதம் என்பதால், பெண் மேஷம் அல்லது விருச்சிகமாக இருந்து பையன் மிதுனம், கன்னி இராசியாக இருந்தால் சேராது.

சுக்கிரனுக்குச் சூரியன், குரு ஆகாது என்பதால், துலாம், ரிஷபம் இராசிக்குச் சிம்மம், தனுசு, மீனம் இராசி சேராது. (இவையாவும் பழக்கத்தில் வரும்.)

மேஷம், விருச்சிகம் இராசிப் பெண்களுக்கு மிதுனம், கன்னி இராசி சேராது. ரிஷபம், துலாம் இராசிப் பெண்களுக்குக் கடகம், சிம்மம் இராசி சேராது. மிதுனம், கன்னி இராசிப் பெண்களுக்குக் கடகம் இராசி சேராது. கடக இராசிப் பெண்களுக்கு – ரிஷபம், துலாம், மகரம், கும்பம் இராசி ஆகாது. தனுசு, மீனம் இராசிக்கு ரிஷபம், மிதுனம். கன்னி, துலாம் சேராது. மகரம், கும்பம் இராசிப் பெண்களுக்குச் சிம்மம், கடகம், விருசசிகம், மேஷம் சேராது.

இதனை மனப்பாடம் செய்தாலே மீதி அமைந்துவிடும்.

**8. வசியப் பொருத்தம்**

மேற்கண்ட அதிபதிப் பொருத்தம் போன்றதே இதுவும். மேஷம் இராசிக்கு சிம்மம், விருச்சிகம் கும்பம் இராசிகள் நன்கு வசியமாகும். ரிஷபம் இராசிக்குக் கடகம், துலாம் இரண்டும் வசிய இராசிகளாகும். மிதுனம் இராசிக்குக் கன்னி, மீனம் ஒன்றுக்கொன்று சேரும்.

சிம்மம் இராசிக்குத் துலாம் மட்டும் சேரும்.

துலாம் இராசிக்கு மகரமும், விருச்சிகம் இராசிக்குக் கடகமும், தனுசு இராசிக்கு மீனமும், மகரம் இராசிக்கு மேஷம், கும்பமும், கும்பம் இராசிக்கு மேஷமும், மீனம் இராசிக்கு மகரமும் சேரும்.

இதில் ஏக இராசி வசியம், த்வி (இரு) இராசிகள் வசியம் உண்டு.

**ஏக இராசி வசியம்**

1. மிதுனத்துக்கு – கன்னி
2. சிம்மத்துக்கு – துலாம்
3 துலாத்துக்கு – மகரம்
4. விருச்சிகத்துக்கு – கடகம் (நீர் இராசி)
5. தனுசுக்கு – மீனம்
6. கும்பத்துக்கு – மேஷம்
7. மீனத்துக்கு – மகரம்

இந்த ஏழு இராசிகளும் ஏக இராசி வசியம். பரஸ்பரம் வசியமாகும். பரஸ்பரம் என்பது ஒன்றுக் கொன்று என்று பொருள். அதாவது மிதுனம் இராசிப் பெண்ணை கன்னி இராசிக்காரர்களும் (ஆண்களும்) பெண் சிம்மம் இராசி ஆண் துலாம் இராசியும் தாராளமாய்த் திருமணம் செய்து கொள்ளலாம் என்று மேற்கண்ட 7 இராசிகளுக்குச் சொல்லலாம்.

இதில் மிதுனம், கன்னி, மீனம், தனுசு, மீனம், மிதுனம், கன்னி, தனுசு என ஆண் பெண் இராசி அமையும்போது கவனமுடன் செய்வது நல்லது. மீனம் –தனுசு இராசி, மிதுனம் – கன்னி இராசிச் சேர்க்கை திருப்திகரமாய் இருக்காது. அதே போல் மீனம், மிதுனம் பெண் இராசி, தனுசு, கன்னி ஆண் இராசி என்றாலும் யோசித்துச் செய்ய வேண்டும்.

**துவி இராசி வசியம்**

ஓர் இராசிக்கு (பெண் இராசிக்கு) இரண்டு ஆண் இராசிகள் வசியமாவது துவி இராசி வசியமாகும். அதன்படி மேஷம் பெண் இராசி என்றும், சிம்மம் விருச்சிகம் ஆண் இராசி என்றும் வந்தாலும் சேரும். பெண் இராசி ரிஷபம், ஆண் இராசி கடகம்–துலாம் ஆண் இராசி என்றாலும் சேரும். பெண் இராசி கடகம், ஆண் இராசி விருச்சிகம் தனுசு சேரும்.

பெண் இராசி கன்னி, ஆண் இராசி மிதுனம் மீனம் சேரும்.

பெண் இராசி மகரம், ஆண் இராசி மேஷம் கும்பம் சேரும்.

இப்படி அமைப்புடையோர் இல்லற சுகங்களில் ஈடுபட்டு முழுமகிழ்வு காண்பர்.

மேஷம் இராசிப் பெண்களுக்கு மிதுனம், கன்னி இராசி சேர்க்கக்கூடாது. விருச்சிகம் இராசிப் பெண்களுக்குக் கன்னி-மிதுனம் இராசி ஆகாது. ரிஷபம் இராசிப் பெண்களுக்கும் சேராது.

## 9. ரஜ்ஜுப் பொருத்தம்

பெரும்பாலும் வசியப் பொருத்தம் இருந்தாலே மண வாழ்வு சிறக்கும். அடுத்தது ரஜ்ஜுப் பொருத்தம் ரஜ்ஜு என்றால் உடலுறுப்பு என்று பொருள். இது கொஞ்சம் அந்தரங்கமான விஷயம் பற்றியது. கணவன் மனைவி தாம்பத்திய உறவைப் பற்றிக் கூறுவது. கணவன் அல்லது மனைவியின் கை படும்போது கணவருக்கோ மனைவிக்கோ குறிப்பிட்ட உறுப்பில் கூச்சம், முழு இன்ப நாட்டம் உண்டாகும். அதாவது சென்ஸ்டிவ் பாயிண்ட். சிலருக்குத் தலையில் பரிசம் பட்டால் உணர்வு அதிகரிக்கும். எந்தெந்த நட்சத்திரங்களுக்கு எந்தெந்த பாகம் சென்ஸ்டிவ் பாயிண்ட் என்று சொல்வதே ரஜ்ஜு.

உறுப்புகள் ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை: 1. பாதம், 2. தொடை, 3. தொப்புள், 4. கழுத்து, 5. தலை (சிரசு).

இந்த ஐந்தும் ஆரோகணம், அவரோகணம் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஆரோகணம் என்றால், ஏறு வரிசை (ஏறு முகம்) என்று பொருள். அவரோகணம் என்றால், இறங்கு வரிசை (இறங்கு முகம்) என்று பொருள்.

### ரஜ்ஜுவும் நட்சத்திரங்களும்

1. அசுபதி , மகம், மூலம் இம்மூன்றும் பாத ரஜ்ஜு. இவர்கள் காலை அதாவது பாதத்தைத் தொட்டால் கூச்சம் பெறுவர். இம்மூன்று நட்சத்திரக்காரர்களின் கணவர்/மனைவி பாதத்தைத் தடவினால் முழு தாம்பத்திய உறவு உண்டாகும். இவர்கள் கணவர்/மனைவி விஷய சுக நிகழ்வின்போது கீழிருந்து மேலேறுவர். அதனால்தான் இவை ஆரோகண ரஜ்ஜு நட்சத்திரங்கள் ஆகும்.

2. ஆயில்யம், கேட்டை, ரேவதி நட்சத்திரக்காரர்களும் பாத ரஜ்ஜு என்பதால், அவர்களது காலை வருடினால் உணர்ச்சி வசப்படுவர். இவர்கள் விஷய சுகம் (தாம்பத்திய கலவி) இன்புறும்போது மேலிருந்து கீழிறங்குவர். மனைவி/கணவரின் தலை, கழுத்து, மார்பு என்று முத்தமிட்டபடி இறங்குவர். எனவே, இவர்கள் அவரோகண ரஜ்ஜுவினர்.

3. பரணி, பூரம், பூராடம் நட்சத்திரக்காரர்கள் தொடையை வருடினால் இன்புறுவர். இவர்கள் உறவின் போது பாதம், தொடை, கழுத்து என்று முத்தமிட்டபடி இன்புறுவர். இவர்கள் ஆரோகணத்தினர்.

4. பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களும் தொடை ரஜ்ஜுவினர். இவர்கள் மனைவி/கணவரிடம் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறவே கலவியில் ஈடுபடுவர். இவர்கள் உடலின் மேலிருந்து கீழிறங்கி இன்பம் நுகர்வர். இவர்கள் அவரோகணத்தினர்.

5. கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரக்காரர்கள் தொப்புள் ரஜ்ஜு உடையவர்கள். இவர்கள் ஆரோகண ரஜ்ஜுவினர். பெரும்பாலும் துக்கத்துடன் தாம்பத்திய இன்பம் துய்ப்பர்.

6. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள் தொப்புள் ரஜ்ஜுவினர். இவர்கள அவரோகண ரஜ்ஜுவினர். கணவர்/மனைவியைத் தாம்பத்தியத்தின் போது ஆளுமையுடன் நடத்துவர்.

7. ரோகிணி, ஹஸ்தம், திருவோணத்தினர் கழுத்து ரஜ்ஜு மற்றும் ஆரோகணத்தினர்.

8. திருவாதிரை, சுவாதி, சதயத்தினர் அவரோகணம் மற்றும் கழுத்து ரஜ்ஜு குணமுள்ளவர்.

9. மிருகசீரிஷம். சித்திரை, அவிட்டம் நட்சத்திரக்காரர்கள் தலை ரஜ்ஜுவினர் இவர்களுக்கு ஆரோகணம் அவரோகணம் கிடையாது.

ஒரே ரஜ்ஜுவினர் திருமணம் செய்தால் தொல்லைகள் உண்டு. அடுத்தடுத்த ரஜ்ஜுவானால் (அதாவது தலை, கழுத்து) சுகம் உண்டு. அதாவது அசுபதி நட்சத்திரப் பெண் மகம் நட்சத்திர ஆணைத் திருமணம் செய்தால் ரஜ்ஜு தட்டும் என்பர். ஒரே ரஜ்ஜு சகோதர உணர்வையே தரும். அதே அசுபதி நட்சத்திரப் பெண் பாத ரஜ்ஜுவான கேட்டை நட்சத்திரக்காரரைத் திருமணம் செய்தால் சந்தோசம் பெறுவார். அதாவது ஆரோகண ரஜ்ஜு அதிக சுகம் தரும்.

அதாவது பரணி நட்சத்திரக்காரர் பூரம் நட்சத்திரக்காரரை மணந்தால் தொல்லை. ஆனால் உத்திரட்டாதி நட்சத்திரக்காரரை மணந்தால், அதே தொடை ரஜ்ஜு அவரோகணமானதால் அதிக சுகம் தரும். இப்படியே எல்லாவற்றுக்கும் பார்க்கலாம். வெவ்வேறு ரஜ்ஜுவாக இருப்பதே சிறப்பு.

## 10. வேதை மற்றும் நாடிப்பொருத்தங்கள்

வேதை மற்றும் நாடிப்பொருத்தங்கள் தற்காலத்தில் அதிகம் பார்ப்பதில்லை. முதல் ஒன்பது பொருத்தங்கள் நன்கு அமைந்தாலே போதுமானது. வேதை என்பது சஷ்டாஷ்டக தோசமும், ரஜ்ஜு தட்டும் நிலையிலும் உள்ள நட்சத்திரங்களாகும்.

1. அசுபதி – கேட்டை வேதை பெறும். (மேஷம்–விருச்சிகம் 8 ஆவது இராசி + அசுவதி, கேட்டை பாத ரஜ்ஜு.
2. பரணி – அனுஷம் தொடை வேதை ( மேஷம் – விருச்சிகம்) 8 ஆவது இராசி. தொடை ரஜ்ஜு.
3. கார்த்திகை – விசாகம் வேதை (ரிஷபம், துலாம்) 6 ஆவது இராசி + தொப்புள் ரஜ்ஜு.
4. ரோகிணி– சுவாதி (ரிஷபம், துலாம்) 8 ஆவது இராசி, கழுத்து ரஜ்ஜு.
5. மிருகசீரிடம் – சித்திரை–அவிட்டம் தோசம் இல்லை.
6. திருவாதிரை–திருவோணம் (மிதுனம், மகரம்) 8 ஆவது இராசி கழுத்து ரஜ்ஜு.
7. புனர்பூசம்–உத்திராடம் (கடகம்–தனுசு இராசி) 6 ஆவது இராசி + தொப்புள் ரஜ்ஜு.
8. பூசம் –பூராடம் உத்திராடம் (கடகம், தனுசு இராசி) 6 ஆவது இராசி. தொடை ரஜ்ஜு மற்றும் யோனி பொருத்தம் இல்லை.
9. ஆயில்யம் – மூலம் பாத ரஜ்ஜு 6 ஆவது இராசி. யோனி பகை.
10. மகம் – ரேவதி 8 ஆவது இராசி, பாத ரஜ்ஜு சேராது.
11. பூரம் – உத்திரட்டாதி 8 ஆவது இராசி. தொடை ரஜ்ஜு. இதில் ஆரோகணம், அவரோகணம் என்பதால் சேர்க்கலாம்.
12. உத்திரம் – பூரட்டாதி ( கன்னி, கும்பம்) 6 ஆவது இராசி. தொப்புள் ரஜ்ஜு.
13. ஹஸ்தம்– சதயம் ( கன்னி, கும்பம்) 6 ஆவது இராசி. கழுத்து ரஜ்ஜு.

மேற்கண்ட 13 நட்சத்திரங்களும் சேர்க்கக் கூடாது.

நாடிப்பொருத்தம் அவசியமாகக் கருதப்படவில்லை.

இதுவரை 10 விதப் பொருத்தம் பார்த்தோம். இதற்கு மேல் 6 வகையானப் பொருத்தங்களைப் பார்த்து முழுமையாகப் பலன் சொல்லலாம்.

**11. பாதப் பொருத்தம்**

பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரை பாதங்கள் கணக்குப் பார்க்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அசுபதி 3 ஆம் பாதம் பெற்ற பெண் திருவாதிரை 2 ஆம் பாதம் பெற்ற பையனைக் கல்யாணம் செய்தால் பாதப் பொருத்தம். அசுபதி 3 ஆம் பாதம் கழித்து அசுபதி (4 ஆம் பாதம்) (1) + பரணி நான்கு பாதங்கள் (4) + கார்த்திகை நான்கு பாதங்கள் (4) + ரோகிணி நான்கு பாதங்கள் (4) + மிருக சீரிசம் நான்கு பாதங்கள் (4) + திருவாதிரை-1,2 (2 பாதங்கள்) என்று பார்த்து 19 ஆவது பாதம் என்று கொள்ள வேண்டும். பையன் திருவாதிரை 4 ஆம் பாதம் என்றால் 21 ஆவது பாதம் என்று கொள்ள வேண்டும்.

இப்படி இரு நட்சத்திரங்களுக்கு இடையில் 108 பாதங்களில் 88 ஆவது பாதத்தைத் தவிர அதாவது 22 ஆம் நட்சத்திரத்தைத் தவிர மற்றவை சேரும்.

**12. செவ்வாய் தோஷம்**

செவ்வாய் தோஷம், ஏழரைச் சனி, அஸ்டமச்சனி, சனித் திசை என்ற வார்த்தைகளைக் கேட்டால் பயப்படாதவர்களே கிடையாது. சனியின் வகைகளை முன்னர் பார்த்தோம். தற்போது செவ்வாய் தோஷம் என்றால் என்னவென்று பார்ப்போம்.

ஒருவர் ஜாதகத்தில் லக்னம் என்பது வாழ்வையும், இராசி என்பது தற்கால நிகழ்வு குறிப்பையும் குறிக்கும். சுக்கிரன் களத்திரகாரகன் கணவன், மனைவி நிலைப்பாடுகளைத் தெரிவிக்கும் கிரகம். இது திருமாங்கல்யத்தைப் பற்றி அதன் வலிவு, நெளிவு, சுழிவு பற்றித் தெரிவிப்பது. எனவே, ஒருவர் ஜாதகத்தில் லக்னத்தில் இருந்தும், இராசி (சந்திரன் இருக்குமிடம்) யிலிருந்தும், சுக்கிரன் உள்ள கட்டத்திலிருந்தும் செவ்வாய் எங்கே உள்ளது என்று அறிந்து, பெண், ஆண் இருவருக்கும் ஒரே மாதிரி அமைப்பு இருந்தால் திருமணம் செய்ய வேண்டும்.

மற்றொரு விஷயம்: செவ்வாய் எந்தப் பிரிவு இரத்தம் என்பதையும் தெரிவிக்கவல்லது.

செவ்வாய் ஆட்சியானால் ரியல் எஸ்டேட், இராணுவம், வெங்காயம், தக்காளி, பீட்ரூட் போன்ற பொருட்களால் ஜீவனம் அமையும். இவர்கள் வியாதியற்றவராவார்.

செவ்வாய் நீச்சமானால் குறைந்த இரத்த அழுத்த நோய் வரும். உச்சமானால் உயர் இரத்த அழுத்த நோய் வரும். செவ்வாய் புதன் வீடுகளில் இருந்தாலோ மிதுனம், கன்னியில் இருந்தாலோ புதனுடன் நீச்சமாகி இருந்தாலோ ( மீனத்தில்) கொலஸ்ட்ரால் அல்லது ஹிமோகுளோபின் குறைவு உண்டாகும்.

செவ்வாய் நீச்சமானால் சிவந்த காய்கறிகள், மண்-பூமி விலை குறையும். உச்சமானால் ரியல் எஸ்டேட், சிமெண்ட் விலை கூடும். குரு உச்ச நீச்சமாவதால் தான் தங்கம் பவுன் விலை ஏறி இறங்குகிறது. இதெல்லாம் அறியவே செவ்வாய் தோசம் பார்க்கப்படுகிறது.

**விதிவிலக்கு:**

1. செவ்வாய் உச்சமானாலோ, நீச்சமானாலோ, வர்கோத்தமமானாலோ ஜாதகருக்குச் செவ்வாய் தோசம் இல்லை எனலாம். இவை லக்கினம், இராசி, சுக்கிரனுக்கு 1, 2, 4, 7, 8, 12 வீடுகளிலிருந்தும் பார்க்க வேண்டும்.

2. செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனையானாலும் ஆட்சியானாலும் லக்கினாதிபதியானாலும் தோஷ நிவர்த்தி. மேஷம், ரிஷபம் பரிவர்த்தனை அல்லது விருச்சிகம், துலாம் பரிவர்த்தனை தோஷ நிவர்த்தி.

3. செவ்வாய் லக்னத்திலோ, லக்னம், இராசி, சுக்கிரனுக்கு 1, 2, 4, 7, 8, 12 இல் இருக்க, இதைச் சனி 3 ஆம் பார்வையால் பார்த்தாலோ, செவ்வாய் சனி பரஸ்பர பார்வை பார்த்தாலோ தோஷம் இல்லை.

4. குரு பார்த்தால் செவ்வாய் தோஷம் நிவர்த்தி ஆகாது. குரு எதைப் பார்க்கிறதோ அது மேலும் மிளிர ஆரம்பிக்கும். அதுபோல் குரு பார்க்க செவ்வாய் தோஷம் அதிகரிக்குமே தவிர குறையாது. எனவே, குரு பார்க்க செவ்வாய் தோஷம் நிவர்த்தி என்ற தவறான கருத்தை நீக்கவும்.

5. என்னதான் செவ்வாய் ஆட்சி, நீட்சி, உச்சம், வர்கோத்தமம் பெற்று தோஷம் உற்று இருந்தால் அது தங்கத் தட்டில் உள்ள விஷம் போன்றதே. அதற்குரிய பலனைக் காட்டியே தீரும். ஆண் பெண் இருபாலருக்கும் ஒரே மாதிரியான அமைப்பு இருந்தால் தான் பொருத்தமாகும்.

6. குருமங்கள யோகம் இருந்தாலும், குரு செவ்வாய் பரிவர்த்தனை ஆனாலும், குரு + செவ்வாய் + சூரியன் சேர்ந்தாலும், உச்சம், நீச்சமானாலும் தோஷம் உண்டு.

7. மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரக்காரர்களுக்கும் செவ்வாய்க்கிழமையில் பிறந்தவர் களுக்கும் செவ்வாய் தோஷம் விதிவிலக்கு.

**செவ்வாய் தோஷம் விளைவுகள்**

1. லக்னத்தில் செவ்வாய் தனித்திருந்தாலோ, செவ்வாய், சூரியன் இணைந்து ஒரு பெண் ஜாதகத்திலோ ஆண் ஜாதகத்திலோ லக்கினத்தில் இருந்தால் திருமணமாகி 3 ஆண்டுகளுக்குள் மனைவி / கணவனை இழந்து விதவை ஆவார்.

2. மேற்கண்ட அதே அமைப்பில் லக்கினம், இராசி, சுக்கிரனுக்கு 2 இல் செவ்வாய் இருந்தால் சூரியனோடு சேர்ந்திருந்தால் திருமணமாகி ஓரிரு ஆண்டில் விவாகரத்து ஆகாமல் கணவர் மனைவியை ஒருவருக்கு ஒருவர் பிரிந்து இருப்பர்.

3. மேற்கண்ட அமைப்பு 4 இல் இருந்தால் தாயார் சொல் கேட்டு பிரிவு உண்டாகும், அல்லது வாகன விபத்தில் உயிர் பிரியும் (செவ்வாய் அல்லது சூரியன் நீச்சமானால்).

4. 7 இல் மேற்கண்ட அமைப்பு (லக்னம், இராசி, சுக்கிரனுக்கு) இருந்தால் விவாக ரத்தாகும். குரு + செவ்வாய் கடகத்தில் உச்சம், நீச்சமானாலோ. பரிவர்த்தனையானாலோ இரட்டைக் குழந்தைகள் பிறந்து தொல்லை தரும்.

5. 8 இல் மேற்கண்ட அமைப்பு இருந்தால் இளம் விதவை. மனைவியை இழந்தவராவார்.

6. 12 இல் இவ்வமைப்பு உள்ளவர்கள் மனைவி, கணவர் பிரிந்து தொழில் ரீதியாய் அயல்தேசத்தில் இருப்பர். 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்திப்பர்.

7. லக்னத்துக்கு, இராசி, சுக்கிரனுக்கு 10 இல் சுக்கிரன் உடனோ, செவ்வாய் தனித்தோ இருந்தால் அறுவை சிகிச்சையில் (சிசேரியனில்) ஆண் குழந்தை பிறக்கும். 10 இல் செவ்வாய் உள்ளவருக்கு ஒவ்வொரு தெசையிலும் செவ்வாய் புத்தியில் பேரிடர் உண்டாகும்.

ஆண், பெண் இருவருக்கும் ஒரே மாதிரியான அமைப்பு இருந்தாலே திருமணம் செய்ய வேண்டும்.

8. கேது திசையில் பிறந்தவர்களை எமகண்டம் ஒன்றும் செய்யாது என்பதால் அசுபதி, மகம், மூலம் இவர்களுக்குக் கேதுவின் சமபலமுள்ள செவ்வாய் இரண்டாவது வீடு என்றால் மற்றவருக்கு 4, 8 இல் செவ்வாய் அல்லது கேது இருந்தால் திருமணம் செய்யலாம்.

## 13. பிற பொருத்தங்கள்

இதுவரை பத்து வகைப் பொருத்தங்கள் மற்றும் பாதம், செவ்வாய் தோஷப் பொருத்தம் பார்த்தோம். இனி இருவர் ஜாதகத்திலும் குடும்பம், புத்திரம், மணவாழ்வு, ஆயுள், தொழில் ஸ்தானங்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஒருவர் ஜாதகத்தில் 2 ஆவது வீடு குடும்ப ஸ்தானம் என்பது போல, மேற்சொன்ன 2, 5, 7, 8, 10 ஆம் வீடுகளில் உள்ள கிரகங்கள் இருவருக்கும் ஒத்துவருகிறதா என்று பார்க்க வேண்டும். பெண்ணுக்குக் குடும்ப ஸ்தானம், ஆணுக்குக் குடும்ப ஸ்தானம் நட்பாக இருக்க வேண்டும்.

இருவருக்கும் லக்னத்தில் இருந்து குடும்ப ஸ்தானம் அதாவது 2 ஆம் வீடு சுத்தமாய் இருக்க வேண்டும். அதேபோல் புத்திர ஸ்தானம் (5 ஆவது வீடு), களத்திர ஸ்தானம் (7ஆவது வீடு), ஆயுள்காலம் (8 ஆவது வீடு) சுத்தமாய் இருக்க வேண்டும். பெண்வரும் நேரம் ஆண்வரணுக்குத் தொழில் பாதிக்கக் கூடாதல்லவா? அதனால் 10 ஆம் வீடும் சுத்தமாய் இருக்க வேண்டும். இவ்விதம் எல்லா வீடுகளும் (இருவர் ஜாதகத்திலும் லக்னத்துக்கு 2, 5, 7, 8, 10 ஆம் வீடுகள்) சுத்தமாய் எந்தக் கிரகமும் இல்லாதிருப்பது நல்லது. இருவருள் ஒருவருக்கு இந்த ஐந்து இடங்களில் ஏதாவது கிரகம் இருந்தால் கிரகங்கள் (ஒன்றுக்கு மேற்பட்ட) அதற்குத் தகுந்தால் போல் பலன்கள் கூற வேண்டும்.

### ஆதிபத்திய விவரம்

மேற்சொன்ன 2, 5, 7, 8, 10 ஆம் அதிபதிகள் பெண், ஆண் இருவருக்கும் அல்லது சம பலமுள்ளவராய் இருந்தால் ஜாதகம் நன்கு பொருந்தும்.

எடுத்துக்காட்டாக, பெண் சிம்மம் லக்னம், பையன் துலாம் லக்னம் என்று இருந்தால்,

| | | | |
|---|---|---|---|
| சிம்மம் லக்னத்துக்கு | 2 ஆம் வீடு புதன் | துலாம் லக்னத்துக்கு | 2 ஆம் வீடு செவ்வாய் |
| | 5 ஆம் வீடு குரு | | 5 ஆம் வீடு சனி |
| | 7 ஆம் வீடு சனி | | 7 ஆம் வீடு செவ்வாய் |
| | 8 ஆம் வீடு குரு | | 8 ஆம் வீடு சுக்கிரன் |
| | 10 ஆம் வீடு சுக்கிரன் | | 10 ஆம் வீடு சந்திரன். |

இப்போது புதன் X செவ்வாய் சம பலம். எனவே, +−

குரு X சனி சம பலம். எனவே, +−

சனி X செவ்வாய் பகை. எனவே, X

குரு X சுக்கிரன் பகை. எனவே, X

சுக்கிரன் X சந்திரன் பகை. எனவே, X

என்று எழுத வேண்டும்.

நட்புக் கிரகமானால் (+) குறியும், சம பலமானால் (+–) குறியும், பகையானால் (X) குறியும் இட்டு எழுத வேண்டும். கிரகங்களின் பகை, நட்பு விவரம் பஞ்சாங்கத்தில் கடைசிப் பக்கத்தில் இருக்கும்.

இன்னொரு விஷயம் மேற்சொன்ன 2, 5, 7, 8, 10 வீடுகளில் இருவருள் ஒருவருக்கு ஏதாவது கிரகம், உச்சமானாலோ, நீச்சமானாலோ அல்லது அந்த வீட்டின் அதிபதிகள் வேறு இடத்தில் மறைந்திருந்தாலோ பொருத்த பலன்களை அதற்குத் தக்கபடி எழுத வேண்டும். பொருத்தத் தாளில் இருவருக்கும் 2, 5, 7, 8, 10 ஆம் அதிபதிகள் எங்கு உள்ளனர் என்ற எண்ணையும் குறிப்பிடுவது நல்லது.

**14. தெசா புக்தி விவரம்**:

பிறந்த போது உள்ள தெசாபுக்தியைக் கொண்டு இன்று வரையிலான நடப்புத் திசையைக் கண்டு இருவருக்கும் ஒரே தெசை நடக்காத பட்சத்தில் ஜாதகம் சேருவதாய்ச் சொல்ல வேண்டும்.

தெசாபுக்திகள்:

1. வெவ்வேறு தெசைகள்

2. தொடர் தெசை

3. தெசா சந்தி

என்று மூன்று வகைப்படும்.

எடுத்துக்காட்டாக, பெண் 1990 இல் பிறந்திருந்து, மகம் நட்சத்திரம் கேது தெசைஇருப்பு 3 வருடம் 6 மாதம் 9 நாட்கள் என்றால், இவருக்குப் பார்த்திருக்கும் பையன் 1988 இல் பிறந்து கார்த்திகை நட்சத்திரம் சூரியன் தெசை இருப்பு 4 வருடம் 1 மாதம் 3 நாட்கள் என்று இருந்தால், தற்போது பெண்ணுக்கு 2020 வரை சூரியன் தெசையும், பையனுக்கு 2025 வரை இராகு தெசையும் நடக்கும். இது தெசா சந்தி அற்றது.

இதே 1988 இல் பூரம் நட்சத்திரத்தில் பையன் பிறந்திருந்து சுக்கிரன் 18 வருடம் 6 மாதம் 3 நாள் என்று இருந்தால் 2012 முதல் 2022 வரை சந்திரன் தெசை நடக்கும். அப்போது பெண்ணுக்கும் 20-22 இல் சந்திர தெசை நடக்கும். இது தெசா சந்தி. பொண்ணுக்கு 2020 இல் சூரிய தெசை முடியும் போது அதே வருடம் பையனுக்கு ஆரம்பித்தால் தொடர் தெசை என்று பெயர்.

இதில் தொடர் தெசையும் வரக்கூடாது. தெசா சந்தியும் வரக்கூடாது என்று கூறமுடியாது. வெவ்வேறு தெசைகள் இருப்பதே சாலச் சிறந்தது. ஏக தெசை, தொடர் தெசை கிரகங்கள் 9, 11 ஆகிய வீடுகளில் இருவர் ஜாதகங்களிலும் லக்கினம் இராசிக்கு இருந்தால் தாராளமாய் செய்யலாம். அதனை ஜாதகம் பார்த்து செய்ய வேண்டும்.

பெண்ணுக்கு ஆண் நட்சத்திரம் 1, 3, 5, 6, 8, 12 என்று வந்தால் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் 3 ஆம் எண் உள்ள தம்பதியருக்குப் பிறக்கும் குழந்தை பிற சாதியில் மணம் செய்வர். 5 ஆம் வீடு வித்தியாசம் உள்ள தம்பதிகளின் குழந்தைகள் பிரிந்து விடும். 6, 8, 12 ஆம் எண் மணமுறிவு தரும்.

எனவே, பெண் நட்சத்திரம் இராசிக்கு 6க்கு மேற்பட்ட இராசியாய் பையன் இராசி இருக்கச் செய்வது நல்லது. பெண் இராசிக்கு 2, 4, 6, 7, 8, 9, 10, 11 இராசியில் அமையும் வரன்கள் வெற்றிகர வாழ்வு பெறுவர்.

**தெசாபுக்தி பலன்கள்**

பெண் ஆண் இருவருடைய தெசாபுத்திகள் – இதன் காலங்களைக் கண்டபின் லக்னத்தில் இருந்து தெசாநாதன் இருக்கும் இடத்தைக் கணக்கிட்டுப் பலன்கள் எழுத வேண்டும்.

**முடிவு**

இது கடைசிக் கட்டம். மேற்சொன்ன 7 படிகளைத் தாண்டி வந்து கடைசியில் நம்முடைய கருத்துக்களை 8 சிறு தலைப்புகளில் எழுத வேண்டும். அவை:

1. 10 பொருத்தங்கள், 2. பாதப் பொருத்தம், 3. செவ்வாய் தோசம்,
4. பிற பொருத்தங்கள், 5. ஆதிபத்தியம், 6. தெசாபுக்தி விவரம்,
7. தெசாபுக்தி பலன்கள், 8. முடிவு.

## 15. ஜாதகப் பொருத்தம் எப்படி எழுதுவது?

இதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் புரிந்து கொள்வோம். இரண்டு ஜாதகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் சௌ. ஜெயஸ்ரீ மற்றும் சிர. கண்ணன் ஜாதகங்களுக்குப் பொருத்தம் பார்த்து எழுதுக.

**பெண் ஜாதகம்:**

பெயர் : ஜெயஸ்ரீ

பிறந்த தேதி : 20-04-1990.

பிறந்த நட்சத்திரம் : அவிட்டம் 1 ஆம் பாதம்.

செவ்வாய் தெசை இருப்பு: 5 வருடம், 3 மாதம், 2 நாள்.

:

| | | | |
|---|---|---|---|
| | சூரி புத | | குரு |
| சுக் செவ் | இராசி | | கேது |
| சந் இரகு | | | ல / |
| சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி இராகு | |
| | அம்சம் | | புத |
| குரு | | | சந் |
| செவ் | சனி கேது | | ல / |

**ஆண் ஜாதகம்:**

பெயர் : கண்ணன் பிறந்த தேதி : 06-08-1988 பிறந்த நட்சத்திரம் : மூலம்

கேது தெசை இருப்பு : 5 வருடம், 3 மாதம், 4 நாள்.

| | | | |
|---|---|---|---|
| இராகு | குரு | | |
| | இராசி | | சுக் சூரி செ புத |
| | | | |
| ல / சந் | சனி | | கேது |

| | | | |
|---|---|---|---|
| | சந் கேது | | ல / |
| செவ் | அம்சம் | | |
| சூரி | | | |
| | புத சுக் குரு சனி | இராகு | |

**பொருத்தங்கள்**

| 1) | | சௌ.ஜெயஸ்ரீ | சிர.கண்ணன் | பொருத்தம் |
|---|---|---|---|---|
| | 1. நட்சத்திரம் | அவிட்டம்-1- | மூலம் - 1 -(24) | 100% |
| | 2. கணம் | ராட்சஸம் | ராட்சஸம் | 100% |
| | 3. ஸ்த்ரீ தீர்க்கம் | -24 ஆவது நட்சத்திரம் | | 100% |
| | 4. மாகேந்திரம் | -24 ஆவது நட்சத்திரம் | | 100% |
| | 5. இராசி | 12 ஆவது இராசி | | 90% |
| | 6. அதிபதி | சனி | குரு | 100% |
| | 7. வசியம் | அடுத்தடுத்த இராசி | | 100% |
| | 8. ரஜ்ஜு | தொப்புள் | பாதம் (துட்டவில்லை) | 100% |
| | 9. யோனி | சிங்கம் - | நாய் (பகையில்லை) | 100% |
| | 10. வேதை | சஷ்டாஷ்டகமில்லை | | 100% |
| 2) பாதம்: | | 94 ஆவது பாதம் | | 100% |

3) செவ்வாய் தோஷம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. லக்கினம்: | (07) | (08) | | |
| 2. இராசி: | (02) | (08) | இருவருக்கும் சம அளவு தோஷமுள்ளது. | 100% |
| 3. சுக்கிரன் | (01) | (01) | | |

4) பிறபொருத்தம்

| | | |
|---|---|---|
| 1. குடும்பம் | (-) | (-) |
| 2. மண வாழ்வு | (சனி + கேது) | (-) (சுக்கிரன்+ செவ்வாய்) |
| 3. ஆயுள் | (-) | (சூரியன் + செவ்வாய் + புதன் + சுக்கிரன்) |
| 4. புத்திரம் | (சனி) | (குரு) (7, 8 இல் இருவருக்கும் கிரகம் உள்ளது.) |
| 5. தொழில் | (-) | (கேது) |

5) ஆதிபத்தியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. குடும்பம்: | (புத) | (சனி) | (9) | (12) |
| 2. புத்திரம்: | (குரு) | (செவ்) | (11) | (8) |
| 3. மணவாழ்வு: | (சனி) | (புத) | (5) | (8) |
| 4.ஆயுள்: | (குரு) | (சந்) | (11) | (1) |
| 5. தொழில்: | (சுக்) | (புத) | (7) | (8) |
| | (லக்னத்திலிருந்து) | | | |

100/-

6) தெசாபுத்தி விவரம்:

1. 2035 வரை குரு - 2019 வரை சூரியன்
2. 2035 வரை குரு - 2029 வரை சந்திரன்
3. 2035 வரை குரு - 2036 வரை செவ்வாய் தெசாசந்தி இல்லை. 100/-
4. 2054 வரை சனி - 2054 வரை இராகு

7) தெசாபுத்தி பலன்கள்:

குரு (11) சூரியன் (8) இலாபம் புத்திர இலாபமுண்டு. (கிரகங்கள் பக்கத்தில் உள்ள எண் லக்கினத்திலிருந்து கிரகமுள்ள வீடு.)

குரு (8) சந்திரன் (1) மனமகிழ்வு. குரு (8) செவ்(8) தெசையில் வெளிநாட்டு யோகமுண்டு.

சனி (5) ராகு (4) தெசையில் வெளிமாநில வெற்றி வாழ்வு உண்டு.

8) முடிவு:

1. இருவரும் முதல்பாதம் என்பது சிறப்பு.
2. ராட்சஸ கணம் உட்பட 10 பொருத்தமும் உள்ளது.
3. இருவருக்கும் செவ்வாய் 7-8 இல் உள்ளது.
4. இருவருக்கும் குடும்ப ஸ்தானம் சுத்தம்.
5. சத்புத்திர இலாபமுண்டு.
6. தெசாசந்தி இல்லை.
7. ஜாதகம் 90% சேரும். முதல் தரமானது.
8. தாராளமாய்ச் செய்யலாம்.

சீக்கிரமே விவாஹப்பிரப்தி ரஸ்து.

இவண்,

இடம்:

நாள்:

மேற்கண்ட விதத்தில் பொருத்தங்கள் எழுதி, சம்பந்தப்பட்டவருக்கு ஒரு மடலுடன் அனுப்பலாம். முதல்பக்கம் திருப்பி 90/100 முதல் தரம் என்று எழுதவும்.

ஜாதகம் சேரவில்லை என்றாலோ, யோனிப் பொருத்தம் இல்லை என்றாலோ, தெசாசந்தி ,தொடர்தெசை வந்தாலோ தவறாமல் குறிப்பிட்டு, சேரவில்லை என்று எழுத வேண்டும்.

பொருத்தம்பார்க்க ஜாதகங்களை அஞ்சலில் அனுப்பச் சொல்லவும். போனில் பொருத்தம் பார்த்து பலன் சொல்வதை சோதிடர் ஒருபோதும் செய்யக் கூடாது. ஜாதகம் படிக்கும் போதே இந்த ஜாதகர் இந்த

வருடம் பிறந்தாரா என்று கேட்க வேண்டும். ஜாதகம் படிப்பவர் தவறாகப் படித்தால் முற்றிலும் தொல்லையாகிவிடும். எனவே கைதேர்ந்த ஜோதிட;ர் ஆகும்வரை போனில் பொருத்தம் சொல்ல வேண்டாம்.

திருமணப் பொருத்தம் விவரங்களை அஞ்சலில் அனுப்புவதாக இருந்தால் எத்தனை சதவீதம் (%) சேர்ந்துள்ளது என்றும், தாராளமாய் செய்யலாம் என்றும் எழுதலாம். சேரவில்லை என்றால் இது சேராது என்று எழுதவும். அதற்காக வருத்தம் தெரிவிக்கவோ நல்ல வரன் வரும் என்றோ கூற வேண்டாம். மறக்காமல் சீக்கிரமே விவாகபிரப்தி ரஸ்து அல்லது விரைவில் திருமணம் நடக்கட்டும் என்று எழுதவும். அதுவே போதுமானது.

அஞ்சலில் ஜாதகரின் ஜாதகத்தையும் சேர்த்து திருப்பியனுப்ப வேண்டும். சோதிடர் எக்காரணம் கொண்டும் பிறர் ஜாதகங்களைத் தன்னுடன் வைத்துக் கொள்ளக் கூடாது.

பழகப்பழக வேகமாய் பலன் சொல்ல வரும். பொருத்தம் பார்க்க வருபவர்களை வெகுநேரம் காக்க வைக்கக் கூடாது. இன்று போய் இரண்டொருநாள் கழித்து வாருங்கள் என்று சொல்லக்கூடாது. உடனுக்குடன் பலன் சொல்லியனுப்புவதே பண்பாடு.

அதேபோல் சேராத ஜாதகத்தை எக்காரணம் கொண்டும் பரிகாரங்கள் செய்து சேர்த்து வைக்க முயலக்கூடாது. பாதி பொருத்தம் பார்க்கும்போதே சேரும் சேராது என்று தெரிந்தாலும், இறுதி வரை பார்த்துவிட்டு, அவர்களது மகிழ்ச்சிக்காக ஏதும் சொல்லாமல், உண்மையைச் சொல்வதே சிறப்பு. ஜாதகம் பார்ப்பதைவிட பொருத்தம் பார்க்கும் போது மிகக் கவனமாய் இருந்தால் சிறந்த சோதிடர் என்ற பெயர் எடுக்கலாம்.

நட்சத்திரத்தைப் பார்த்தவுடனேயே, எடுத்துக்காட்டாக அசுபதி, மூலம், பரணி, பூராடம் என்று வந்தால் உடனே சொல்லிவிடவும்.

ஒரு ஜாதகம் மட்டும் பொருத்தம் பார்க்க வந்து, சேரவில்லை என்றால் தட்சணையாக அவர்கள் கொடுப்பதை மனமுவந்து ஏற்கவும்.

பிறந்ததேதியுடன் வரும் பொருத்தங்களைப் பார்க்க வேண்டாம். பள்ளியில் கொடுத்த பிறந்த தேதியாக இருந்தால் தொல்லையாகிவிடும். ருது ஜாதகம் பார்க்க வேண்டாம். ஒருவரே 10 ஜாதகங்களுக்குமேல் கொண்டுவந்தால் முதல் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம், சேராது என்று ஜாதகங்களைப் பிரித்துக் கொண்டு, அலுப்பு இல்லாமல் பொருத்தம் பார்க்க வேண்டும். வெற்றி உண்டு.

## 16. சேராத நட்சத்திரங்கள்

இனி பெண்ணின் நட்சத்திரத்திற்குப் பொருத்தம் சேராத நட்சத்திரங்கள் எவை? சேரும் நட்சத்திரங்கள் எவை? என்பதைத் தெரிந்து கொள்வோம்.

### 27 பெண் நட்சத்திரங்களுக்குப் பொருத்தம் சேராத நட்சத்திரங்கள்

**பெண் நட்சத்திரம்**

1. அசுபதிக்கு : மகம், மூலம், ஆயில்யம், சுவாதி, ஹஸ்தம் சேராது.
2. பரணிக்கு : பூரம், பூராடம், அவிட்டம், பூரட்டாதி சேராது.
3. கார்த்திகைக்கு : உத்திரம், ஹஸ்தம், திருவோணம், பூராடம் சேராது.
4. ரோகிணிக்கு : ஹஸ்தம், திருவோணம், உத்திராடம், மகம், பூரம் சேராது.

5. மிருகசீரிஷத்துக்கு : சித்திரை, அவிட்டம், உத்திராடம், மகம், பூரம் சேராது.

6. திருவாதிரைக்கு : சுவாதி, சதயம், கேட்டை, அனுஷம் சேராது.

7. புனர்பூசத்துக்கு : விசாகம், பூரட்டாதி, மூலம், திருவாதிரை, மகம், பூரம் சேராது.

8. பூசத்துக்கு : அனுஷம், உத்திரட்டாதி, திருவோணம், பூராடம், விசாகம், சித்திரை, அவிட்டம், பூரட்டாதி சேராது.

9. ஆயில்யத்துக்கு : கேட்டை, ரேவதி, மகம், பூரம், திருவாதிரை, மூலம் சேராது.

10. மகத்துக்கு : அசுபதி, மூலம், புனர்பூசம், மிருகசீரிஷம், ரோகிணி, ஆயில்யம் சேராது.

11. பூரத்துக்கு : பரணி, பூராடம், மிருகசீரிஷம், உத்திரட்டாதி, ரோகிணி, சேராது.

12. உத்திரத்துக்கு : உத்திராடம், கார்த்திகை, விசாகம், சித்திரை, பூரட்டாதி, அவிட்டம் சேராது.

13. ஹஸ்தத்துக்கு : (ஆண் சுவாதி சேராது.) (பெண் சுவாதிக்கு ஆண் ஹஸ்தம் சேரும்.) அசுபதி, சதயம், ரோகிணி சேராது.

14. சித்திரைக்கு : மிருகசீரிஷம், அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி, உத்திரம் சேராது.

15. சுவாதிக்கு : திருவாதிரை, சதயம், அசுபதி சேராது. உத்திரட்டாதி ஆகாது.

16. விசாகத்துக்கு : அனுஷம், புனர்பூசம், பூரட்டாதி சேராது.

17. அனுஷத்துக்கு : பூசம், உத்திரட்டாதி, விசாகம், சித்திரை, பூரட்டாதி, அவிட்டம் சேராது.

18. கேட்டைக்கு : ஆயில்யம், ரேவதி, விசாகம், பூரட்டாதி, அவிட்டம் சேராது.

19. மூலத்துக்கு : அனுஷம், கேட்டை, புனர்பூசம், ஆயில்யம், அசபதி, மகம் சேராது.

20. பூராடத்துக்கு : பரணி, பூரம், கார்த்திகை, பூசம் சேராது.

21. உத்திராடத்துக்கு : கார்த்திகை, உத்திரம், மிருகசீரிஷம், ரோகிணி சேராது.

22. திருவோணத்துக்கு : அஸ்தம், ரோகிணி, பூசம் கார்த்திகை சேராது.

23. அவிட்டத்துக்கு : ரேவதி, பரணி, மிருகசீரிஷம், சித்திரை சேராது.

24. சதயத்துக்கு : ஸ்வாதி, ஹஸ்தம், திருவாதிரை, சேராது

25. பூரட்டாதிக்கு : புனர்பூசம், விசாகம்,பரணி, ரேவதி, பூசம், அனுஷம் சேராது.

26. உத்திரட்டாதிக்கு : பூசம், அனுஷம், பூரம், விசாகம், சித்திரை, மூலம் சேராது.

27. ரேவதிக்கு : பூரட்டாதி, அவிட்டம், ஆயில்யம், கேட்டை சேராது.

மேற்கண்டவற்றை மனப்பாடம் செய்யாமல் ஒருமுறை பார்த்தாலே மற்றவை சேருவன தெரிந்து விடும்.

அசுபதி, அவிட்டம், ஹஸ்தம், அனுஷம் இந்த நான்கு நட்சத்திரங்களும் 100 வருடம் வாழும் இயல்புடையவை. எனவே, அசுபதி முதல் மேற்கண்ட 4 நட்சத்திர ஆடவர்கள் ஜாதகம் பொருத்தம் பார்க்க வருமானால் சந்தோஷமாகப் பார்க்கலாம்.

## 17. சேரும் நட்சத்திரங்கள்

### 27 பெண் நட்சத்திரங்களுக்குப் பொருத்தம் சேரும் நட்சத்திரங்கள்

**பெண் நட்சத்திரம்**

1. அசுபதிக்கு : ரோகிணி, திருவாதிரை, சதயம், பூசம் சேரும்.

2. பரணி : மிருகசீரிஷம், புனர்பூசம், மகம், ரேவதி சேரும்.

3. கார்த்திகை : திருவாதிரை, ஸ்வாதி, சதயம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி, மகம், பரணி, பூரம் சேரும்.

4. ரோகிணி : புனர்பூசம், மிருகசீரிஷம், கார்த்திகை, உத்திரம் சேரும்.

5. மிருகசீரிஷம் : ரோகிணி, பூசம், அனுஷம், உத்திரட்டாதி, உத்திரம் சேரும்.
6. திருவாதிரை : பூரம், பரணி, மூலம், சித்திரை, ஹஸ்தம் ரோகிணி சேரும்.
7. புனர்பூசம் : அசுபதி, பரணி, ஹஸ்தம் சேரும்.
8. பூசம் : பூரம், பரணி, பூராடம், ஹஸ்தம், ரோகிணி சேரும்.
9. ஆயில்யம் : உத்திரம், சித்திரை, விசாகம் சேரும்.
10. மகம் : பூரம், ஹஸ்தம், ஸ்வாதி, திருவாதிரை, சதயம், அவிட்டம் சேரும்.
11. பூரம் : சித்திரை, விசாகம், கேட்டை, அசுபதி சேரும்.
12. உத்திரம் : ஸ்வாதி, திருவாதிரை, அனுஷம், பூசம், உத்திரட்டாதி சேரும்.
13. ஹஸ்தம் : புனர்பூசம், கேட்டை, பூராடம் சேரும்.
14. சித்திரை : மூலம், உத்திராடம், உத்திரம், மிருகசீரிஷம் சேரும்.
15. சுவாதி : கேட்டை, பூராடம், திருவோணம், ரோகிணி, மகம் சேரும்.
16. விசாகம் : சித்திரை, மூலம், உத்திராடம் சேரும்.
17. அனுஷம் : பரணி, பூரம், கேட்டை, திருவோணம் சேரும்.
18. கேட்டை : அனுஷம், உத்திராடம், உத்திரம், மிருகசீரிஷம் சேரும்.
19. மூலம் : திருவோணம், ரோகிணி, ஹஸ்தம், சதயம், திருவாதிரை சேரும்.
20. பூராடம் : அவிட்டம், மிருகசீரிஷம், பூரட்டாதி, திருவோணம் சேரும்.
21. உத்திராடம் : சதயம், திருவாதிரை, உத்திரட்டாதி சேரும்.
22. திருவோணம் : பூராடம், பரணி, ரேவதி சேரும்.
23. அவிட்டம் : பூரட்டாதி, உத்திரட்டாதி, அசுபதி, மகம் சேரும்.
24. சதயம் : அசுபதி, மகம், ரேவதி, பரணி சேரும்.
25. பூரட்டாதி : அவிட்டம், அசபதி, மகம், உத்திரட்டாதி சேரும்.
26. உத்திரட்டாதி : பரணி, உத்திராடம், உத்திரம் சேரும்.
27. ரேவதி : அசுபதி, பரணி, கார்த்திகை, உத்திராடம் சேரும்.

மேற்கண்டவைகளை உடனுக்குடன் பரிசீலிக்கலாம். பொதுவாக மணப்பெண் மணமகனை விட 6 வயதாவது சிறியவராய் இருத்தல் நலம். பெண் சுவாதி, ஆண் ஹஸ்தம் சேரும். ஆனால் பெண் ஹஸ்தம் ஆண் சுவாதி சுமாராய் சேரும். அதேபோல் மணமகன் பரணி, பெண் ரேவதி சேராது. ஆனால், பெண் பரணி ஆண் ரேவதி என்றால் சேரும்.

சேரும் சேராத நட்சத்திரங்கள் தவிர மற்றவை இரண்டாம் தரம். மீனம் – மிதுனம்– கன்னி – தனுசு இராசிகளில் மணமகள் மணமகன் ஜாதகம் வந்தால் கவனமுடன் பார்ப்பது நல்லது. ஒரு திருமணமே சோதிடரின் கையில் இருப்பதால், வீட்டுக் கவலை, மனஉளைச்சல் இவற்றை மறந்து ஜாதகம் பார்ப்பதைக் கவனமுடன் பார்த்துச் சொல்வது நல்லது.

ஒரு முக்கிய விஷயம்: மணமகள் – மணமகன் முதன் முதலில் சந்திக்கும் இரவில் இருவர் உள்ளமும் ஒருவர் உள்ளமாகும் போது தங்களைச் சேர்த்து வைத்த பெற்றோரையும் சோதிடரையும் வாழ்த்தி நன்றி கூறலாம். சோதிடர்கள் பிறருடைய அன்புக்கும் ஆசிக்கும் ஆளாவார் என்கிறது சாத்திரம்.

தொழிலைத் தவறுதலாகச் சொல்லிவிட்டால், தொழிலை மாற்றி விடலாம். ஆனால், பொருத்தங் களைத் தவறுதலாகச் சொல்லி, தாலி கட்டி விட்டால் மாற்ற முடியாது. எனவே, கவனம் தேவை.

ooooo

*அலகு II* – ஜாதகம் கணிக்கும் முறை

# பாடம் 2 – ஜாதகக் கணிதமும் பஞ்சாங்கப் படிப்பும்

முறைப்படி சொல்லப் போனால் பஞ்சாங்கப் படிப்பும் ஜாதகக் கணிதமும் என்றே சொல்ல வேண்டும். வீட்டில் இலட்சுமி, சரஸ்வதி, பார்வதி ஆகிய தெய்வங்களை வணங்குவது எப்படியென்றால் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்காக வீட்டைத் துப்புரவாக, தூய்மையாக வைத்திருப்பதே இலட்சுமி பூஜை; புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி ஒவ்வொரு நாளும் பராமரித்து, வங்கி பாஸ்புத்தகத்தை இன்புறப் பார்ப்பதுபோல் மதித்து படித்திருத்தலே சரஸ்வதி பூஜை; வந்தாரை விருத்தோம்பிப் பேணலே பார்வதி பூஜை.

புத்தகங்கள் நமக்கு வழிகாட்டிகள். தாவரங்களுக்கும் உயிர் உள்ளது என்று கண்டுபிடிக்கப் பட்டதுபோல் புத்தகங்களும் கோள்களும் உயிருள்ளவைகளேயாகும். ஒவ்வொரு நாளும் ஒருவருக்கொருவர் காலை வணக்கம் சொல்வது போல் புத்தகங்களைப் படிப்பது அவற்றுக்கு வணக்கம் செய்வது போலாகும்.

ஒவ்வொரு வீட்டிலும் கண்டிப்பாக இருக்க வேண்டிய புத்தகங்கள் மூன்று. அவை:

1. மனிதன் மனிதனுக்ககுச் சொன்ன நூல்: திருக்குறள்.
2. தேவன் மனிதனுக்குச் சொன்ன நூல்: கீதை, பைபில், குர்ஆன், ஆதி கிரந்தம் என்ற மத நூல்கள்.
3. மனிதன் தேவனுக்குச் சொன்ன நூல்: திருவாசகம்.

மேலும் குடும்ப சோதிடருக்கும் ஜாதகம் பார்க்க விரும்புபவர்களுக்கும் அவரவர் வீட்டில் பஞ்சாங்கம் இருப்பது நல்லது.

### 2.1 பஞ்சாங்கம்

பஞ்சாங்கம் பலவகைப்படும், மடத்துப் பஞ்சாங்கம், பாம்புப் பஞ்சாங்கம், கும்பகோணம் பஞ்சாங்கம், மனோன்மணி பஞ்சாங்கம், ஸ்ரீரங்கத்துப் பஞ்சாங்கம், திருக்கணிதப் பஞ்சாங்கம் என்று மேலும் பல வகை உண்டு. அவரவர் தேசாச் சாரத்தைப் பொறுத்து பஞ்சாங்கம் பயன்படுதல் நன்று. ஆனால், எல்லாப் பஞ்சாங்கமுமே ஒரே செய்தியை வெவ்வேறு வடிவில் கூறுகின்றன. 2 + 6 = 8; 4 + 4 = 8; 5 + 3 = 8 என்று சொல்வது போல் ஒரே செய்தியைக் கூறுகின்றன.

பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்களை உடையது. அவை: 1. திதி, 2.வாரம், 3. கரணம், 4. யோகம், 5. நட்சத்திரம் என்பன.

1. திதிகள் : 15 (வளர்பிறை திதிகள் 15, தேய்பிறை திதிகள் 15)
2. வாரம் : கிழமைகள் 7
3. கரணங்கள் : 11
4. யோகங்கள் : 3
5. நட்சத்திரங்கள் : 27

தினமும் எழுந்ததும் அன்றைய திதி, கிழமை, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகியவற்றைப் பஞ்சாங்கத்தைப் பார்த்துப் படிப்பதால் நன்மைகள் உண்டாகும். கிரகங்கள்அதிசாரமாய் (முன்னதாக, முன்வீடு செல்லுதல் முன்னோக்கி) இருக்கும் போதும் வக்ரம் (ஜாதக இராசி–நட்சத்திரங்களில் பின்னோக்கிய

பயணம்) அடைந்த போதும் உண்டாகிய தோஷம் சரியாகும். சித்திரை 1 ஆம் தேதி வேத விற்பன்னரை வைத்து பஞ்சாங்கம் படிப்பதால் அவ்வருட தோஷம் நீங்கும். பல நன்மைகள் உண்டாகும். பஞ்சாங்கம் பார்ப்பதால் உண்டாகும் நன்மைகளை அறியாமல் தினமும் படிப்பதே சிறந்தது. அதாவது பலனை எதிர்பார்க்காமல் செய்வது நல்லது.

பொதுவாக அசல் 28 பாம்பு பஞ்சாங்கப்படி ஜாதகம் கணிப்பதே சிறப்பு.

பஞ்சாங்கத்தின் முதல் இரண்டு மற்றும் 4, 5 ஆம் பக்கங்களையும் கடைசி 3 பக்கங்களையும் ஒருவர் கற்றுக் கொண்டால் எல்லாம் அறிந்த நிலை வரும்.

பஞ்சாங்கத்தைப் பார்த்து பலன் சொல்வது கௌரவப் பழுது என்ற நினைவு தவறானது. தற்காலத்தில் எல்லாருமே பஞ்சாங்கம் படிக்க அறிந்திருப்பதால் அட்டமி, நவமி, அமாவாசை எப்போது வருகிறது என்று சோதிடரை அணுகுவதில்லை. அந்த அளவுக்கு ஜாதகப் படிப்பு விழிப்புணர்வு உள்ளது என்பது ஆரோக்கியமான செய்தியே.

மேற்சொன்னபடி முதல் 5 பக்கமும் பின்னுள்ள 3 பக்கங்களும் ஜாதகம் பார்க்க, கணிக்க, பொருத்தம் பார்க்க உதவும் செய்திகள் அடங்கியுள்ளன. அவை அனைத்தும் ஒரு சோதிடருக்குப் பக்க துணையாய், கைமருந்தாய் இருக்கும்.

**யோகங்கள்**

யோகங்கள் மூன்று வகைப்படும். அவை. 1.சித்தயோகம், 2. அமிர்தயோகம், 3. மரணயோகம் என்பன. இவை கிழமை மற்றும் நட்சத்திரம் இணைப்பினால் வருவது. அதன் பட்டியல் பஞ்சாங்கத்தின் முதல் பகுதியில் இருக்கும். அதைப் பற்றி அடுத்த பக்கம் பார்ப்போம்.

சித்தயோகத்தில் பிறந்தவர்கள் சாத்வீக (மிதமான) குணம் உள்ளவர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பர்.

அமிர்தயோகம் உள்ள நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பிறருக்கு உதவும் பரோபகாரியாவார். இதில் சித்தயோகத்தினர் பிறருக்கு உதவி செய்தாலும் நல்ல பெயர் கிட்டாது. அமிர்தயோகமுள்ளவருக்கு பெரும்புகழ் பெறும் வாய்ப்பு உண்டு.

மரணயோகத்தில் பிறந்தவர்கள் தீய பழக்க வழக்கமுள்ள பண்பாளராய் இருப்பர். இவர்கள் இருக்குமிடத்தில் பிரச்சினைகள் கூடும்.

எந்தெந்த நட்சத்திரங்களுக்கு எந்தெந்த யோகம் வரும் என்று மனப்பாடம் செய்ய வேண்டாம். ஜாதகத்தின் ஒவ்வொரு நாளின் முற்பகுதியிலேயே சி, அ, ம என்று குறிப்பிடப்பட்டிருக்கும். சி என்பது சித்த யோகம். அ என்பது அமிர்த யோகம். ம என்பது மரண யோகம்.

சில தேதிகளில் சி, ம என்றோ, சி, அ என்றோ, ம, அ என்றோ குறிப்பிடப்பட்டிருக்கும். அதாவது ஒரே நாளில் இரண்டு நட்சத்திரங்கள் வரும்போது இரண்டு யோகங்கள் இருக்கும்.

வேறு சில தேதிகளில் ஒரே நாளில் மூன்று நட்சத்திரங்கள் இருக்கும்போது மூன்று யோகங்கள் அமையும். ஒரு நாளில் காலை ஒரு நட்சத்திரமும், மதியம் ஒரு நட்சத்திரமும், இரவு ஒரு நட்சத்திரமும் என மூன்று நட்சத்திரங்கள் அமையும். அப்போது நட்சத்திரம் கிழமையைத் தொடர்புபடுத்தி சி, அ, ம அல்லது ம, அ, சி அல்லது அ, சி, ம என்று மூன்று யோகங்கள் எழுதியிருக்கும். ஒரு நாள் முழுவதும் ஒரே நட்சத்திரமானால் சி அல்லது ம அல்லது அ என்று எழுதி இருக்கும்.

பஞ்சாங்கத்தில் என்னென்னவரும் என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். தனியே விளக்க அவசியம் இல்லை. ஜாதகக்கணிதம் மட்டும் பஞ்சாங்கத்தைப் பார்த்தே எழுத வேண்டும். இராகு காலம், எமகண்டம் ஆகியவற்றை மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. அது தானாகவே மனப்பாடம் ஆகும். எதையும் மூளைச்சுமை செய்ய வேண்டாம்.

ஜாதகம் பார்க்க வருபவரிடம் 60 வருடங்களின் பெயர்களை ஒப்பிப்பதோ அல்லது இராகு-காலம் எத்தனை மணிக்கு எந்தெந்தக் கிழமையில் வருகிறது என்றோ சொல்ல வேண்டாம். இது ஜாதகம் பார்ப்பதற்கு தொடர்பு இல்லாதது.

இனி ஜாதகக்கணிதம் பற்றிப் பார்ப்போம்.

**ஜாதகக் கணிதம்**

ஜாதகம் எழுதத் தருபவர்கள் சிலநேரம் அரை குறை தகவல்களைத் தருவர். அவர்களிடம் விளக்கமாகக் கேட்க வேண்டும். உதாரணத்துக்கு ஒருவர் வெள்ளைத்தாளில் தன் பிள்ளை பெயர் சிர. ரவிக்குமார், பிறந்த தேதி 10.4.1990, 10 மணி என்று எழுதி இருப்பார். அவரிடம் இரவு 10 மணியா? பகல் 10 மணியா? என்று கேட்க வேண்டும். எனவே ஜாதகம் எழுதத் தருபவர்கள் கீழ்க்காணுமாறு வெள்ளைத்தாளில் எழுதச் சொல்ல வேண்டும்.

1. ஜாதகர் பெயர்: சிரஞ்சீவி. ரவிக்குமார்,
2. பிறந்த தேதி : 10-04-1990.
3. பிறந்த நேரம் : காலை 10.00 மணி

இதற்கு ஜாதகம் எழுதுவது எப்படி என்று பார்ப்போம்.

1. முதலில் 1989-1990 பஞ்சாங்கத்தை எடுக்கவும். பஞ்சாங்க அட்டையில் 1989-1990 என்று போடப்பட்டிருக்கும். 90-91 பஞ்சாங்கத்தை எடுக்கவும்.
2. இரண்டாவதாக, அப்பஞ்சாங்கத்தில் பங்குனி என்று போடப்பட்டிருக்கின்ற பக்கம் (பக்கம் 22) போகவும்.
3. மூன்றாவதாக, அந்தப் பக்கத்தின் தலைப்பில் சுக்கில வருடம். 1990 என்றிருக்கும். அதனைக் கவனிக்கவும்.
4. நான்காவதாக, ஒரு வெள்ளைத் தாளை எடுக்கவும். அதன் முகப்பில் (உ) பிள்ளையார் சுழி போடவும். இடப் பக்கத்தில் ஓரம் இடைவெளி (மார்ஜின்) விட்டு *க்ஷேமம்* (நலம்) என்று எழுதவும்.
5. ஐந்தாவதாக, கீழ்க்காணும் சுலோகத்தை எழுதவும்.

*ஜனனீ ஜென்ம சௌக்யானாம் வர்த்தனீகுல சம்பதாம்*

*பதவீ பூர்வ புண்யானாம் விக்யதே ஜென்ம பத்ரிகா*

(எடுக்கும் பிறப்பும் உடல் வலிவும் தொழிலோடு குடும்ப மேன்மையதும்

பதவி சென்ற பிறவிப் பயன் அதன் வழி எழுதும் ஜாதகமே)

இந்தச் சுலோகம் எழுதாமல் ஜாதகம் எழுத ஆரம்பிக்கக்கூடாது. அதன் பொருள் ஜாதகருடைய வாழ்வு, சௌக்கியம், தொழில், அவர்தம் குடும்ப நலம், பதவி இவையாவும் அவர் பூர்வஜென்மப் பயனால்

எழுதப்படும் ஜாதகம் (ஜென்ம பத்திரிகா – ஜாதகம்) என்று பொருள். ஜாதகம் எழுதும் எனக்கும் (சோதிடருக்கும்) இவருடைய வருங்காலப் பலன்களுக்கும் சம்பந்தமில்லை. ஜாதகரின் முன்ஜென்ம நல்ல ஊழே காரணம் என்று பொருள்,

6. ஆறாவதாக, பதவீ பூர்வ என்று வரும் இடத்தில் பூர்வ என்ற வார்த்தைக்கு நேராக *ஸ்வஸ்திஸ்ரீ* என்று ஆரம்பித்து மேலே குறிப்பிட்ட வருடத்தைச் *சுக்கில வருடம் பங்குனி மீ* என்று எழுதி, ஏப்ரல் 10 ஆம் தேதிக்கு அடுத்துள்ள தமிழ்த் தேதி 28 ஆம் தேதியை *28 உ* என்று எழுதவும். பின்னர் அடைப்பில் *(10-04-1990) செவ்வாய்க்கிழமை* என்று எழுதவும். பின்னர் அவ்வெள்ளைத் தாளின் பின்பக்கம் திருப்பவும்.

**உதயாதி நாழிகை கணித்தல்**

7. ஆங்கில நாட்காட்டியில் தேதி இரவு 12.00 மணிக்குத் தொடங்கி அடுத்த இரவு 12.00 மணிக்கு முடிகிறது. இந்திய நாட்காட்டியில் காலையில் சூரியன் உதயத்திலிருந்து தொடங்கி அடுத்த நாள் காலை சூரியோதயம் வரை முடிகிறது. எனவே, சூரியோதயத்திலிருந்து குழந்தை பிறந்த நேரம் எவ்வளவு என்று கணக்கிட வேண்டியிருக்கிறது. இதுவே உதயாதி நாழிகை எனப்படுகிறத.

ஏழாவதாக, பஞ்சாங்கத்தின் 5 ஆம் பக்கம் போகவும். (எல்லா வருடமும் பக்கம் மாறாமல் பஞ்சாங்கம் பிரசுரம் செய்யப்படுவதால் பக்கம் மாறாது.) அப்பக்கம் இடக்கையோரம் சூரியோதயம் என்ற அட்டவணையில் பங்குனி மாதத்தைப் பார்க்கவும். குழந்தை பங்குனி 28 ஆம் தேதி பிறந்துள்ளதால் பங்குனி 28 இல் குறிப்பிட்டுள்ள 6.09 மணி (சூரியோதயம் நேரம்) கவனிக்கவும்.

பங்குனி 28 ஆம் தேதி சூரியோதயம் நேரம் : காலை 6.09 மணி

இப்போது சூரியோதயம் நேரத்திலிருந்து குழந்தை பிறந்த நேரம் வரை உள்ள இடைப்பட்ட நேரம் இத்தனை மணி, இத்தனை நிமிடம் என்று வரும். இந்த மணி-நிமிடம் நேரத்தை நாழிகை – விநாடி நேரமாக மாற்றினால் கிடைப்பது **உதயாதி நாழிகை** ஆகும்.

ஒரு மணி = 21/2 நாழிகை என்பதால், இந்த நேரத்தை 21/2 ஆல் பெருக்கினால், உதயாதி நாழிகை கிடைக்கும்.

எனவே கீழ்க்கண்டவாறு உதயாதி நாழிகையைக் கணக்கிடுவோம்.

குழந்தை பிறந்த நேரம் : காலை 10.00 மணி
சூரியன் உதயம் நேரம் : காலை 6.09 மணி (28 ஆம் தேதி)

சூரியன் உதயத்திலிருந்து குழந்தை பிறந்த நேரம் : 3.51 மணி (10.00 – 6.09) கழிக்கவும்.

அதாவது, குழந்தை சூரியோதயம் 6.09 லிருந்து 3 மணி 51 நிமிடத்தில் பிறந்துள்ளது என்று பொருள்.

ஒரு மணி என்பது இரண்டரை நாழிகை என்பதால், 3.51 ஐ இரண்டரையால் ( 21/2 ) பெருக்கவும்.

எனவே, உதயாதி நாழிகை = 3.51 X 21/2 = 9 நா 38 வி

(3.51+3.51+1.56 = 9.38 நா.வி)

(1 நாழிகை = 60 விநாழி)

8. எட்டாவதாக, உதயாதி நாழிகை 9.38 ஐ சரியாகக் கணித்திருக்கின்றோமா என்பதை உறுதி செய்யவும். 9 நா. 38 வி. ஐ இரண்டரையால் வகுத்துப் பார்க்கவும். அவ்வாறு பார்ப்பதால் *உதயாதி நாழிகையைச் சரியாகக் கணித்துள்ளோமா என்பது தெரியவரும்.*

## 9. திதி

ஒன்பதாவதாக, திதி கணக்கிட்டு எழுத வேண்டும். முன்புறப் பக்கம் வரவேண்டும்.

செவ்வாய்க்கிழமைக்கு அடுத்தபடியாய், அன்று பௌர்ணமி காலை 9.00 மணியுடன் முடிந்து பிரதமை ஆரம்பித்து 1 மணி நேரம் கழித்துக் குழந்தை பிறந்திருப்பதால், *கிருஷ்ணபட்சப் பிரதமை (52.51)* என்று எழுத வேண்டும்.

( 60.00 நாழிகையிலிருந்து அன்றிருந்த பௌர்ணமி 7.09 ஐக் கழிக்க பிரதமை 52.51 என்று வந்தது.)

குழந்தை 9 மணிக்குள் பிறந்திருந்தால் பௌர்ணமி (7.09) என்றே எழுதலாம். பௌர்ணமியிலிருந்து அமாவாசையை நோக்கிய முதல் நாள் என்பதால் *கிருஷ்ணபக்ஷம்* (தேய்பிறை – கருப்பு) என்று எழுத வேண்டும். இதே அமாவாசைப் பிரதமையானால் பௌர்ணமியை நோக்கிச் செல்வதால் சுக்லபக்ஷம் பிரதமை என்று எழுத வேண்டும்.)

## 10. நட்சத்திரம்

பஞ்சாங்கத்தில் அடுத்துப் பார்க்க வேண்டியது நட்சத்திரம். அன்று சித்திரை நட்சத்திரம்.

எனவே, *பிறந்த நட்சத்திரம் சித்திரை.*

## யோகம்

அடுத்துப் பார்க்க வேண்டியது எந்த யோகம்? பஞ்சாங்கத்தில் இடக்கையோரம் யோகம் என்ற தலைப்பின் கீழ் ஏப்ரல் 10 ஆம் தேதிக்கு நேர் *சி* என்று எழுதியிருப்பதைக் கவனிக்கவும். சி என்பது சித்த யோகத்தைக் குறிக்கிறது. செவ்வாய்க்கிழமை சித்திரை நட்சத்திரம் சேர்ந்தால் சித்த யோகம்.

எனவே, இதனைக் *கிருஷ்ணபக்ஷப் பிரதமை (52.51) சித்தயோகம்* என்று எழுதவும். திரும்பவும் தாளின் பின்பக்கம் வரவும். தாளின் பின் பக்கம் கணிதம் எழுதிப் பார்ப்பதற்குப் பயன்படுகிறது.

## 11 லக்னம் கண்டுபிடித்தல்

இப்போது பிறந்த லக்னம் கண்டுபிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதத்திலும் சூரியன் ஒவ்வொரு இராசியில் சஞ்சரிப்பதால் அந்த மாதம் முழுவதும் அம்மாதப் பெயரின் லக்னத்தில் சூரிய உதயம் தொடங்குகிறது. பங்குனி மாதம் மீனம் மாதம். அதனால் தொடக்கம் மீன லக்னம்.

பஞ்சாங்கத்தின் இடக்கைப்பக்கம் அதாவது யோகம். அதற்கு அடுத்த கட்டத்தில் மீனம் இருப்பு என்று எழுதியிருக்கும். இப்பகுதியில் நேர் கீழே ஏப்ரல் 10 ஆம் தேதிக்கு எதிரில் மீனம் இருப்பு 0.32 நாழிகை விநாடி என்று எழுதப்பட்டு இருப்பதைக் கவனிக்கவும்.அதனைத் தாளின் பின்புறம் எழுதிக்கொள்ளவும். பின்னர் பஞ்சாங்கத்தின் முன்பக்கம் வரவும்.

ஒரு நாளில் சூரிய உதயத்திலிருந்து 12 லக்னங்கள் வரிசையாக வருவதால் பிறந்த நேரத்தில் எந்த லக்னம் வருகிறது என்று பார்க்க வேண்டும்.

பஞ்சாங்கத்தின் 5 ஆம் பக்கத்தில் 12 லக்னங்களுக்கும் இராசி இருப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பார்த்து வரிசையாக எழுதி மீனம் இருப்புடன் கூட்டி பிறந்த நேரம் வரை வரவும்.

ஏப்ரல் 10 ஆம் தேதி மீனம் இருப்பு : 0.32

அடுத்து மேஷம் இருப்பு : 4.33 ஐக் கூட்டவும்.

மேஷம் லக்னம் : 5.05 நா.வி. வரை

ஏப்ரல் 10 ஆம் தேதி மீனம் இருப்பு : 0.32 நா.வி

அடுத்து மேஷம் இருப்பு : 4.33 ஐக் கூட்டவும்.

மேஷம் லக்னம் : 5.05 நா.வி. வரை

அடுத்து ரிஷபம் இருப்பு : 5.07 ஐக் கூட்டவும்.

ரிஷபம் லக்னம் : 10.12 நா.வி. வரை

குழந்தை பிறந்த நேரம் உதயாதி நாழிகை : 9.38 நா.வி.

ரிஷபம் லக்னம் 5.07 க்கும் 10.12 க்கும் இடையில் உதயாதி நாழிகை 9.38 வருவதால் பிறந்த குழந்தை ரிஷபம் லக்னம் என்று கொள்ள வேண்டும். லக்னத்தை முதல் வீடாக வைத்துதான் ஒருவரது பலன்களைச் சொல்ல வேண்டும் என்பதால் கவனமாக லக்னத்தைக் கணக்கிடவும்.

**12. இருப்புத் தெசை கண்டுபிடித்தல்**

**அ) ஆதியந்த பரம நாழிகை கணித்தல்**

ஆதியந்த பரம நாழிகை என்பது அன்றைய நட்சத்திரத்தின் மொத்த நேரமாகும். அன்றைய தினம் சித்திரை நட்சத்திரம். அதாவது 9 ஆம் தேதி பின்னிரவு 3 மணி முதல், 10 ஆம் தேதி முழுப்பகலும், 10 ஆம் தேதி பின்னிரவு (11 தேதி விடியல் வரை) அதாவது 5.00 மணி வரை, அதாவது கிட்டத்தட்ட 26 மணி நேரம் உள்ளது.

இனி அதன் கணக்கு:

முதல்நாள் ஹஸ்தம் 52.05 வரை உள்ளது. 10 ஆம் தேதி சித்திரை 57 நாழிகை 59 விநாடி உள்ளது. இதன்படி, 60.00 நாழிகையில் இருந்து ஹஸ்தம் 52 நாழிகை 05 விநாடியை முதலில் கழிக்கவேண்டும்.

முதல் நாள் மொத்த நாழிகை : 60.00 – நா.வி.
முதல் நாள் ஹஸ்தம் நட்சத்திரம் முடிவு : 52.05 (1 நாழிகை= 60 விநாழி)
---------
மீதி உள்ள நேரம் சித்திரை நட்சத்திர நாழிகை : 7.55 + இதனுடன்
ஏப்ரல் 10 ஆம் தேதியுள்ள சித்திரை நாழிகை : 57.59 விநாடியைக் கூட்ட வேண்டும்.
-----------
சித்திரையின் ஆதியந்த பரம நாழிகை : 65.54
(55 விநாடி + 59 விநாடி = 114 விநாடி. 60 விநாடி = 1 நாழிகை என்பதால் 114 வி. = 1 நா. 54 வி.)
( மொத்தம் 65.54 நா.வி. )
அதாவது 65.54 என்பது சித்திரை ஆதியந்த பரம நாழிகை. ( மொத்த சித்திரை நட்சத்திரம் நேரம்)

ஆ) அடுத்து குழந்தை பிறக்கும்போது எவ்வளவு நட்சத்திரம் கழிவு என்று கணக்கிட வேண்டும்.
அதில் கழிவு : முதல் நாள் 7.55 + உதயாதிநாழிகை 9.38 சேர்க்க 17.33 வரும்.

இ) சித்திரை ஆதியந்த பரம நாழிகையிலிருந்து இந்தக் கழிவு நேரத்தைக் ( கர்ப்ப செல் உள்ளிருந்த ) கழித்தால் வருவது மீதியுள்ள சித்திரை நேரம்,

எனவே, மீதியுள்ள சித்திரை நேரம் = 65.54 - 17.33 = 48.21

ஈ) சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவருக்கு செவ்வாய் தெசை தொடங்கும்.

செவ்வாய் தெசை மொத்த காலம் 7 வருடங்கள்.

எனவே செவ்வாய் தெசை இருப்பு = மீதியுள்ள சித்திரை நேரத்தை ஆதியந்த பரம நாழிகையால் வகுத்து செவ்வாய் 7 வருடங்களால் பெருக்க வேண்டும்.

செவ்வாய் தெசை இருப்பு = 48.21 / 65.54 X 7 வருடம்

இதை விநாடியாக மாற்றி கணக்கிட வேண்டும்.

48.21 = 48 X 60 + 21 = 2901 விநாடி

65.54 = 65 X 60 + 54 = 3954 விநாடி

செவ்வாய் தெசை இருப்பு = 2901 / 3954 X 7 = 5 வருடம் 1 மாதம் 18 நாட்கள்

(1 வருடம் = 12 மாதம், 1 மாதம் = 30 நாள் எனக் கணக்கிடவும்.)

அதாவது 2901 / 3954 X 7 = 19607 / 3954 = 5 வருடம் மீதி 537

மாதம் கண்டுபிடிக்க 537 X 12 = 6444 / 3954 = 1 மாதம் மீதி 2490

நாள் கண்டுபிடிக்க 2490 X 30 = 74760 / 3954 = 18 நாட்கள்

இதுவே செவ்வாய் தெசை கர்ப்ப செல் போக இருப்பு : 5 வருடம் 1 மாதம் 18 நாள் ஆகும்.

## 13. நட்சத்திர பாதம் (அம்சச் சந்திரன்) :

நட்சத்திரத்திற்கு 4 பாதங்கள் என்பதால் சித்திரை நட்சத்திரம் ஆதியந்த பரம நாழிகையை 4 ஆல் வகுக்க வேண்டும். அப்போது தான் எந்த பாதம் எனத் தெரியும்.

எனவே 1 பாதம் = 65.54 / 4 = 16 நா 29 வி

1 முதல் 16.29 வரை சித்திரை 1 ஆம் பாதம்

16.29 முதல் 32.57 வரை சித்திரை 2 ஆம் பாதம்

32.57 முதல் 49.26 வரை சித்திரை 3 ஆம் பாதம்

49.26 முதல் 65.54 வரை சித்திரை 4 ஆம் பாதம்

இதில் கழிவு கர்ப்பத்தில் சென்ற நேரம் 17.33 சித்திரை 2 ஆம் பாதத்தில் வருவதால் பிறந்த நட்சத்திரம் சித்திரை 2 ஆம் பாதம். கன்னி இராசி என எடுத்துக்கொள்ள வேண்டும்.

## 14. ஜாதகம் எழுதுதல்

இனி முதல் பக்கம் வருக. ஜாதகத்தை முழுவதுமாய் எழுத வேண்டும்.

இதுகாறும் ஜாதகத்தில் பிறந்த குறிப்பை வைத்து ஜாதகருடைய நட்சத்திரப்படிவரும் தெசை இருப்பு வரையிலான கணித முறையைப் பார்த்தோம். இப்போது பஞ்சாங்கத்தில் பங்குனி மாதம் பக்கத்திற்கு வருவோம். அங்கே கொடுக்கப்பட்டுள்ள இராசிக் கட்டத்தைப் பார்க்கவும். இப்போது கீழ்க்கண்டவாறு எழுதவும்.

*ஸ்வஸ்திஸ்ரீ சுக்கில வரு. பங்குனி மீ. 28 உ (10.4.1990) செவ்வாய்க்கிழமை சித்தயோகம் சூரியோதயம் 6.09 க்கு உதயாதி நாழிகை 9.38க்கு காலை 10.00 மணிக்கு (இ.இ.0.32) ரிஷப லக்கினத்தில், கன்னி இராசியில், கன்னி நவாம்சத்தில், சித்திரை நட்சத்திரம் – 2 ஆம் பாதத்தில் அதன் ஆதியந்த பரமநாழிகை 65.54க்கு 17.33 கழிய, 48.21 இருக்க, செவ்வாய்தெசை கர்ப்பசெல் போக 5 வரு.1 மீ.18 நாள் இருக்க, சிரஞ்சீவி.ரவிக்குமார் சுபஜெனனம்.*

### 15. இராசிக் கட்டங்களில் 'கிரக' நிலைகளை எழுதுதல்

பின்னர் இதற்குக் கீழ் இரு இராசிச்சக்கரங்களைப் (12) போடவும். இராசி இடப்பக்கமுள்ளது. நவாம்சம்வலப்பக்கமுள்ளது.

இப்போது பங்குனி மாதம் உள்ள (பஞ்சாங்கத்தில்) இராசிக் கட்டத்தைக் கவனிக்கவும். அங்கு இராசிக் கட்டங்களில் கிரகங்கள் குறிக்கப்பட்டிருக்கும். எழுதப்பட்டுள்ள கட்டத்தில் (அச்சில் உள்ளது) நடுவில் சில தேதிகளும் அதன் எதிர் சில கிரகங்கள் பெயரும் எழுதப்பட்டிருக்கும். அவை பங்குனி மாதத் தேதிகள். எந்தத் தேதியில் எந்தக் கிரகம் எந்த இராசிக்கு நகர்ந்து செல்கிறது என்பதை அத்தேதிகள் குறிக்கின்றன. இராசிக் கட்டங்களிலுள்ள கிரகங்களை அப்படியே எழுதாமல், பிறந்த தேதிக்கு முன்பு கிரகங்கள் இடம் மாறி நகர்ந்தனவா என்று கண்ட பிறகே இராசிக் கட்டத்தை நிரப்ப வேண்டும்.

எனவே, நடுவிலுள்ள தேதிகளைக் கீழிருந்து மேல் நோக்கிப் பார்க்கவும். அதில் 31 மேஷ சூரி, அதற்கு மேல் 30 கும்ப செவ் என்று எழுதியிருக்கும். அதனை விட்டு விடவும்.

குழந்தை தமிழ் மாதம் 28 ஆம் தேதி பிறந்திருப்பதால் 18 கும்ப சுக்கிரன் என்று எழுதியிருப்பதை இராசி கட்டத்தில் சுக்கிரனைக் கும்பத்தில் எழுதவும். (கட்டத்தில் மகரத்தில் இருக்கும் அதை அப்படியே எழுதக்கூடாது.)

அடுத்தது 16 – மேஷ புதன் (பஞ்சாங்கத்தில் மேஷத்தில் புதன் இருக்கும்) என்பதால் மேஷ இராசியில் புதனை எழுதவும்.

பங்குனி 1 – மீன சூரியன் என்றிருப்பதால் மீன இராசியில் சூரியனைப் போடவும்.

இப்போது பஞ்சாங்கத்தில் உள்ள மற்ற கிரகங்களை (அதாவது மேலே மாற்றி எழுதிய சுக்கிரன், புதன், சூரியனைத் தவிர) பஞ்சாங்கத்தில் உள்ளவாறு அங்கங்கே எழுதவும்.

ஏற்கெனவே, நாம் கணக்கிட்டபடி பிறந்த நட்சத்திரம் சித்திரை என்பதால் கன்னி இராசிக் கட்டத்தில் சந்திரனை எழுதவும்.

பிறந்த லக்னம் ரிஷபம் என்று ஏற்கெனவே கணக்கிட்டதால், ரிஷபம் இராசிக் கட்டத்தில் **ல/** என்று எழுதி லக்னத்தைக் குறிக்கவும்.

இப்போது இராசிக் கட்டம் எழுதப்பட்டுவிட்டது.

### 16. அம்சக் கட்டம்

பின்னர் அடுத்த 12 கட்டம் அம்சக் கட்டம் ஆகும். இதை எப்படி எழுதுவது? அம்சக் கட்டத்தில் முதலில் அம்ச லக்னம், அம்ச சந்திரன் இவற்றைக் கணக்கிட்டு எழுதிய பின், மற்ற கிரகங்களின் நிலைகளைப் பஞ்சாங்கத்தில் உள்ளதைப் பார்த்து எழுத வேண்டும்.

(1) **அம்ச லக்னம் கணக்கிடுதல்**

முதலில் அம்ச லக்கினம் கண்டுபிடிக்க வேண்டும். எப்படி?

முதலில் உதயாதி நாழிகை என்னவென்று முன்னர்ப் பார்த்தோமல்லவா? அது 9.38. இராசி இருப்பு 0.32 பார்த்தோமல்லவா? இப்போது முதலில் 0.32 உடன் மேஷம் 4.33 ஐக் கூட்ட 5.05 வரும். இதனுடன் ரிஷப இருப்பைக் கூட்ட 5.07 + 5.05 = 10.12 வரும் என்று பார்த்தோம்.

உதயாதி நாழிகை 5.05 க்கும் 10.12 க்கும் இடைப்பட்டிருப்பதால் முன்னர் ரிஷப லக்னம் என்று கண்டோமல்லவா?

அந்த ரிஷபத்தின் நாழிகை விநாடியை அதாவது 5.07 ஐ 9 ஆல் வகுக்கவும்.

5.07 நா.வி / 9 = 5 X 60 + 7 = 307 வி / 9 = 34 விநாடி வரும்.

அதாவது ரிஷபத்தில் 1 பாதம் = 34 விநாடி.

அதனை முன்னர் கூட்டப்பட்ட (0.32+4.33=5.05) 5.05 உடன் .34 ஐக் கூட்டிக்கொண்டே 9.38 வரும் வரை கூட்டவும்.

ரிஷப லக்கினத்தில் கார்த்திகை 2, 3, 4, ரோகிணி 1, 2, 3, 4, மிருகசீரிடம் 1, 2 என்று 9 பாதங்கள் உள்ளன. அதில் வரிசையில் 9.38 உதயாதி நாழிகை எங்கு வருகிறது என்று பார்க்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| தொடக்கம் | 5.05 | ரிஷப இராசியில் கார்த்திகை |
| கார்த்திகை -2 | 34 | |
| | ------ | |
| | 5.39 | |
| கார்த்திகை -3 | 34 | |
| | ----- | |
| | 6.13 | |
| கார்த்திகை -4 | 34 | |
| | ----- | |
| | 6.47 | |
| ரோகிணி -1 | 34 | |
| ரோகிணி -2 | 34 | |
| ரோகிணி -2 | 34 | |
| ரோகிணி -2 | 34 | |
| மிருகசீரிஷம்– 1 | 34 | |
| | --------- | |
| | 9.37 | |
| மிருகசீரிஷம்– 2 | 34 | |

எனவே உதயாதி நாழிகை 9.38, மிருகசீரிஷம்– 2 இல் வருவதால், அம்சக் கட்டத்தில் கன்னியில் லக்னம் என்று அம்ச லக்னத்தை எழுதவும்.

**(2) அம்சச் சந்திரன்**

பிறந்த நட்சத்திரம் சித்திரை 2 ஆம் பாதம் என்பதால் அம்சக் கட்டத்தல் 2 ஆம் பாதத்தைக் குறிக்க கன்னி இராசியில் சந்திரன் என்று எழுதவும்.

**17. அம்சக் கட்டங்களில் கிரகங்களின் நிலைகளை எழுதுதல் :**

பின்னர், முன்னர்ச் சொன்னது போல் பஞ்சாங்கத்தின் 8 ஆம் பக்கமுள்ள கிரக பாதசாரங்களில் ரவி என்ற பகுதியில் பங்குனி மாதம் பார்க்கவும். குழந்தை பங்குனி 28ஆம் தேதி பிறந்துள்ளதால் பங்குனி 28 என்று பார்க்கவும். அன்று சூரியன் 23.35 நாழிகை விநாடிகளில் மாறுகிறது. ஆனால், குழந்தை 9.38இல் பிறந்திருப்பதால் 28 ஆம் தேதிக்கு மேல் உள்ள 24ஆம் தேதியைப் பார்க்கவும். அதற்கு நேரே அம் என்று எழுதி, கும் என்று எழுதியிருக்கும். எனவே அம்சக் கட்டத்தில் கும்பத்தில் சூரியனைப் போடவும்.

இப்படியே எல்லாக் கிரகங்களுக்கும் பங்குனி 28 அல்லது அதற்கு முன்னதான தேதியில் உள்ள குறிப்பிட்ட இராசியில் அம்சம் எழுத வேண்டும். இது சற்று குழப்புவது போல் இருந்தாலும் பழகப் பழக சுலபமாகிவிடும். கிரகபாதசாரங்களில் வலப்பக்கத்து ஓரம் அம்சம் குறிப்பிடப்பட்டுள்ளதால் அனாவசியமாய் அம்சத்தை மனப்பாடம் செய்ய வேண்டாம். எப்படிப் போட வேண்டும் என்றும் கவலைப்படவும் வேண்டாம். பஞ்சாங்கத்தைப் பார்த்தே இராசி – அம்சம் கட்டம் வரையலாம்.

இதுவரை முழுமையான ஜாதகம் கணிப்பதைப் பார்த்தோம். இனி ஜாதகம் வரைவோலையை முழுமையாக எழுதுவோம்.

**18. ஜாதகம் வரைவோலை**

*ஷேமம்.*

*உ*

*ஜெனனீ ஜென்ம சௌக்யானாம் வர்த்தனீகுல ஸம்பதாம்*

*பதவீ பூர்வ புண்யானாம் லிக்யதே ஜென்மபத்ரிகா*

*ஸ்வஸ்திஸ்ரீ சுக்கில வரு. பங்குனி மீ. 28 உ (10.4.1990) செவ்வாய்க்கிழமை சித்தயோகம் சூரியோதயம் 6.09 க்கு உதயாதி நாழிகை 9.38க்கு காலை 10.00 மணிக்கு (இ.இ.0.32) ரிஷப லக்கினத்தில், கன்னி இராசியில், கன்னி நவாம்சத்தில், சித்திரை நட்சத்திரம் – 2 ஆம் பாதத்தில் அதன் ஆதியந்த பரமநாழிகை 65.54க்கு 17.33 கழிய, 48.21 இருக்க, செவ்வாய்தெசை கர்ப்பசெல் போக 5 வரு.1 மீ.18 நாள் இருக்க, சிரஞ்சீவி.ரவிக்குமார் சுபஜெனனம்.*

| | | | |
|---|---|---|---|
| சூரி | புத | ல / | குரு |
| சுக் | இராசி | | கேது |
| இராகு<br>செவ் | | | |
| சனி | | | சந் |

| | | | |
|---|---|---|---|
| | | / | இராகு |
| சூரி | நவாம்சம் | | புத |
| குரு | | | |
| சுக்<br>கேது | சனி | | ல / சந்<br>செவ் |

– தீர்காயுஷ்யமஸ்து –

இப்போது ஜாதகம் முழுமையாக எழுதப்பட்டுவிட்டது.

ஜாதகம் எழுதிய பின் இராசி அம்ஸக் கட்டத்தில் லக்னம் உட்பட எல்லாக் கிரகங்களும் விடுபடாமல் இருக்கின்றனவா என்று பார்க்க இராசி–அம்சத்தில் (அம்சம் நவாம்சம் இரண்டும் ஒன்றுதான்) லக்கினம் உட்பட எண்ண வேண்டும். இரண்டிலும் 10 என்று வரவேண்டும். அதாவது லக்னம் + 9 கிரகங்கள் = 10. பொதுவாக இராசி அம்சத்தில் கிரகங்களை மேற்சொன்னதுபோல் சாய்வாக எழுதுவது அழகாக இருக்கும். அச்சு அல்லது தட்டச்சு செய்ய நேரிடின் நேராக எழுதலாம்.

## 19. கிரக பாதசாரம்

இனி, ஜாதகம் எழுதியதும் பின்புறம் திருப்பவும். அதில் அதாவது பின்புறம் கிரக பாத சாரம் என்று எழுதவும். பின்னர் பஞ்சாங்கத்தில் உள்ளபடி கிரக வரிசையில் பாத விவரம் எழுதவும்.

**கிரக பாதசாரங்கள்**

1. சூரியன் : ரேவதி – 3 ஆம் பாதம்.
2. சந்திரன் : சித்திரை – 2 ஆம் பாதம்.
3. செவ்வாய் : அவிட்டம் – 2 ஆம் பாதம்.
4. புதன் : அசுபதி – 4 ஆம் பாதம்
5. குரு : திருவாதிரை – 2 ஆம் பாதம்
6. சுக்கிரன் : சதயம் – 1 ஆம் பாதம்

7. சனி : பூராடம் – 4–ஆம் பாதம்

8. இராகு : திருவோணம் –3–ஆம் பாதம்

9. கேது : ஆயில்யம் –3 –ஆம் பாதம்

10. லக்னம் : ரோகிணி –2 – ஆம் பாதம்.

– சுபமஸ்து–

இவண்,

இடம்:

நாள்:

பஞ்சாங்கத்தின் 8 – 9 ஆம் பக்கம் பார்த்ததை அப்படியே கிரகபாதசாரங்கள் என்று எழுத வேண்டும். ஜாதகம் எழுதியதும் கையொப்பம், ஊர், தேதி எழுதி, அவரவர் முகவரி முத்திரை இடவும். இதுதான் ஜாதகம் எழுதும் முறை.

## 20. குறிப்புகள் :

1. இப்போது செவ்வாய்தெசை என்று வந்ததுபோல் ஒருவர் அசுபதி, மகம் அல்லது மூலத்தில் பிறந்திருந்தால் கேதுதெசை என்றும், திருவாதிரை என்றால் இராகு என்றும் தெசாபுக்தி எழுத வேண்டும். கர்ப்பசெல் போக இருப்பிலும் அந்தந்தக் கிரகங்களின் மொத்த வருடங்களை எழுதிக் கணக்கிடவும்.

பஞ்சாங்கத்தின் பின்புறமுள்ள காலத்தில் சூரியன் 6 வருடங்கள், சந்திரன் 10 வருடங்கள். செவ்வாய் 7 வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதன்படி கணக்கிட வேண்டும். மேலே ஆதியந்த பரமநாழிகையில் கழிவு போக மீதமுள்ளதை இராசி விநாடியை மாற்றி, நாம் செவ்வாய் என்றதால் ஏழால் பெருக்கினோம். குருதெசை எனில் 16 ஆலும், சனி என்றால் 19 ஆலும் பெருக்க வேண்டும். அதாவது கிரக காலத்தைப் பொறுத்துக் கணக்கிடவும்.

2. எக்காரணம் கொண்டும் ஜாதகத்தில் திரு.ரவிக்குமார் அதாவது பெயருக்கு முன்னால் திரு. ரவிக்குமார் என்றோ, திருமதி என்றோ போடக்கூடாது. ஆணாக இருந்தால் சிரஞ்சீவி என்றும் பெண்ணாக இருந்தால் சௌபாக்யவதி என்றுமே எழுதவேண்டும். அப்போதுதான் கிரகங்களின் ஆசி பரிபூரணமாய்க் கிடைக்கும்.

3. குழந்தை பிறந்து ஓராண்டு கழித்தே வளர்பிறை நல்ல நாள் பார்த்தே ஜாதகம் கணிக்க வேண்டும். ஓராண்டுக்குள் எக்காரணம் கொண்டும் எந்தச் சூழ்நிலையிலும் ஜாதகம் கணிக்கக் கூடாது.

4. நவாம்சம் என்பது ஜாதகருடைய நல்லதிர்ஷ்டத்தைக் குறிப்பிடுகிறது. அதைக் கணிப்பதற்கு எந்த விதமான சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஜாதகத்தின் 8-9 ஆம் பக்கம் குழந்தை பிறந்த தமிழ்த் தேதிக்கு எதிரே அம் என்று குறிப்பிட்டுள்ள இராசியில் கட்டத்தில் நிரப்பினாலே போதுமானது.

எடுத்துக்காட்டாக, குழந்தை வைகாசி 7 ஆம் தேதி பிறந்திருந்தால் பஞ்சாங்கத்தில் 8 ஆம் பக்கம் சூரியன் (ரவி) வைகாசி 7க்கு நேர் கார்த்திகை 4 என்றிருக்கும். உடனே இராசியில் சூரியனை ரிஷபத்தில் எழுதிய பின் அம்சத்தைக் கவனிக்கவும் அதில் மீனம் என்று இருக்கும். எனவே அம்சத்தில் மீனத்தில் சூரியனைப் போடவும்.

அதேபோல் சந்திரன் உத்திரட்டாதி 1 ஆம் பாதம் என்றால் அம்சத்தில் சந்திரனைச் சிம்மத்திலும் இராசியில் மீனத்திலும் எழுதவும். செவ்வாய் வைகாசிக்கு 7 இல் 56.29. கார்த்திகை 4 என்று எழுதியிருக்க செவ்வாயை முறையே இராசி – அம்சத்தில் ரிஷப – மீனத்தில் எழுதவும்.

சிலநேரம் முன்பின் தேதிகளில் கிரகம் பெயர்ச்சியாகி இருக்கும். குழந்தை 7ஆம் தேதி பிறந்திருப்பதால் 6 ஆம் தேதி பெயர்ச்சியான புதனை வைகாசி 6-8 க்கு இடையேயான பரணி 2- மேஷ கன்னியில் எழுதவும். இதற்கு ஒருபட்டியல் உண்டு. அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**5. நட்சத்திரம், பாதம், நவாம்சம் கட்டம் பட்டியல்**

| **நட்சத்திரம்** | **பாதம் 1** | **பாதம் 2** | **பாதம் 3** | **பாதம் 4** |
|---|---|---|---|---|
| 1. அசுபதி, மகம், மூலம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 2. ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 3. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 4. பரணி, பூரம், பூராடம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 5. மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 6. பூசம், அனுஷம், உத்திரட்டாதி | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 7. கார்த்திகை, உத்திரம், உத்திராடம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
| 8. திருவாதிரை, சுவாதி, சதயம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
| 9. ஆயில்யம், கேட்டை, ரேவதி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |

6. மேற்சொன்னது விரிவானது. இன்னும் சுருங்கச் சொன்னால்:

1. அசுபதி, மகம், மூலம், ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய 9 நட்சத்திரங்களில் இராசியில் முதல் பாதத்தில் லக்னமோ நட்சத்திரமோ இருந்தால் மேஷ நவாம்சம் என்றும் மேற்கண்ட நட்சத்திரம் 2 ஆம் பாதத்தில் நட்சத்திரம் அல்லது லக்னம் அமைந்தால் ரிஷப நவாம்சம்

என்றும், மூன்றாம் பாதமானால் மிதுன நவாம்சம் என்றும், 4ஆம் பாதம் என்றால் கடக நவாம்சம் என்றும் கொள்ள வேண்டும்.


2. பரணி, பூரம், பூராடம், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதியில் நட்சத்திரமோ லக்கினமோ வந்தால் முதல் பாதமானால் சிம்மம், இரண்டாம் பாதமானால் கன்னி, 3 ஆம் பாதமானால் துலாம், 4 ஆம் பாதமானால் விருச்சிகம் நவாம்சம் என்றும் கொள்ள வேண்டும்.


3. அதே போல் கார்த்திகை, உத்திரம், உத்திராடம், திருவாதிரை, ஸ்வாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, ரேவதி என்றால் 1 ஆம் பாதமானால் தனுசு, 2 எனில் மகரம், 3 எனில் கும்பம், 4 எனில் மீனம் நவாம்சம் எனக் கொள்ள வேண்டும்.

இதைவிட சுருக்கமானது பஞ்சாங்கத்தைப்பார்த்து எழுதுவதே. இனி இராசி அம்ச விளக்கப்படம். மேற்சொன்னது படிக்கும் போது குழப்பமடைய வேண்டாம். பழகப்பழக சரியாய் எழுத வரும். ஏற்கெனவே எழுதிய ஜாதகத்தை மீண்டும் எழுதுவதோ அல்லது எழுதப்பட்ட ஜாதகத்தைத் திருத்துவதோ கூடவே கூடாது.


**விளக்கப் படம்:**


1. அசுபதி 2 இல் லக்னம் பரணி 3 இல் சந்திரன்




2. கார்த்திகை 3 இல் லக்னம் புனர்பூசம் 4 இல் சந்திரன்



# பொதுவான விவரங்கள்

**ஜாதகம் பார்க்கப் புகுமுன்பு ஒரு சோதிடர் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்:**

1. ஒருவர் ஜாதகத்தில் லக்னமும் இராசியும் மறைந்திருந்தால் அதாவது மீனம் லக்னம் – சிம்மம் இராசி, மிதுனம் லக்னம் – விருச்சிகம் இராசி, அதாவது ஜாதகர் மீனம் லக்னம் – சிம்மம் இராசிக்காரராகவோ, மிதுனம் லக்னம் – விருச்சிகம் இராசிக்காரராகவோ இருந்தால் அவருக்கு அவரே விரோதியாவார். அதாவது லக்னம் இராசிக்கு 6 மற்றும் 8, 12 இல் இருப்பது சுயவிரோதம்.

2. லக்னம் புனர்பூசத்திலும் இராசி திருவாதிரையிலும் இருந்தால் (பூனை – நாய்) சுயவிரோதியாவார் அதாவது லக்கினமும் சந்திரனும் பகையோராக இருந்தால் சுயவிரோதியாவார். பேசக்கூடாததைப் பேசி கெட்டபெயர் எடுத்து நல்லவாய்ப்புகளை இழப்பார்.

3. சோதிடர்கள் திடீரென்று ஜாதகம் பார்க்கும் போது ஆங்கிலத்திலோ, பிறமொழியிலோ பேசாதிருப்பது நல்லது.

4. லக்னத்தில் சனி இருக்கப்பட்டவர், குரு – கேது வர்கோத்தமம் ஆன ஜாதகர், தனுசு லக்னம்– மீனம் இராசிக்காரர்கள், மிதுனம் லக்னம் – கன்னி இராசிக்காரர்கள் சுய மரியாதைக்காரராவார்.

5. ஒருவர் ஜாதகத்தில் குரு, சுக்கிரன் ஆட்சியானாலும் பரிவர்த்தனையானாலும் வல்லரசுபோல் இருப்பார்.

6. மீனம், விருச்சிகம், கடகத்தில் இராசியிலோ அம்சத்திலோ கிரகங்கள் இருந்தால் 100% வெளிநாட்டு யோகமுண்டு. ரிஷபம், சிம்மம், தனுசில் கிரகங்கள் இருந்தால் தீவில் வசிப்பார்.

7. புதன் எந்த லக்னமாய் இருந்தாலும் லக்னத்துக்கு 7இல் இருந்தால் ஆண் ஜாதகமானால் ஆண்மையற்றவர். பெண்ணாய் இருந்தால் விதவை அல்லது ஸ்டாப்நர்சு ஆவார்.

8. எல்லா லக்கினக்கரார்களும் இராசிக்காரர்களும் நட்சத்திரக்காரர்களும் கம்ப்யூட்டர் கல்வி பயிலும் வாய்ப்பு பெறுவர். மற்றப் படிப்புகளுக்குக் கிரககாலம் தேவை.

9. எல்லா நட்சத்திரக்காரர்களும் காதல் வயப்படுபவர்கள். உங்கள் பெண்/ பையன் ரொம்ப நல்லவர் காதல் வயப்படமாட்டார்கள் என்று ஆறுதல் வார்த்தை கூறாமல் கிரகங்களை 7ஆம் அதிபதி, சுக்கிரனை ஆராய்ந்து பலன் சொல்லவும்.

10. தேவ – அசுர கணங்களில் பிறந்தவர்களை பில்லி சூனியம் ஏவல் பாதிக்காது; மனித கணங்களைப் பாதிக்கும் என்பது தவறு. அதாவது மனித கணங்கள் 100% பாதிப்பையும் அசுர கணங்கள் 75% பாதிப்பையும் தேவ கணங்கள் 50% பாதிப்பையும் பெறுவர்.

11. லக்னாதிபதியோ இராசியாதிபதியோ லக்னத்துக்கு 6-8-12 இல் மறைவது நல்லதல்ல. ஒரு வேளை லக்னாதிபதியும் இராசியாதிபதியும் மறைந்திருந்தால் இராஜ யோகமுண்டு.

12. 10-11 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையானாலோ ஆட்சி, உச்சம் பெற்றாலோ கோவில் ஸ்தபதியாவார்.

13. ஐந்தறிவு ஜீவன்கள் பசு, பாம்பு கிளி ஆகியவற்றைக் காப்பாற்றலாம். பராமரிக்கலாம். வணங்கத் தக்கவையல்ல. பசு அடிப்படைப் பொருளான பாலைத் தருவதால் பசுவைத் தெய்வமாகக் கருதினர்.

14. எந்தத் தெசையிலும் சுயபுக்தி நன்றாய் இருக்கக்கூடாது. அப்படி அமைந்தால் மீதமுள்ள தெசாகாலம் சுமாராய் அமையும்.

15. லக்னமோ இராசி (சந்திரனோ) வர்கோத்தமமானால் வாழ்வு சுகம் தரும். எந்தக் கிரகமும் வர்கோத்தமமானால் அந்தத் தெசை தெளிவு – யோகமானதே.

16. கணவர் மனைவிக்குத் தெசாசந்தி வந்தால் அந்தத் தெசைநாதன் இருவர் ஜாதகத்திலும் 5, 11 போன்ற சுப வீடுகளில் இருந்தால் பலன்கள் சிறக்கும். எனவே தெசாசந்தியைப்பற்றிய கவலை வேண்டாம். மகன் – தந்தைக்கு ஒரே தெசை நடப்பதும் பாதகமில்லை.

17. ஏழரைச் சனியோ அட்டமச்சனியோ நடக்கும்போது சனி தெசை நடந்தால் யோகம் தரும்.

18. மேஷம், சிம்மம், தனுசு இவை மூன்றும் நெருப்பு ஆதிக்கம் உள்ளவை. ரிஷபம், கன்னி, மகரம் இவை மூன்றும் நில ஆதிக்கம் உள்ளவை. கடகம், விருச்சிகம், மீனம் இவை மூன்றும் நீர் ஆதிக்கம் உள்ளவை. மிதுனம், துலாம், கும்பம் இவை மூன்றும் காற்று ஆதிக்கமுள்ளவை. இதைக்கொண்டே ஒருவர் தொழில் அமையும்.

19. புனர்பூசம், ஆயில்யம் நட்சத்திரக்காரர்கள் பூனை மற்றும் நாய் வளர்க்கக்கூடாது. திருவாதிரை, மூலம், அனுஷம், கேட்டை நட்சத்திரக்காரர்கள் நாய் – பூனை வளர்க்கக்கூடாது.

20. மீனம் இராசி – சிம்மம் லக்னக்கரர்கள் பிறரைக் கௌரவப்படுத்தித் தன்னைத்தாழ்த்திக் கொள்வர். திருவாதிரை நட்சத்திரப் பெண் உடல் ஊனமுற்றவரை மணப்பார். இரக்கப்பட்டு ஏமாறுவர்.

21. பூரட்டாதி நட்சத்திரக்காரர்களும் திருவோணத்தாரும் திடீரென்று முகத்தைத் திருப்பிக் கொள்வர்.

22. பூராடத்தில் குருவும்/ புனர்பூசத்தில் சுக்கிரனும் இருப்பது உட்பரிவர்த்தனை நல்ல யோகம். பெரும்பதவி உண்டு.

23. குரு, சுக்கிரன் சேர்க்கை மாவட்ட ஆட்சியர் ஆவார்

24. இராகு- கேது பரிவர்த்தனை ஆகாது.

00000

# பாடம் 3 – இராசியும் பொதுத் தன்மைகளும்

## 1. பழங்களும் இராசிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. மேஷம் – | ஆப்பிள், வெள்ளரி | 7. துலாம் – | கொய்யா, விளாம் |
| 2. ரிஷபம் – | நேந்திரன், கிச்சிலி | 8. விருச்சிகம் – | பலா, பேரி |
| 3. மிதுனம் – | சீத்தா, அன்னாசி | 9. தனுசு – | இலந்தை, பூவன் |
| 4. கடகம் – | பேரீட்சை, வாழை | 10. மகரம் – | எலுமிச்சை, மொந்தன் |
| 5. சிம்மம் – | அத்தி, மாதுளை | 11. கும்பம் – | மா, பேயன் |
| 6. கன்னி – | திராட்சை, தக்காளி | 12. மீனம் – | முலாம், பப்பாளி |

## 2. பூக்களும் இராசிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. மேஷம் – | சாமந்தி | 7. துலாம் – | அலரி |
| 2. ரிஷபம் – | திருநீற்று பத்திரி | 8. விருச்சிகம்– | கத்தரி, அல்லி |
| 3. மிதுனம் – | துளசி | 9. தனுசு – | ரோஜா |
| 4. கடகம் – | மல்லிகை | 10. மகரம் – | சூரியகாந்தி |
| 5. சிம்மம் – | தாமரை | 11. கும்பம் – | அல்லி |
| 6. கன்னி – | மரமல்லி | 12. மீனம் – | நந்தியாவட்டை |

## 3. கிழமையும் கிரகமும்

ஞாயிற்றுக்கிழமையில் பிறந்தவருக்கு நீச்சச் சூரியன் ஒன்றும் செய்யாது.

சனிக்கிழமையில் பிறந்த பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்குச் சனி தெசை யோகபலன் தரும்.

அதேபோல் திங்கட்கிழமையில் பிறந்தவரை நீச்சச் சந்திரன், செவ்வாய் கிழமையில் பிறந்தவரை நீச்ச செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பிறந்தவரை நீச்ச புதன், குரு, சுக்கிரன் ஒன்றும் செய்யாது.

அதேபோல் ரேவதி நட்சத்திரக்காரரை நீச்ச புதன் ஒன்றும் செய்யாது.

**4. காய்கறிகளும் இராசிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. மேஷம் – | பீர்க்கங்காய், வாழைக்காய் | 7. துலாம் – | கத்தரி, பயறு |
| 2. ரிஷபம் – | பீன்ஸ், பரங்கி பூசணி | 8. விருச்சிகம்– | கோஸ், வெங்காயம் |
| 3. மிதுனம் – | சர்க்கரைவள்ளிக்கிழங்கு, முருங்கை | 9. தனுசு – | முள்ளங்கி, உருளை |
| 4. கடகம் – | பலா, வெண்டை | 10. மகரம் – | குடமிளகாய், உருளை |
| 5. சிம்மம் – | சுரக்காய், கீரைகள் | 11. கும்பம் – | கொத்தவரை, புடல் |
| 6. கன்னி – | பாகல், புதினா | 12. மீனம் – | நெல்லி, பூசணி |

**5. பயிர்களும் இராசிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. மேஷம் – | கோதுமை, | 7. துலாம் – | சாளம், |
| 2. ரிஷபம் – | அவரை, | 8. விருச்சிகம் – | கம்பு, |
| 3. மிதுனம் – | கடலை, | 9. தனுசு – | நெல், |
| 4. கடகம் – | உளுந்து, | 10. மகரம் – | கேழ்வரகு, |
| 5. சிம்மம் – | பயறு, | 11. கும்பம் – | துவரை, |
| 6. கன்னி – | கொள்ளு, | 12. மீனம் – | கறிவேப்பிலை இலை |

மேற்கண்ட பழம், பூ, காய், கனிகளைப் பயன்படுத்தினாலோ, வாணிபம் செய்தாலோ இலாபம் உண்டாகும்.

**6. மரங்களும் இராசியும்:**

அடுத்து எந்தெந்த இராசிக்காரர்கள் எந்தெந்த மரம் வளர்ப்பது நல்லது என்று பார்க்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. மேஷம் – | வேப்ப மரம் | (அல்லது) | கொய்யா |
| 2. ரிஷபம் – | அசோகு மரம் | (அல்லது) | பனை |
| 3. மிதுனம் – | புன்னை மரம் | (அல்லது) | பலா |
| 4. கடகம் – | வாதுமை மரம் | (அல்லது) | நாகமரம் |
| 5. சிம்மம் – | பாக்கு மரம் | (அல்லது) | மாமரம் |
| 6. கன்னி – | மூங்கில் | (அல்லது) | அரசமரம் |
| 7. துலாம் – | ஆல மரம் | (அல்லது) | வாஜா மரம் |
| 8. விருச்சிகம் – | மலை வேம்பு | (அல்லது) | பூவரசுமரம் |
| 9. தனுசு – | இலந்தை மரம் | (அல்லது) | செம்பூமரம் |

10. மகரம் – தென்னை மரம் (அல்லது) பனை மரம்

11. கும்பம் – அத்தி மரம் (அல்லது) மணி பிளாண்ட்

12. மீனம் – நெல்லி மரம் (அல்லது) சவுக்கு மரம்

*பொது: 1. லக்னத்திற்கு 4 இல் புதன், 10 இல் சந்திரன் இருந்தால் வாகன யோகம் உண்டு.*

*2. எந்த இராசியிலாவது சூரியன், சந்திரன், செவ்வாய் சேர்ந்தால் சினிமா தியேட்டர் வைப்பார்.*

*3. கடகம் லக்னம் மேஷம் இராசி மீனவராவார்.*

*4. கேதுவும் 10 ஆம் அதிபதியும் சேர்ந்தால் புளி வியாபாரியாவார்.*

**7. இராசியும் விளையாட்டும்**

1. மேஷம் – பளு தூக்குதல் போட்டி

2. ரிஷபம் – சதுரங்கம், கேரம்

3. மிதுனம் – கூடைப் பந்து

4. கடகம் – நீச்சல், வரிப் பந்து (டென்னீஸ்)

5. சிம்மம் – வேக ஓட்டம்

6. கன்னி – உடற்பயிற்சி (ஜிம்)

7. துலாம் – வேகப் பந்து வீச்சு

8. விருச்சிகம் –கோக்கோ, கால் பந்து

9. தனுசு – சிலம்பம், வில்வித்தை

10. மகரம் – வேல் எறிதல், கிரிக்கட்

11. கும்பம் – மலையேற்றம், விண்வெளி சாகசம்

12 மீனம் – நடுவர்

**8. விலையேற்றம் இறக்கம்**

சூரியன் உச்சமானால்: எரிபொருள் விலையேறும். நீச்சமானால் எரிபொருள் பற்றாக்குறை உண்டு.

சந்திரன் உச்சமானால் பணவீக்கமுண்டாகும். நீச்சமானால் குளம்,குட்டை வற்றும்.

செவ்வாய் நீச்சமானால்: நில விலை இறங்கும். உச்சமானால் ரியல் எஸ்டேட், வெங்காயம், தக்காளி, பீட்ரூட் விலை ஏறும்.

புதன் உச்சமானால்: ஆடிட்டர், தங்கம் டிமாண்ட் ஏற்படும். நீச்சமானால் பால், தயிர் உற்பத்தி குறையும்.

குரு உச்சமானால்: தங்கம் விலையேறும். நீச்சமானால் தங்கம் விலை குறையும்.

சனி உச்சமானால்: ராக்கெட், ஏவுகணை சாதனையாகும். நீச்சமானால் தடைகள் உண்டு.

இராகு உச்சமானால் தகவல் தொடர்பு உயர்வு. நீச்சமானால் குடல்புண், மின்னோட்டம் நிற்றல்.

கேது உச்சமானால்: மருத்துவப் படிப்பு டிமாண்ட் உண்டு. நீச்சமானால் வியாதிகள் பெருகும்.

மேற்சொன்னவை உலகளாவிய ஜாதக பலன்கள்.

**12. தொலைபேசி கலந்தாய்வு:**

1. தொலைதூரத்தில் உள்ளவர்கள் சிலநேரம் பொருத்தம் பார்ப்பதை போன்மூலம் நடத்துவர். இதற்கு சோதிடர் அனுமதிக்கக் கூடாது. ஒருவேளை போனில் தவறாய்ப் படித்தால் நல்லவர்கள் சேருவதோ கெட்டவர்கள் சேருவதோ மாற்றப்படலாம். இது தவறானது. அதே போல் போனில் ஜாதகக் கட்டங்களைப் படிக்க நேர்ந்தால் தவிர்க்க முடியாத பட்சத்தில் பிறந்த தேதி, வருடம் முதலியவற்றை நிச்சயித்த பிறகே பலன் கூற வேண்டும்.

2. ஓர் அறையில் பலபேர் மத்தியில் அமர்ந்து ஜாதகம் பார்க்கக்கூடாது. தனி அறையில் சம்பந்தப்பட்டவரின்றி பிறரை அனுமதிக்கக்கூடாது.

3. கைரேகை மற்றும் ஜோதிடத்தை அடுத்தடுத்துப் பார்க்கக் கூடாது.

4. அரசியல்வாதிகள் வர நேர்ந்தால் எக்காரணம் கொண்டும் பிறகட்சிகளைப் பற்றிப் பேசுவதோ, வந்தவரின் தொடர்புடைய கட்சிக்கு ஆதரவாய்ப் பேசுவதோ, அதுவே நிலையான ஆட்சி என்று கூறுவதோ கூடாது.

5. பரிகாரம் என்ற பெயரில் அதிகப் பணம் கேட்பது கூடாது. தொலைதூரத்து ஊர்களுக்குத் தீர்த்த யாத்திரை செய்யச் சொல்லக் கூடாது. எல்லா ஸ்வாமிகளும் ஒன்று என்பதால் உள்ளூர் கோவிலையே சிபாரிசு செய்ய வேண்டும்.

6. ஜாதகம் பார்த்து முடிந்ததும் வாயில்வரை சென்று வழி அனுப்பக்கூடாது. இவர்கள் குருஸ்தானத்தில் இருப்பதால் இப்படி நடந்து கொள்ளக் கூடாது.

7. எடுத்துக்காட்டுக் கதைகளைச் சொல்வது மனதிற்கு இனிமை தரும்.

OOOOO

## பாடம் 4 - சோதிடர் கடைப்பிடிக்க வேண்டியவை

இக்காலத்தில் எல்லாருக்குமே ஓரளவு அஷ்டமி, நவமி பார்ப்பதும், நாள் பார்த்து வருவதும் தெரிந்துள்ளதால் ஜாதகம் பார்க்க வருபவரிடம் இதுபற்றிப் பேசவேண்டியதில்லை. எனினும் அவர்களுக்கு ஞாபகப்படுத்துவது நல்லது.

1. முன்காலத்தில் மின்வசதி இல்லாததால் சூரியன் மறைவுக்குப் பின் ஜாதகம் பார்க்கலாகாது என்ற விதி இருந்தது. இக்காலத்தில் மின்சார சாதனங்கள், வசதிகள் வந்துள்ளதால் இரவு 8.00 மணி வரை ஜாதகம் பார்க்கலாம்.

2. பொருத்தம் பார்க்க வருபவர்கள் அஷ்டமி, நவமியில் வந்து விட்டால் அவர்களிடம் இது போன்ற நாட்களில் வர வேண்டாம் என்றுரைத்துப் பொருத்தம் பார்ப்பதே நல்லது.

3. அக்னி நட்சத்திரம், ஆடி, ஆனியில் ஜாதகம் மற்றும் பொருத்தங்கள் பார்ப்பது தவறல்ல.

16-20 வயது சிறுவர்களோ சிறுமியர்களோ ஜாதகம் பார்க்க வந்தால் கட்டாயம் பார்க்க வேண்டாம். அவர்களை வீட்டிலுள்ள பெரியவர்களுடன் வந்து பார்க்க அறிவுறுத்தி அனுப்பி விடவும்.

4. ஜாதகம் சேரவில்லை என்றால் வெளிப்படையாகவே சொல்லி விடலாம். அவர்கள் வருந்துவார்கள் என்பதற்காகச் சுமாராய் சேர்ந்துள்ளது என்று சொல்ல வேண்டாம்.

5. ஒரு சோதிடருக்குச் சமுதாயத்தின் மேல் அக்கறை இருக்க வேண்டும். கலப்பு மணம் மற்றும் பெற்றோருக்குத் தெரியாமலோ கணவர் / மனைவிக்குத் தெரியாமலோ ஜாதகம் பார்க்க வந்தால் அனுமதிக்க வேண்டாம். தாம் ஒரு சமுதாயக் காவலர் என்ற பொறுப்போடு ஜாதகம் பார்ப்பது நல்லது.

6. அரசியல்வாதிகளோ சமூகப் பிரமுகர்களோ வந்து போன விஷயங்களை அடுத்தவரிடம் சொல்லக்கூடாது.

ஒரே அறையில் இரு குடும்பங்கள் இருப்பதைத் தவிர்க்கவும். தனித்தனியே ஜாதகம் பார்க்கவும்.

7. ஜாதகம் பார்க்கும்போதே இவர்கள் வசதியானவர்கள், வசதியற்றவர்கள் என்று தெரியவரும். அதன்படி அவர்கள் தரும் ஆலோசனைக் கட்டணத்தை ஏற்கலாம் / தவிர்க்கலாம்.

8. கைரேகை, எண்கணிதம், சோதிடம் இவற்றை ஒப்பிட்டுப் பேசாமல் ஜாதகத்தை மட்டும் பார்த்து அனுப்புதல் நலம்.

9. வருபவர்கள் சோதிடரைக் கடவுள் போல் நினைப்பதால் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சோதிடர் புன்னகையுடன் பதில் சொல்வது நல்லது.

10. ஜாதகம் பார்ப்பதால் பெரிய மனிதர்கள் தொடர்பு வரும். அது சமூக வளையத்தைப் பெரிதாக்கவும், இருந்த இடத்திலேயே சிலகாரியங்களைச் சாதிக்கவும் வழிவகுக்கும்.

11. சோதிடர் யாருக்கும் நமஸ்காரம் என்று சொல்லக்கூடாது. பிறரைப் பெரியவர் என்ற பொருளில் வேண்டாம்.

12. வருபவர்கள் எதிர்படுபவர்கள் அவர்களுடைய நடை உடை பாவனைகளைக் கவனிப்பது ஜாதகம் பார்க்கப் பயன்படும். ஒருவர் கூறும் பிரச்சினைகளிலிருந்தும் அவர்களுடைய ஜாதக அமைப்பிலிருந்தும் பலவற்றைக் கற்கலாம்.

புராணக்கதைகள் பலவற்றைத் தெரிந்து வைத்துக் கொண்டு, சோதிடம் பார்க்க வருபவர்களுக்கு நடுநடுவே அவற்றைச் சொல்லி ஆறுதல் தர வேண்டும்.

**13) தெசை சந்தி:** திருமணப் பொருத்தம் பார்க்கும்போது ஆண்-பெண் இருபாலருக்கும் ஒரே தெசை வருவது தெசா சந்தி. அப்படி வரும்போது சேரவில்லை என்று சொல்லக்கூடாது. எடுத்துக்காட்டாக, இருவருக்கும் நடக்கும் தெசை சனி எனில் சனி 6, 10, 11 இல் இருக்குமாயின், தாராளமாய் பொருத்தம் செய்யலாம்.

**எடுத்துக்காட்டு:** பெண் கார்த்திகை நட்சத்திரம், பையன் ரோகிணி நட்சத்திரம்.

பெண் பிறந்த தேதி 15-08-1998. பையன் பிறந்த தேதி 18-05-1996 என்று இருக்கின்றன.

பெண்ணுக்குச் சூரியன் தெசை இருப்பு: 3 வருடம், 2 மாதம், 10 நாள்.

பையனுக்குச் சந்திரன் தெசை இருப்பு : 5 வருடம் 8 மாதம், 10 நாள்.

இவ்வாறு இருவரது ஜாதகக் குறிப்புகளைக் கொண்டு அடுத்தடுத்து வரும் தெசைகளைக் கணக்கிட வேண்டும். ஒரே தெசை எப்போது வருகிறது எனப் பார்க்க வேண்டும்.

| | பெண் | | ஆண் |
|---|---|---|---|
| பிறந்த தேதி | : 15-08-1998 | | : |
| சூரியன் தெசை இருப்பு: | 10-02- 03 (+) | | : |
| சூரியன் தெசை முடிவு | : 25-10-2001 | பிறந்த தேதி | : 18-05-1996 |
| சந்திரன் தெசை | : 10 வருடம் | சந்திரன் தெசை இருப்பு: | 10-08- 05 (+) |
| முடிவு | : 25-10-2011 | சந்திரன் தெசை முடிவு | : 28-01-2002 |
| செவ்வாய் தெசை | : 7 வருடம் | செவ்வாய் தெசை | : 7 வருடம் |
| முடிவு | : 25-10-2018 | முடிவு | : 28-01-2009 |

| | | | |
|---|---|---|---|
| இராகு தெசை | 18 வருடம் | இராகு தெசை : | 18 வருடம் |
| முடிவு : | 26-10-2036 | முடிவு : | 28-01-2027 |

இருவருக்கும் (பெண்ணிற்கு 2018-2036), (பையனுக்கு 2009-2027) வரை ஒரே இராகுதெசை நடப்பது தவறா? தவறில்லையா? இருவர் கட்டத்திலும் இராகு 9, 11 ஆகிய இடங்களில் இருந்தால் பொருத்தம் சேரும்.

**(14) தொடர்தெசை**

அதே போல் தொடர்தெசை என்று ஒன்று உள்ளது. ஆண், பெண் இருவரும் ஒருவருக்குக் குரு 6 இல் இருந்தும் குரு 11 இல் இருந்தும் தொடர் தெசை வந்தால் திருமணம் செய்யக்கூடாது. பொருந்தாது. பொருத்தம் பார்க்க வரும் பெண் ஜாதகத்தில் பெண் பரணி நட்சத்திரம் என்றும் பையன் அசுபதி என்றும் கொள்வோம்.

பெண் பிறந்த தேதி : 22-02-1999, பையன் பிறந்த தேதி: 18-04-1996.

பெண் பரணி-சுக்கிரன் இருப்பு: 10 வருடம், 2 மாதம், 3 நாள்.

பையன் அசுபதி கேது இருப்பு: 3 வருடம், 2 மாதம், 1 நாள்.

| | | | |
|---|---|---|---|
| பிறந்த தேதி : | 22-02-1999 | பிறந்த தேதி : | 18-04-1996 |
| சுக்கிரன் தெசை இருப்பு: | 3-02- 10 (+) | கேது தெசை இருப்பு : | 1 - 02- 3 (+) |
| சுக்கிரன் தெசை முடிவு : | 25-04-2009 | கேது தெசை முடிவு : | 19-06-1999 |
| சூரியன் தெசை : | 6 | சுக்கிரன் தெசை : | 20 |
| சூரியன் தெசை முடிவு : | 25-04-2015 | சுக்கிரன் தெசை முடிவு : | 19-06-2019 |
| சந்திரன் தெசை : | 10 | சூரியன் தெசை : | 6 |
| சந்திரன் தெசை முடிவு : | 25-04-2025 | சூரியன் தெசை முடிவு : | 19-06-2025 |

பெண்ணுக்கு 25.4.2025 இல் சந்திரன் தெசை முடிந்ததும், பையனுக்கு 19.6.2025 இல் சந்திரன் தெசை தொடங்குவதே தொடர்தெசை. இப்படிப்பட்ட ஜாதகத்தை வரும் சந்திரன், செவ்வாய், இராகு, குரு கிரகங்கள் 5, 11 ஆகிய நல்ல வீட்டில் இருந்தாலே ஜாதகத்தைச் சேர்க்க வேண்டும். இல்லையெனில் சேர்க்கக்கூடாது.

குழந்தை பிறந்து ஓராண்டு ஆகி ஆண்டு நிறைவு ஆன பின், வளர்பிறையில் பிறந்த தேதி, பிறந்த நேரம் காலை மாலை இரவு, பெயர் ஆகியவற்றை அவர்கள் கையால் எழுதி வாங்கி அவர்கள் எதிரிலேயே பஞ்சாங்கத்தைப் பார்த்து எல்லாம் சரியாக உள்ளதா என்று ஆராய்ந்து ஜாதகம் எழுத வேண்டும்.

**ஆதியந்த பரம நாழிகை கணக்கிடுவது எப்படி?**

ஒரு நட்சத்திரத்தின் மொத்த நேரமே ஆதியந்த பரம நாழிகையாகும்.

குழந்தை பிறந்த அன்று அந்த நட்சத்திரம் 60.00 நாழிகை என்று பஞ்சாங்கத்தில் போட்டிருந்தால் முதல் நாளும் அந்த நட்சத்திரம் மீதியிருக்கும். குழந்தை பிறந்த மறுநாளும் நட்சத்திரம் இருக்கும். அதனைக் கவனித்து எழுத வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை 19-08-1995 காலை 9 மணிக்குப் பிறந்திருக்கிறது.

அன்றைய (19-08-1995) விவரம்: ரோகிணி நட்சத்திரம் 60.00 நாழிகை என்றிருக்கும். அப்படி இருக்க, நாம் முதல் நாள் அதாவது 18-08-1995 இல் பார்த்தால் கார்த்திகை 58.56 நாழிகை என்று இருக்கும். பிறந்த தேதிக்கு அடுத்த நாள் அதாவது 20-08-1995 இல் பார்த்தால் ரோகிணி நாழிகை 5.04 என்று இருக்கும்.

எனவே, 60.00 நாழிகையில் இருந்து முதல் நாள் கார்த்திகை நட்சத்திரத்தின் நாழிகையைக் கழித்து, மறுநாள் ரோகிணி 60.00 நாழிகையுடன் கூட்டி, 20 ஆம் தேதி மீதியுள்ள ரோகிணி நாழிகையை (5.04) யும் மொத்தமாகக் கூட்ட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | அதாவது, 18-08-1995 | : 60 . 00 | நாழிகை |
| | அன்று கார்த்திகை நேரம் | : 58 . 56 | நாழிகை போக |
| | அன்று மீதி ரோகிணி நேரம் | : 1 . 04 | நாழிகை |
| | 19-08-1995 ரோகிணி | : 60 . 00 | முழு ரோகிணி |
| | | 61 . 04 + | |
| | 20-08-1995 ரோகிணி | 5 . 04 | (அன்றைய ரோகிணி) |
| | மொத்தம் | 66 . 08 | இதுவே ஆதியந்த பரம நாழிகை. |

இதுவே அந்த நட்சத்திரத்தின் மொத்த நாழிகை.

திதியில் அப்படிப் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை.

3) சிலநேரம் ஒரே நாளில் நட்சத்திரம் முடிந்துவிடும். அப்போது அதையே ஆதியந்த பரமநாழிகையாய் எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணம்:

ஒரு குழந்தை 10.03.2000 ல் மதியம் 1.00 மணிக்குப் பிறந்திருந்தால் அன்று அசுபதி 0.40 நாழிகையே உள்ளது. பின்னர் அன்று முழுவதும் பரணி இரவு காலை 5 மணி வரை. பரணி 57.13 என்று உள்ளது. அப்போது பரணி ஆதியந்த பரமநாழிகை 57.13 மட்டுமே கொள்ள வேண்டும்.

15. குழந்தை பிறந்து ஓராண்டு ஆகி, ஆண்டு நிறைவு ஆன பின், வளர்பிறையில் பிறந்த தேதி , பிறந்த நேரம் / காலை / மாலை / இரவு, பெயர் ஆகியவற்றை அவர்கள் கையால் எழுதி வாங்கி, அவர்கள் எதிரிலேயே பஞ்சாங்கத்தைப் பார்த்து எல்லாம் சரியாய் உள்ளதா (கிழமை உட்பட) என்று ஆராய்ந்து ஜாதகம் எழுத வேண்டும்.

இவை ஜாதகம் கணிக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை. இவ்வாறு முன்னர்க் கணிதத்தில் பார்த்ததுடன் மூன்று வகை கணிப்பு உள்ளது.

சில நேரம் இரவு 3 மணியுடன் நட்சத்திரம் முடியும். குழந்தை இரவு 2.00 மணிக்குப் பிறந்திருக்கும். அப்போது 3 மணி வரையுள்ள நட்சத்திரத்தையே குழந்தை பிறந்த நட்சத்திரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தை இரவு 3 மணிக்கு மேல் இரவு 4 மணிக்குப் பிறந்திருந்தால் அடுத்த நட்சத்திரத்தையே குழந்தை பிறந்த நட்சத்திரமாகக் கொள்ள வேண்டும்.

16) சோதிடர் ஜாதகம் பார்க்கும்போது ஆங்கிலத்தில் திடீரெனப் பேசக்கூடாது என்று முன்னர் பார்த்தோமல்லவா? அதேபோல் ஜாதகம் பார்க்க வருபவர்கள் கேட்டால் ஒழிய விசிட்டிங் கார்டு தரக்கூடாது.

17) அவர்களை வீணாய்ப் புகழ்ந்து பேசக்கூடாது.

18) ஓரிரு சந்தேகங்கள் என்றால் போனில் பதில் சொல்லலாம். வெளியூரில் இருந்து வருவதை தவிர்க்க உதவினால் மதிப்பு பன்மடங்கு கூடும்.

பொருத்தத்தை போனில் சொல்லக்கூடாது.

19) ஆண் ஜாதகத்தில் முதல் தெசை முடியும் போது அவரது மனைவி பிறப்பார். இதை வைத்தே கணவர் மனைவி இத்தனை வயது வித்தியாசம் உள்ளவர் என்று சொல்லலாம்.

20) ஜாதகம் பார்க்க வருபவர் ஜாதகக் கட்டத்தில் மீனம், கடகம், விருச்சிகத்தில் (இராசி அல்லது அம்சத்தில் அல்லது இரண்டிலும் ) கிரகங்கள் இருந்தால் வெளிநாட்டு யோகம் இருக்கும். அப்போது வந்திருப்பவர் கிராமியத் தோற்றத்திலோ அழுக்காடையிலோ இருந்தாலும் வெளிநாட்டு யோகம் உண்டு என்று எல்லாருக்கும் ஒரே மாதிரி வஞ்சனையின்றிச் சொல்ல வேண்டும். கொத்தனார்கள் சிங்கப்பூர் செல்வதில்லையா? அல்லது பிற்காலத்தில் போவார்கள்.

21) கடகம், விருச்சிகத்தில், மீனத்தில் 10 ஆம் அதிபதி இருந்தால் (மீனம் – குரு, கடகம்–செவ்வாய், விருச்சிகம்– சூரியன்) கண்டிப்பாய் வாகனம் ஓட்டியே இருப்பார். சர்பத், குளிர் பானக் கடை தொடர்புள்ளவர். இதனைப் பேண்ட், ஷர்ட் அணிந்தவர் வந்தாலும் சொல்ல வேண்டும். வந்திருப்பவர் எவ்வளவு பெரியவரோ சிறியவரோ கட்டத்தில் உள்ளதை அப்படியே கூறுதலே தருமம்.

22) பஞ்சபூதங்களுக்கும் உடலுறுப்புக்களுக்கும் உட்பட்டதே நமக்கு உண்டாகும் தொழில். அதன்படி பார்க்கையில் ஒருவருக்கு சூரியன் உச்சமானால் விண்வெளியில் வேலை பார்ப்பர். நீச்சமானால் தேநீர் கடை வைப்பர். 12 இல் சூரியன் இருந்தால் நெருப்பு சர்வீஸ் பணி அமையும். அதே போல் சந்திரன் உச்சமானாலோ, ஆட்சி, வர்கோத்தமமானாலோ கடல் சம்பந்தம், ஷிப்பிங்கில் வேலை செய்வர். சந்திரன் நீச்சமானால் கம்பவுண்டர். இவ்வாறு ஒருவர் ஜாதகத்தைப் பார்க்கும் போது லக்னம், 5 ஆம் இடம் மற்றும் 10 ஆம் இடத்தை வைத்தே பலன் கூற வேண்டும்.

23) திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இராகு தெசை முதல் தெசையாய் வருவதாலும், அசுபதி, மகம், மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு கேது தெசை முதல் தெசையாய் வருவதாலும் அவர்கள் 6 பேரையும் ஏழு கிழமைகளும் கட்டுப்படுத்தாது.

கார்த்திகை, உத்திரம், உத்திராடக்காரருக்கு ஞாயிற்றுக்கிழமை (சூரியன் தெசை முதல் தெசை என்பதால்) நலம் செய்யும். ரோகிணி, ஹஸ்தம், திருவோணக்காரருக்கு (சந்திரன் தெசையில் பிறப்பதால்) திங்கட்கிழமை நலம் செய்யும். மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டக்காரருக்குச் செவ்வாய்க்கிழமையும், ஆயில்யம், கேட்டை, ரேவதிக்காரருக்குப் புதன்கிழமையும், புனர்பூசம், விசாகம், பூரட்டாதிக்காரருக்கு வியாழக்கிழமையும், பரணி, பூரம், பூராடக்காரருக்கு வெள்ளிக்கிழமையும் (சுக்கிரன் தெசையில் பிறப்பதால்) பூசம், அனுஷம், உத்திரட்டாதிக்குச் சனிக்கிழமையும் நலம் தரும்.

இதில் கிரகங்கள் நீச்சமானால் எதிர்மறையான பலனும், உச்சமானால் உயர்ந்த பலனும், வர்கோத்தமமானால் செல்வாக்கும் தரும்.

OOOOO

## அலகு III

## பாடம் 5 – பரிகாரங்கள்

பரிகாரங்கள் செய்வதால் தலைவிதியை மாற்றமுடியாது என்ற கருத்து எல்லாருடைய உள்ளத்தில் இருந்தாலும், பரிகாரம் செய்யாமல் இருந்தால் ஏதாவது நடந்து விடுமோ என்ற அச்சமும் இருக்கும். அதனால் ஒரு சோதிடர் சமூக நோக்கோடு ஆர்வலர் குணமுடன் வருபவரிடம் எளிய, முடிந்த பரிகாரங்களைச் சொல்லலாம்.

1. எக்காரணம் கொண்டும் தனக்குத் தானமாய் கேட்டுப் பரிகாரம் செய்யச் சொல்லக்கூடாது.

2. மிக தூரத்திலுள்ள கோவிலுக்குச் சென்று வரச் சொல்லக்கூடாது.

3. சொற்று ஜாக்கெட் வழங்கச் சொல்லக் கூடாது.

4. முன்னேறிவரும் இன்றைய விஞ்ஞான காலத்தில் கோவிலில் மின்விளக்கு மற்றும் மின் வசதிகள் இருப்பதால் கோவிலுக்கு எண்ணெய் விளக்கு போடச் சொல்லக் கூடாது. வேண்டியதில்லை.

5. ஜாதகம் பார்க்க வருபவர் செலவிலேயே தானும் (சோதிடரும்) இராமேஸ்வரம், காசி போன்ற ஊர்களுக்குச் செல்லக்கூடாது.

6. வாடிக்கையாளரை ஒன்று திரட்டி கோவிலுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. அவர்கள் வீட்டுக்குப்போய் ஹோமம் செய்விக்கக் கூடாது.

7. பொம்மை செய்து ஆற்றில் விடுதல், காய்–காசு வெட்டுதல் கூடவே கூடாது. இவற்றிற்கு மாறாக,

   1. நட்சத்திரத்துக்குத் தகுந்த மரங்களை வளர்க்கச் சொல்லலாம்.
   2. சுவாமி அபிஷேகத்துக்குப் பொருட்கள் வாங்கித் தரச் சொல்லலாம்.
   3. சிதைந்த கோவிலுக்கு ஏதாவது உதவி செய்யச் சொல்லலாம்.
   4. திருப்பதி வெங்கடாசலபதியும் தங்கள் வீட்டருகிலுள்ள பெருமாளும் ஒருவரே. எல்லா அஞ்சல் பெட்டிகளும் ஒன்றுதான் என்று கூறி, அருகிலுள்ள கோவிலுக்குப் போகச் சொல்லலாம்.

8. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதற்கிணங்க, முதியோர் இல்லங்களை ஊக்குவிக்காமல் உண்மையாகவே துன்பப்படுபவர்களுக்கு இடைத்தரகர் உதவியின்றி தன் கையாலேயே தானம் செய்யச் சொல்லலாம்.

1. சூரியன் நீச்சமானால் தொழுநோய் உள்ளவருக்கும்
2. சந்திரன் நீச்சமானால் காசநோய் உள்ளவருக்கும்
3. செவ்வாய் நீச்சமானால் புற்று நோய் தொல்லை உள்ளவருக்கும்

4. புதன் நீச்சமானால் தோல் நோய் உள்ளவருக்கும்

5. குரு நீச்சமானால் மனநலம் குன்றியவருக்கும்

6. சுக்கிரன் நீச்சமானால் ஓய்வூதியம் பெறுபவருக்கும்

7. சனி  நீச்சமனால் கைதிகளுக்கும்

8. இராகு நீச்சமானால் ஆடை, ஆபரணம் தானம் யாருக்கு வேண்டுமானாலும்

9. கேது நீச்சமானால் வேதவிற்பன்னருக்கும்  உதவி செய்யச் சொல்லலாம்.

9. அன்னதானம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. அன்னதானம் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி செய்யப்பட வேண்டியது என்பதால் பரிகாரக் கட்டுக்குள் வராது.

10. சூரியன் உச்சமானால் செருப்பும், சந்திரன் உச்சமானால் குடையும், செவ்வாய் உச்சமானால் காய்கறிகளும், புதன் உச்சமானால் பாலும் தானம் செய்யச் சொல்லலாம்.

குரு உச்சமானால் பாடப் புத்தகங்களும்,  சனி உச்சமானால் கால்குலேட்டர் போன்ற பொருளும், சுக்கிரன் உச்சமானால் ஆடைகளும்,  இராகு-கேது உச்சமானால் தோலாடைகளும் தோல்பைகளும் தரச் சொல்லலாம்.

உச்சமாகி அந்தக் கிரகத் தெசையில் உண்டாகும் சிறுதோஷங்கள் கழியவே இந்த ஏற்பாடு.

11. சுக்கிரன் தெசையில் இராகு புக்தியும், இராகு தெசையில் சுக்கிரன் புக்தியும் 3 வருடங்கள் நடக்கும். இராகு தெசையில் இராகு புக்தியும் 2 வருடம், 8 மாதம், 12 நாள் நடக்கும். இக்காலங்கள் கொடுமையானவை. இக்கால கட்டங்களில் குடும்பத்தில் வரிசையாய் மூவர் இறப்பர். இதைத் தடுக்க மேற்கண்ட பரிகாரங்கள் செய்யச் சொல்லலாம். அவரவர் குலவழக்க மூலமந்திரம் செபிக்கச் சொல்லலாம்.

12. எண்ணெய், நவதானியப் பரிகாரங்கள் செய்யச் சொல்ல வேண்டாம். கணவருக்கு உடல் நலமில்லாத போது மனைவியை விரளி மஞ்சள் தானம் செய்யச் சொல்லலாம்.

13. ஜோதிடரிடம் சிலர் தாம் காணும் கனவுக்குப் பலன் கேட்பர். அப்போது பரிகாரம் சொல்லாமல் பயமுறுத்தாமல் ஆறுதலான பலன்கள் சொல்ல வேண்டும்.

14. கூண்டுக்குள் அடைபட  விரும்பாப்  பறவை,  நாய், பூனை வளர்க்கச் சொல்லக்கூடாது.

15. ஐந்தறிவு உள்ள கிளியிடம் சோதிடம் கேட்க ஆறறிவு உள்ள மனிதனுக்குத் தேவை இல்லை.

OOOOO

# பாடம் 6 – அறிந்ததும் அறியாததும்

## 6.1. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

ஞானம் என்பது விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், பரஞானம், அபரஞானம், அஞ்ஞானம் என்று பிரிக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் wisdom, knowledge, sense, positive sense, negative sense என்று கூறுவர். இதில் ஞானம் பொதுவான அறிவையும், மெய்ஞ்ஞானம் என்பது இறையருள் பற்றிய அறிவையும், விஞ்ஞானம் என்பது மேலான அறிவு என்பதையும் குறிக்கும். இதற்கு மேல் இல்லை, நாயகர்–விநாயகர், அதாவது விநாயகரே முதல் தலைவன் என்பது போல், விஞ்ஞானம் என்பது முதன்மையான அறிவு, மேலான அறிவு (prime knowledge, supreme knowledge) என்பதையும் குறிக்கும். மெய்ஞ்ஞானம் என்பது நல்லது. அபர ஞானம் தேவையற்றது.

பொதுவாக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரே கருத்தைத்தான் சொல்கின்றன. மகான்கள் பெரும்பாலும் ஆடு மேய்ப்பவர்களாகவே இருந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டு: மூலர், இயேசு, கிருஷ்ணர்.

பொதுவாக நம் வீட்டுப் பெரியவர்கள் பேசும் போது, கோபமாய் “நீ படித்து பத்தி எறிந்தது போதும்” என்று சொல்வர். அதாவது, அறிவியலைப் பூர்வமாய்ப் படித்தால், மன பயமும், பயத்தால் உண்டான பக்தியும் போய்விடும் என்று பொருள். மேகங்கள் உராய்வதைக் கண்டுபிடித்த பின், இடிஇடித்தால் “அர்ஜுனன் தேர் ஓட்டுகிறான் அர்ஜுனா, அர்ஜுனா என்ற சொன்னால் இடி இடிக்காது” என்ற நம்பிக்கை போய்விட்டது. அர்ஜுன பக்தி எறியப்பட்டுவிட்டது.

அதே போல் ‘வடக்கே மல்லாந்து தலையை வைத்துப் படுத்தால் தலை போய்விடும்‘ (விநாயகர் தலை போல்) என்பது, வட துருவ – தென் துருவ காந்தப் புலனைக் குறிக்கிறது, வடக்கு தெற்காய் படுத்தால் உடலிலே மாற்றத்தை உண்டாக்கும் என்ற உண்மை அறிந்த பின், மாறிவிட்டது. அதே போல், ‘மரத்தடியில் இரவில் படுத்தால் முனி அமுக்கும்‘ என்ற நம்பிக்கை, மரம் ஆக்ஸிஜன்–கார்பன் டை ஆக்ஸைடை வெளி விடுவதால் மூச்சுத் திணறல் வரும் என்பது கண்டு, மறைந்தது. இதுவே பத்தி எறிந்த நிலை. எனவே, விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரே பொருளைத்தான் வெவ்வேறு வடிவில் கூறுகின்றன. ஒன்றை ஒன்று மறுத்தோ தவறென்று நிரூபித்ததோ இல்லை.

அதே போல், இராகு – கேது என்பவை பாம்புகள் அல்ல. சூரியன் சந்திரன் மீது விழும் நிழல் என்பது விஞ்ஞானக் கூற்று. இதையேதான் மெய்ஞ்ஞானம், சோதிடம் சாயா ( நிழல்) கிரகங்கள் என்று இராகு கேதுக்களைச் சொல்கின்றது. ஹீலியம் என்னும் வாயுவை வெளிப்படுத்துவதால் சூரியனுக்கு எல்லவன்

என்ற பெயர் வந்தது என்பது உணரத்தக்கது. இராகு–கேது கிரகணகாலத்தில் விஷவாயுக்கள் வெளியேறும் என்பது விஞ்ஞானம் ஒத்துக் கொண்டுள்ளது.

விண்ணுக்குள் பல மர்மங்களைப் புதைத்து வைத்திருக்கும் சூரியன், சந்திரன் சாட்சியாய் அனைத்துக்கும் சாட்சியாய் கண்ணுக்குள் தெரிவதை விஞ்ஞானமென்றும், இயற்கை என்றும் சொன்னாலும், நம்மைவிட பன்மடங்கு மேம்பட்ட அவற்றைத் தெய்வங்களாய்க் கொண்டாடுதல் தவறில்லை. இது மூட நம்பிக்கை கிடையாது.

சோதிடம், சூரியன் மூலம் மின்சாரம் எடுப்பதால் பௌதீகத்துடனும், பஞ்சபூதச் சேர்க்கையால் நிலக்கரி போன்றவை செவ்வாய் அனுக்கிரகத்தால் வருவதால் வேதியியலுடனும், எண், நுண், கணிதத்தால் கணிதத் துறையுடனும் அனைத்திலும் பின்னிக் கொண்டு இயங்குவது சிறப்பு. சோதிடம் படிப்பவர் சகலமும் படித்தவராகுவார். சூரிய நமஸ்காரம், யோகா போன்றவற்றால் உடற்பயிற்சிக் கலை வளருகிறது. புவியியலில் மாற்றங்களைக் காட்டும் சோதிடம் வரலாறு காணாத சாதனைகளைச் செய்வதும் உணரத்தக்கது.

## 6.2. அறிந்ததும் அறியாததும்

கீழ்க்காணும் சில விவரங்கள் சோதிடவியலுக்குச் சம்பந்தம் அல்லது தொடர்பு இல்லாதது போன்று தோன்றினாலும், ஒரு கைதேர்ந்த சோதிடர் சோதிடம் மட்டுமின்றி அதற்கு அப்பாலும் சில விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது. ஜாதகம் பார்க்க வருபவர்கள் மனமகிழ்வு அல்லது மனஉளைச்சலில் சில கேள்விகள் – சோதிடத்திற்குத் தொடர்பு இல்லாத கேள்விகளைக் கேட்கலாம். அவர்கள் தங்களது சந்தேகங் களைக் கேட்பதன் மூலம் சோதிடர்களைக் கௌரவப்படுத்துவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இனிய புன்முறுவலுடன் மிதமாக, ஆறுதலாக எடுத்துச் சொல்வது ஜோதிடர்களின் புனிதத்தன்மையை மேலும் மெருகேற்ற உதவும். சிலநேரம் அவர்கள் கேட்கிற கேள்விளின் மூலம் சமயோசிதமாகப் பதில் சொல்ல நேரும் என்றால் அதன் மூலமும் புதிதாகக் கற்றுக் கொள்ளலாம்.

ஜாதகம் பார்க்கும் மக்கள் சோதிடரை ஒரு தெய்வமாக, தன்னைத் தொல்லைகளிலிருந்து காப்பாற்ற வல்லவர்களாக, சகோதரனாக, தந்தையாக, பெற்ற பிள்ளையாகப் பார்க்க நேரும். அப்போது அதற்குத் தகுந்தாற்போல் கண்ணியம் பேணுதல் நலம்.

நாம் சிறுவயதில் இருந்து பெரியவர்கள் பேச்சிலிருந்தும் நடவடிக்கையில் இருந்தும் கண்டு தெரிந்து கொண்டது பலப்பல. அதில் நாம் அறிந்த விஷயங்களைவிட அறியாத விஷயங்களையும் காணலாம்.

### 1. அருகம்புல், அகத்திக்கீரை

முற்காலத்தில் ஏன் 18 ஆம் நூற்றாண்டு இறுதி வரை நம்மவர்கள் வெளிநாடு செல்வதையோ, வெளியிடங்களில் உணவு உண்பதையோ பாவமாகக் கருதினர். இது மூடநம்பிக்கை என்றும், கல்வியறிவு குறைவான காரணம் என்றும் கொள்ளலாம். தன் கையால் விளைவித்த பொருளைத் தன் கையால் சமைத்து, இறைவனுக்கு அர்ப்பணிப்பதை விரும்பிய மக்கள் வீட்டின் அருகில் சில புல்களைப் பயிர் செய்தனர். தானாகவும் வளரும் அப்புல் கடவுளுக்குப் படைக்கப்பட்டதே. வீட்டுக்கு அருகில் விளையும் புல் அருகம்புல் என்று ஆனது.

விரதம் என்பது பிறருக்குச் சிறிதளவும் தொல்லை தராததாகும் என்பதால் தன் கையால் பயிர் செய்யப்பட்டது. துவாதசி விரதத்தன்று தன் அகம் (வீட்டுக்கொல்லையில்) விளைந்த கீரை உண்ணப்பட்டதே அகத்துக்கீரை. அதுவே அகத்திக்கீரையானது.

### 2. பிரதோஷம்

இது முன்னர்ப் பார்த்ததே போன்று இதுவும் பெயர் மாற்றமே. சூரிய பகவானுக்கு இரு மனைவியர்கள். ஒருவர் உஷா. இன்னொருவர் பிரத்யுஷா. முதல் மனைவியை ஞாபகப்படுத்த காலை 4 மணி முதல் 6 மணி வரை உஷத் காலம் என்றனர். மாலை 4 மணி முதல் 6 மணி வரை பிரத்யுஷத் காலம் என்றனர். பிரத்யுஷத் காலமே பிரதோஷ காலம் என மாறியது.

### 3. வாழைப்பழம்

இறைவனுக்குப் படைக்கப்படும் வாழைப்பழம் விஷ்ணு பெயரில் முகுந்தன் பழம். இதுவே மொந்தன் பழமானது. சிவன்பெயரில் பேயன் பழம் ஆனது.. பூவில் அமரும் நான்முகன் பெயரில் பூவன்பழமானது. பச்சைநாடன் பொன்றவை மன்னர்களைக் கௌரவப்படுத்த வைக்கப்பட்ட பெயர்கள்.

### 4. ஆரியகூத்து

யார் எக் கூத்து ஆடினாலும், எப்படிக் கேலி செய்தாலும், தாம் செய்யும் காரியத்தில் கவனமாய் இருந்து வெற்றி பெற வேண்டும். பிறர் சொல்லும் கேலிப் பேச்சுகளைக் காதுகொடுத்துக் கேட்கக்கூடாது. என்பதே, யார் எக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இரு என்று வந்தது. இதற்கும் ஆரிய சமுதாயத்திற்கும் சம்பந்தமில்லை. ஆரியர்கள் வேறு பிராமணர்கள் வேறு என்று திரு. மா. பொ. சிவஞானம் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### 5. பின்யோக ஜாதகம்

சிலர் இராகு தெசையில் பிறந்திருக்கலாம். அல்லது 6, 8, 12 ஆம் வீடுகளில் கிரகங்கள் இருக்கப் பிறந்தவருக்கு 35 வயதுக்குப் பின்னரே சில நல்லவைகள் நிகழும். வாழ்வின் முற்பகுதியைவிட பிற்பகுதியில் சௌகரிய வசதிகள் ஏற்படும். இந்த ஜாதகம் பின்யோக ஜாதகம். அனுபவத்திலேயே ஒரு சோதிடர் இதை எடுத்தியம்புவார்.

### 6. யுகங்கள் 4

காலம் 4 யுகங்களாகப்பிரிக்கப் பட்டுள்ளது. அவை : 1. த்ரேதாயுகம், 2. க்ருதாயுகம், 3. த்வாபரயுகம், 4. கலியுகம் என்பன. இதில் ஒவ்வொன்றுக்கும் இத்தனை ஆண்டுகள் என்று மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை.

கல்வியறிவு குறைந்திருந்த காலத்தில் கடவுளை அடைய மனஉறுதியுடன் பல்லாண்டுகள் தவமியற்றி ஆசைகளை அடக்கவேண்டும் என்று கருதப்பட்ட யுகம் திரேதாயுகம். த்ருதம் என்றால் மன உறுதி. திருதராட்டிரன் ஓர் எடுத்துக்காட்டு ஆனது.

பின்னர் மக்கள் மனப்பக்குவமாகி தவம் செய்வதிலும் ஆடு, மாடுகளைப் பலியிட்டு யாகங்கள் செய்து இறைவனை அடையலாம் என்று சட்டதிருத்தம் செய்யப்பட்ட யுகம் க்ருதாயுகம். க்ருதம் என்றால் திருத்தப்பட்டது, சமஸ்கிருதம் நன்கு திருத்தப்பட்ட செப்பனிடப்பட்ட மொழி என்றானது.

காடுகளில் வனங்களில் சென்று யாகம் செய்வதாலும், வீடுகளில் மிருகவதையின்றி ஹோமங்கள் செய்வதாலும் இறைவனை இருவழிகளாலும் அடையலாம் என்று சொல்வதே த்வாபரயுகம். த்வா என்றால் இரண்டு விதம். பரம் என்றால் செய்கை. அதாவது யாகம் எளிதான ஹோமம் என்றானது.

கல்கி (குதிரை பவர்) இறைவனை எண்ணிய மாத்திரத்தில் அடைந்து விடலாம் என்பதே கலியுகம். களி என்றால் சந்தோஷம். இறை நாமங்களை ஓதுதலே போதுமானது என்ற கருத்து வந்ததே கலியுகம். தற்போது கணினி ஒரு பீரோ வடிவில் இருந்து கைப்பேசி அளவுக்கு வந்தது போல் இறையருளை எளிதில் அடையும் வழி கண்டுபிடிக்கப்பட்ட யுகம் கலியுகம். தற்காலத்தில் அலைபேசியில் பேசுவது, ஏவுகணை விடுவது ஏவலுக்குச் சாட்சி. அலைபேசியில் தொலைவிலுள்ள ஒருவரது முகத்தைப் பார்த்தபடி பேசுவது ஞானதிருட்டி போன்றது. கலியுகத்தில் கை மேல் பலன் என்பது இதுதான்.

மேஷம் இராசியில் கேது அல்லது இராகு நீங்கலாக, எல்லா கிரகங்களும் அதாவது 8 கிரகங்களும் ஒன்று கூடும் காலம் த்ரேதாயுகம். கடகம் இராசியில் ஒன்று கூடும் காலம் க்ருதாயுகம். துலாம் இராசியில் கூடும் காலம் த்வாபர யுகம். மகரத்தில் கூடும் காலம் கலியுகம். ஆரம்ப நாள் என்பது பிரளய நாளுக்குப் பின் ஆரம்ப நாள்.

1962 ஆம் ஆண்டு அட்டகிரக சேர்க்கை 22-01-1962 இல் வந்தது என்று பேசப்பட்டது. அப்போது அன்று சந்திரன் எதிர்த்திசையில் கடகம் இராசி ஆயில்யம் நட்சத்திரத்தில் பிரவேசம் செய்ததால் பிரளயம் ஏற்படவில்லை. அது எத்தனையோ இலட்சம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் நிகழும். எனவே உலகம் அழியும்; பிரளயம் வரும் என்று பயப்படாமல் இருப்பது அறிவுடைமையாகும்.

### 7. முடியிறக்குதல்

குழந்தை பிறந்தது முதல் முடி குலதெய்வத்துக்குத் தர வேண்டும். அதனை மொட்டையடித்தல் என்று கூறாமல் முடியிறக்குதல் என்று சொல்வதே முறையானது.

### 8. தசாவதாரத் தத்துவம்

தசம் என்றால் முழுமை என்று பொருள். தசரதன், தசமுகன் (இராவணன்) என்று பெயர் வைத்தது இவர்கள் முழுமையான பலம் பொருந்தியவர்கள் என்பதாலும், ஒரே நேரத்தில் தசாவதானம் 10 வகை செயல்களைச் செய்ய வல்லவர்கள் என்பதாலும் பெயர் வைக்கப்பட்டது. தசாவதானம் செய்பவர்கள் தசாவதானிகள், அதாவது பதின்கவனகர். அகஸ்ட்டஸ், சீசர், ஜூலியர் சீசர் போல் தசரதனும் இராவணனும் சம அந்தஸ்து உடையவர்கள் என்றும், வட- தென் இந்திய சமநிலையைக் குறிக்க வேண்டி தசரதன், தசமுகன் என்று பெயர் வைக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டும். அவ்விதம் பார்க்கும் போது தசாவதார நிகழ்வு குறித்தும் தத்துவம் உள்ளது. அதனைப் பார்ப்போம்.

வேதம் கடல் போன்றது. அதை ஒரு மீன் கடலுள் ஆழ்ந்து சென்று இரை தேடுவது போல் வேதங்களை ஆழ்ந்து அனுபவித்து எந்த இடத்தில் சந்தேகம் யார் கேட்டாலும் அதைத் தீர்க்கவல்லவராய் இருக்கும்படி படிக்கவேண்டும் என்னும்தத்துவத்தைச் சொல்வதே மச்சாவதாரம். முக்காலமும் அறிந்த நான்முகனுக்கு அசுரன் வேதங்களைத் திருடவருவான் என்ற விவரமும் தெரியாமல் போகாது. சர்வ வல்லமை பொருந்திய திசைமுகனிடம் தவவலிமை காரணமாய் அசுரனும் அவரை நெருங்கமுடியாது. இந்த அவதாரம் மீனம் இராசியைக் குறிக்கும். இதுபுராண நிகழ்வு.

உடல்பலம் பொருந்திய அசுரரானாலும், மனபலம் பொருந்திய தேவரானாலும் தொழிலாளர்கள் உதவியின்றி ஏதும் சாதிக்க முடியாது என்பதைச் சொல்வதே கூர்மாவதாரம். தொழிலாளர்கள்தான் காரிய சாதனை படைப்பார்கள். நீரிலும் நிலத்திலும் ஆமை வாழும். இது கூர்ம அவதாரம். இது விருச்சிகம் இராசியுடன் தொடர்பு உள்ளது.

பிரம்மன் (சரஸ்வதி) கல்விக்கு அதிபதி. விஷ்ணு (இலட்சுமி) செல்வத்துக்கு அதிபதி. ஒருவன் தான்கற்ற பெருங்கல்வியினாலும் சரி, செல்வத்தினாலும் சரி இறைவனை அடையமுடியாது. பூரண சரணாகதி அடைவதால் மட்டுமே தெய்வத்தினை அடையமுடியும் என்பதைக் குறிப்பதே வராக (பன்றி) அவதாரம். இந்த அவதாரம் கடகம் இராசிக்குத் தொடர்பு உடையது.

மேற்கண்ட 3 அவதாரங்களும் நீர்மாவதாரங்கள். இந்த இடத்தில் ஒரு செய்தியைக் கூற வேண்டும்.

ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் செய் என்பதற்கு உண்மையான பொருள்: தங்கத்துக்கு உருகும் நிலை உண்டு. நெருப்பில்பட்டு மறைந்து உருகிவிடுவதால் பொய் என்ற பெயருண்டு. நம் உடல் நெருப்பில் சாம்பலாவதால் அதைப் பொய் – மெய் என்பது போல், தங்கத்துக்குப் பொன், பங்காரு, பொய், சுவர்ணம்

உட்பட 60 பெயர்கள் உண்டு. அக்காலத்தில் தங்கத்தில் பன்றி முத்திரை குத்துவர். அதனால் தங்கத்துக்கு வராகன் (வராகம் = பன்றி) என்ற பெயருண்டு. திருமணம் செய்துவைக்கும் புரோகித வேதவிற்பன்னர் ஓதியிடும்போது மாமா இலட்சங்கட்டி வராகன், சித்தப்பா ஆயிரங்கட்டி வராகன் என்று உரக்கக் கூறுவது (துங்கம் – பொய் ) தானே. அதனால் ஆயிரம் பொய் சொல்லி திருமணம் செய்க என்று வந்தது.

திருவடிதொழும் ஒவ்வொருவருக்கும் மனிதகுணமும் மிருக பலமும் இருக்க வேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டுவதே நரசிம்மவதாரம். பொறுமை பேணி எழுச்சிகொள் (ல்) வதே இதன் தத்துவம். இது சிம்ம இராசியுடன் தொடர்புடையது. நீர்மாவதாரங்கள் மூன்றும் ஒரே நாளில் முடிந்தவை. மற்ற அவதாரங்கள் வருடக்கணக்கில் நடந்தவை. நடக்கப் போவதாய் நம்பப்படுபவை.

தானம் வேறு தருமம் வேறு. தானுய்யப்படுவதற்குச் செய்யப்படுவது தானம். பிறருக்கு எவ்வித எதிர்பார்ப்புமின்றித் தருவது தருமம். தருமமே தானத்தைவிடச் சிறந்தது. தானத்துக்கு மிஞ்சியது தருமம் என்பதே தனக்கு மிஞ்சியதே தருமம் என்றானது.

தருமம் செய்யும் போது தன்னம்பிக்கையுடனும், பிறருக்குத் தெரியாமல் விளம்பரமின்றியும், மகிழ்வுடனும், வந்தவருடைய உருவம், ஏழ்மை நிலையைக்கண்டு அலட்சியம் செய்யாமலும், செய்யப்படும் தருமம் சிறந்தது. அதிலும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் முக்கிய பொருளை அவசியமான பொருளைத் தருவதே தருமமாகும் என்ற உண்மையைச் சொல்வது வாமனாவதாரம். இது கும்ப இராசிக்கு ஏற்றது.

உடலில் எந்த உறுப்பு தவறு செய்கிறதோ அந்த உறுப்பே தண்டனைக்கு உரியது. தாய் தந்தை யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தத்துவத்தைச் சொல்வதே பரசுராமாவதாரம். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை; தாயில் சிறந்த கோவிலுமில்லை என்பதற்கும், தாயாருக்கு சிரச்சேத தண்டனை கொடுத்த தந்தையின் தலையை வேறு மன்னன் எடுத்தது, தன்வினை தன்னைப் பிற்பகலில் சுடும் என்ற உண்மையைத் தெரிவிப்பது பரசுராமாவதாரம். இது துலாம் இராசிக்கு ஏற்றது.

மௌனமாய் உலகுக்குப் பாடம் நடத்தியது இல்லறவியல் ராமாவதாரம். உபதேசம் செய்து பாடம் நடத்தியது கிருஷ்ணாவதாரம். அயனம் என்றால் வழி இராமஅயனம் என்றால் இராமர்வழி என்று பொருள். எப்படிச் சூரியன் வடக்குவழி (உத்ராயணம்), தெற்குவழி (தட்சினாயணம்) என்றிருப்பது போல் இராமர்வழி சிறந்தது. இராமாவதாரம் தனுர் இராசிக்கு உகந்தது. மனைவியே பறிபோனாலும் வில்லறம் சொல்லறம் இல்லறம் வழுவாமையைக் குறிப்பது.

மூத்தோர் கேட்டலுக்கு உகந்ததும் விவசாயம் போன்ற தொழில் புனிதத்தன்மை காட்டியதும் பலராமாவதாரம். இது கன்னி இராசிக்கு உகந்ததாகும்.

அரசுமுறை காட்ட நடுநிலை நின்றது கிருஷ்ணவதாரம். இடையன் என்பது ஆட்டிடையனல்ல. நடுவர் – கண்ணன் என்பது. அது ரிஷபம் இராசிக்கு ஏற்றது. போட்டி விவரம், விவேகமற்ற வீரம், வேகம் இதனால் உண்டாகும் இழப்பு விளைவுகளுக்கு உகந்தது கல்கி அவதாரம். முன்பு சொன்னதுபோல் குதிரை பவர் என்பதே கல்கி அவதாரமாகும்.

மேற்கண்ட பத்து அவதாரங்களும் பத்துக்கட்டளைகள், நிகழ்வுகள்பற்றி சிந்திக்காமல் அதிலுள்ள தத்துவங்களை எடுத்துக்கொள்வதே சிறப்பு. இதில் முதல் ஆறு (மச்ச, கூர்ம, வராக, நரசிம்மன், வாமனன், பரசுராமன் அவதாரங்கள் த்ரேதாயுகத்திலும், இராமன் அவதாரம் த்ரேதாயுகம் மற்றும் க்ருதாயுகத்திலும்,

பலராமன், கிருஷ்ணன் அவதாரங்கள் த்வாபர – கல்கியுக ஆரம்பத்திலும் நிகழ்ந்ததாய்க் கொள்ள வேண்டும். கல்கி அவதாரம் மகர இராசிக்கு உகந்தது.

### 9) சஷ்டியப்தபூர்த்தி

அப்தம் என்றால் பத்தாண்டு காலம். ஆறு பத்தாண்டு காலம் ச**ஷ்**டியப்த பூர்த்தி என்பர். சிலர் 59 வயது முடிந்ததுமே ச**ஷ்**டியப்தபூர்த்தி பண்ணலாமா என்று கேட்பர். இது தவறானது. பூர்த்தி என்றால் முடிந்து விட்டது என்று பொருள் கொள்வதால் 60 வயது முடிந்து 61 ஆவது ஜென்மநட்சத்திரம் வரும் போது செய்வதே சஷ்டியப்தபூர்த்தியாகும். ஒரு மனிதருக்கு பூரணஆயுள் 120 ஆண்டுகள். அதில் சரிபாதியாவது 60 ஆண்டுகள். அதில் 60, 70, 80, 120 வயதுகளைக் கடக்கும் போது அந்த வருடங்களைத் துஷ்ட உக்ரக தேவதைகள் காப்பாற்றுவதால் ச**ஷ்**டியப்த பூர்த்தி, பீமரத சாந்தி என்று சாந்தி செய்கிறோம் என்று முன்னர் பார்த்ததே.

இதில் தசசதாபிடேகம் என்பது ஆயிரம் பிறை காண்பதாகும். தசம் என்றால் 10. சதம் என்றால் 100. எனவே, 10 × 100 என்பது 1000. ஆயிரம் பிறை காண 80 வயதாகும். அதுவே சதாபிடேகம் ஆனது.

### 10) வருடப்பிறப்பு

இந்தியா மட்டுமின்றி உலகளாவிய நிலையில் புதுவருடம் பண்டிகைகள் அனைத்தும் சூரியனையோ சந்திரனையோ அடிப்படையாக வைத்தே கடைப்பிடிக்கப்படுகின்றன. அதில் :

1. சூரியனை அடிப்படையாக வைத்துக் கடைப்பிடிக்கப்படும் முறைக்குச் சௌரமானம் என்று பெயர். சௌரம் என்றால் சூரியன் – சோலார் என்று பொருள். சூரியனை முழுமுதற் கடவுளாய் எண்ணுபவர்கள் சௌராஷ்ட்டிரர்கள்.

2. சந்திரனை அடிப்படையாக வைத்துக் கடைப்பிடிப்பது சாந்திரமானசம். ஒவ்வொரு மாதமும் அமாவாசையிலிருந்து பஞ்சமி வரை கணக்கிடப்படுவது இது. தெலுங்கு வருடப்பிறப்பு யுகாதிப்பண்டிகை ஆகும்.

முன்னது தமிழ்வருடப்பிறப்பு. அதாவது சௌரமானசம் முறை. சௌரமானசம் என்பது சூரியன் ஒவ்வொரு இராசியில் பிரவேசிக்கும் போது கணக்கிடப்படுவது. வடஇந்தியாவில் அமாவாசையில் இருந்தும் தென்னிந்தியாவில் பௌணர்மியில் இருந்தும் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. முகமதியரும் பிறைகண்டு மறையோதுவது அறிந்ததே.

ஆரம்ப காலத்தில் முழுநிலவைப் பார்த்த மனிதர்கள் தற்போது தேநீர் குழு வைப்பது போல் ஒன்றுகூடி மகிழ்ந்தனர். அதுவே காலப்போக்கில் திருவிழாக்களாய் ஆனது. இனி அமாவாசை, பௌர்ணமி விவரங்கள் பார்ப்போம்.

சந்திரனை அடிப்படையாய் வைத்துப் பார்ப்பது இருவகைப்படும். ஒருவகை தேய்பிறை (கிருஷ்ணபக்ஷம்) . மற்றொரு வகை வளர்பிறை (சுக்கிலபக்ஷம்).

கிருஷ்ணம் என்றால் கருப்பு, இருள் என்று பொருள். சுக்கிலம் என்றால் வெண்மை, வெளிச்சம் என்று பொருள். அமாவாசையில் இருந்து சந்திரன் வளர்ந்து பௌர்ணமியாய் வருவதால் வளர்பிறை என்றும், பௌர்ணமியில் இருந்து அமாவாசை வரை தேய்ந்து இருளாவதால் தேய்பிறை என்றும் பெயர். அதே போல் சூரியன் வடக்குவழி (உத்திராயணம், தெற்குவழி (தட்சினாயணம்) பயணம் கொள்வது பற்றி முன்பு பார்த்தோம்.

சந்திரன் தேய்ந்து வளர்வது விநாயகர் சாபம் என்றும், நிலவில் உள்ள பள்ளம் பாட்டி வடிவம் என்பதும் விஞ்ஞான அறிவு இல்லாதபோது புனையப்பட்ட கதைகள். இதனை நம்பவேண்டாம். அதேபோல் தேய்பிறைச் சந்திரன் தீயபலன்களையும் வளர்பிறைச் சந்திரன் நல்லதையும் தரும் என்பது மனநம்பிக்கையே. இதற்கு ஆதாரம் இல்லை

**அமாவாசை:** இதன்பொருள் மாசியம் என்றால் மாதாந்திர தென்புலத்தார்களை எண்ணி வழிபடும்விதம். பிண்டம் என்னும் உணவு உருண்டையை வைத்துப்பண்ணுவது. அமாசியம் என்றால் பிண்டம் இன்றி தண்ணீர் மற்றும் எள்ளிட்டுப்பண்ணுவது. இந்தி அல்லாத மற்ற வட மாநில மொழிகளில் (பீகாரி, ஒரியா) ஒன்று என்ற எண்ணுக்குப் பாட் என்ற சொல்வழக்கு உண்டு. அதனால்தான் தலைநகர் என்ற பொருள்படி பீகார் தலைநகருக்கு பாட்னா என்ற பெயர் வந்தது. அமாசியம் என்ற வார்த்தையே அமாவாசை ஆனது.

1. பிரதமை: அமாவாசையில் இருந்தோ பௌர்ணமியில் இருந்தோ முதல்நாள் என்னும் பொருள்பட அமைந்தது பிரதமை. பிரதம மந்திரியை முதல் மந்திரி என்பதுபோல் பிரதமை முதல் நாள்.

அதேபோல் த்வி என்றால் இரண்டு. இரண்டாம் நாள் த்விதியை. த்ருதியை மூன்றாவது நாள் . சதுர்த்தி நான்காவது நாள். பஞ்சம் என்றால் 5. பஞ்சமி என்பது 5ஆம் நாள், சட்டி 6 ஆவது நாள் ஸப்தமி ஏழாம் நாள். அட்டம் என்றால் 8. அட்டமி 8 ஆம் நாள். நவம் என்றால் 9. நவமி ஒன்பதாம் நாள். தசம் என்றால்10. தசமி 10 ஆம் நாள் என்றானது. ஏகம் = 1. தசம் = 10. 10+1 = 11. ஏகாதசி என்பது 11 ஆம் நாள். த்வா=2. தசம் = 10. த்வாதசி 12 ஆம் நாள். த்ரயம் = 3. தசம் = 10. த்ரயோதசி பதின்மூன்றாம் நாள். சதுர்=4 தசம் =10. சதுர்தசி 14 ஆம் நாள். இவ்வாறு நாட்கள் கணக்கிடப்படுவது வடமொழிப் பெயரால் ஆனது. மறுபடி அமாவாசை அல்லது முழுமதி (பூர்ணிமை), பௌர்ணமி வரும். ஒன்று முதல் 14 வரை மனப்பாடம் செய்தாலே திதிகள் மனனமாகும்.

அதேபோல் திதி என்பது மேற்சொன்ன 14 நாட்களைக் குறிக்கும். திதிகள் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கண்டிப்பாய் வரும். அதிதி என்றால் விருந்தினர் என்று பொருள் அவர்கள் எப்போதாவது வருவதால் திதிக்கு எதிர்ப்பதமாய் அதிதி என்ற பெயர் பெற்றது. அதிதி, திதி என்பது ஒருமுனிவரின் இருமனைவியர் என்பாரும் உளர்.

மேற்சொன்னது சாந்திரமானசம்.

சௌரமானசம் என்பது சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் ஈறாக 12 மாதங்களில் சூரியனை முன்வைத்து சொல்லப்பட்டது. இந்த 12 மாதங்களும் காரணப் பெயர்களாய் அமைந்தவை. பௌர்ணமியில் வரும் ஏழாவது இராசி நட்சத்திரத்தில் அமைந்தவை.

1. மேஷம் மாதம்: (சித்திரை மாதம்) மேஷத்தில் சூரியன் பிரவேசிக்கும் போது துலாம் இராசியைப் பார்வையிடும். அது சித்திரை நட்சத்திரத்தை முழுமையாய் பார்வையிடுவதால் அன்று சித்ராபௌர்ணமி என்றும் சித்திரை நட்சத்திரப் பெயரிலியே சித்திரை மாதமானது.

2. ரிஷபம் மாதம்: (வைகாசி) மேற்சொன்னது போலவே விருச்சிகம் இராசியை ரிஷபம் இராசியில் இருந்து சூரியன் பார்வையிடும்போது விசாகம் நட்சத்திரம் பலமுறுகிறது. இதுவே வைகாசி விசாகம். விசாகமே வைகாசியானது. எல்லா மாதங்களுமே இவ்விதம் நட்சத்திரப் பெயரால் ஆனவையே.

3. மிதுனம் மாதம்: (ஆனி) அனுஷம் – கேட்டை இணைவது. அனுஷமே ஆனியானது.

4. கடகம் மாதம்: (ஆடி) பூர்வாஷாடம் (பூர்வாஷாடி – ஆடியானது. (பூராடம்)

5. சிம்மம் மாதம்: (ஆவணி) அவிட்டம் (ஸ்ராவணம் – வேதத்தைக் கேட்டல் என்பதே ஸ்ராவணம் ஆவணியானது. (சிரவணம் – அவிட்டம்)

6. கன்னி மாதம் : (புரட்டாசி). பூரர்வபத்ர (பூரட்டாதி) புரட்டாசியானது.

7. துலாம் மாதம் : (ஐப்பசி) . ஆஸ்வீனம் (அசுபதி) ஐப்பசி ஆனது.

8. விருச்சிகம் மாதம் : (கார்த்திகை) ரிஷபம் இராசியில் கார்த்திகை நட்சத்திரப்படி கார்த்திகை மாதம் வந்தது

9. தனுர் மாதம் : (மார்கழி) மகசிரம் மிருகசீரிஷமே மார்கழியானது.

10. மகரம் மாதம் : (தை) புஷ்யதி (பூசம்) புஷ்யதை ஆகி தை மாதமானது.

11. கும்பம் மாதம்: (மாசி) மகாமாதம் மகநட்சத்திரம் மாசியாகியது.

12. மீனம் மாதம் : (பங்குனி) உத்திரபல்குனி (உத்திரம்) பங்குனியானது.

இவ்வாறு மாதங்களுக்கு ஏழாவது இராசியில் பூர்ணிமை காலத்தில் வரும் நட்சத்திரப்பெயர்களை இட்டு மகிழ்ந்து இன்புறத் தக்கது.

மேற்கண்டவற்றை ஒவ்வொரு சோதிடரும் தெரிந்து வைத்துக் கொள்வது சமயத்தில் உதவும். மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. தற்போது எல்லாருமே பஞ்சாங்கம் பார்ப்பதால் திதி மற்றும் பிற விவரங்களைக் கேட்க ஜோதிடர்களை அணுகுவதில்லை. பலன்கள் மட்டும் எப்படிப் பார்ப்பது என்று தெரிந்து கொண்டு பக்க பலத்துக்கு மேற்கண்ட விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஜாதகம் சூரியனை அடிப்படையாய் வைத்தும், நட்சத்திரம் சந்திரனை அடிப்படையாய் வைத்தும் கணிக்கப்படுகிறது.

### 11) மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள் சமநோக்கு நாள்

மரம், கட்டடம் மேல்நோக்கி செல்பவை. இவற்றை மேல்நோக்கு நட்சத்திரங்களில் செய்ய வேண்டும். கிணறு, அஸ்திவாரம் கீழ்நோக்கிச் செல்பவை. இவற்றைக் கீழ்நோக்கு நாட்களில் செய்ய வேண்டும். பசு ஆடு வாங்க விற்க கிடை மட்டமாய் அவை இருப்பதால் சமநோக்கு நாட்களில் செய்ய வேண்டும்.

கீழ்நோக்கு நட்சத்திரங்கள்: பரணி, கார்த்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி. பூரட்டாதி நட்சத்திரம் புதையல் யோகம் தரும்.

சமநோக்கு நட்சத்திரங்கள்: அசுபதி, மிருகசீரிடம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி. (குதிரையும் வாங்கலாம்.)

மேல் நோக்கு நட்சத்திரங்கள்: ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம் அவிட்டம், சதயம், உத்திரட்டாதி.

மேல், கீழ், சம நோக்கு நட்சத்திரங்கள் வகைக்கு 9 ஆகும்.

### 12) செய்யக்கூடியவை செய்யக்கூடாதவை

வட இந்திய மொழிகளில் பாட் என்றால் முதல் அல்லது ஒன்றாம் நாள், எண் என்பதையே முன்னர் கண்டோம். அதனால்தான் பிரதமை திதிக்குப் பாட்டிமை என்ற பெயரும் வந்தது. பிரதமை, அட்டமி, நவமி திதிகளில் மருந்துண்டால் நோய் தீரும் என்பதும், மற்ற நாட்களில் நல்லவை செய்தால் விளங்கும் என்பதும் தவறானது. இறைவன் படைப்பில் 14 திதிகளுமே நல்லவைதாம். பாட்டன், பாட்டி என்றால் தலைவன், தலைவி என்று பொருள்.

**13)** ஆண் காலம், பெண் காலம் என்பது கிடையாது. 24 மணி நேரமும் ஆண்-பெண் இருபாலரும் பிறக்க இறையருள் பூரணமாய் உண்டு.

**14)** வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்பவர்கள் சூலம்பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. வெள்ளிக்கிழமை மேற்கே சூலம். அன்று விமானப் பயணச்சீட்டு கிடைத்தால் அமெரிக்கா போக வேண்டியதுதான்

**15)** திருவாதிரை, ஸ்வாதி, சதயம் நட்சத்திரக்காரர்களை இராகு காலம் ஒன்றும் பண்ணாததுபோல் அசுபதி, மகம், மூலம் நட்சத்திரக்காரர்கள் எமகண்ட நேரத்தில் எதுசெய்தாலும் பாதிக்க மாட்டார்கள். பாதிக்கப்பட, மாட்டார்கள். எமகண்டம் விதிவலக்கு.

**16)** குருவுடன் செவ்வாய் சேர்ந்திருந்தாலோ பார்க்கப்பட்டாலோ செவ்வாய்தோஷம் கூடிவிடும்.

**17)** சனிதெசை நடக்கும்போது ஏழரைச்சனி, அட்டமச்சனி வந்தால் பாதிப்பு இருக்காது.

**18)** தோலொழுகு நோய் - தோலூழ்நோய் என்பதே தொழுநோயானது. இத்தொழுநோய் வினைப்பயனால் வருவதன்று.

**19)** அர்ச்சகர், குருக்கள், சிவாச்சாரியார், வைதீகர், புரோகிதர் என்பது வெவ்வேறு தொழிலைச் செய்பவர்களைக் குறிப்பது. யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம். குருக்களாகமுடியாது. 27 ஆகமங்கள் பயின்று கும்பாபிஷேகம் செய்யும் தகுதி உள்ள ஒருவரே சிவாச்சாரியார். புரோகிதர் என்பவர் அந்தணர்கள் வீட்டில் நல்லது, கெட்டது செய்யச் செல்பவர். அவர்கள் புரத்தை ஹிதம் செய்யவந்தவர்கள். வைதீகர் என்பது கிட்டதட்ட புரோகிதர் போன்றவரே. 4 வேதங்களுள் ஒன்றை 13 வருடம் பயின்றவர்

**20)** சந்நிதி, கோவில், ஸ்தலம், ஷேத்திரம் என்பதற்கு வெவ்வேறு பொருள் உள்ளது. பிள்ளையார் அல்லது முருகன் அல்லது துர்க்கைமட்டும் அதாவது ஒருவிக்கிரகம் உள்ளது சந்நிதி. குகன், கணபதி அல்லது இலட்சுமி, விஷ்ணு இருப்பது கோவில் அல்லது ஆலயம். மலை-கடலோரம் இருந்தால் ஷேத்திரம். மன்னர்களால் கட்டப்பட்டது ஸ்தலம்

**21)** ஜோதிடர்கள் ஜாதகம் பார்க்க வருபவர்களைத் தொலைவிலுள்ள கோவிலுக்குப் போகச் சொல்லாமல் அருகிலுள்ள கோவிலுக்குப் போகச் சொல்வதும், எண்ணெய் வாங்கித் தரச் சொல்வதுமே நலம். கோவிலில் விளக்கேற்று பரிகாரம் கூற வேண்டாம்

**22)** ஜோதிட வல்லமை அதிகமானால் பெரிய மனிதர்களின் நட்பு கிட்டும். ஒரு நல்ல சமுதாயத்தையும் ஒரு ஜோதிடரால் உருவாக்க முடியும்.

மேற்கண்ட யாவும் தெரிந்து கொள்ளப்பட வேண்டியவை. இவற்றைக் கடைப்பிடித்தால் நலமே. அமாவாசை அன்று கணவர்-மனைவி தாம்பத்தியம் கூடாது. அப்படி நடந்தால் மூதாதையர்களை அவ்வுலகில் மலக்குடத்தில் போடுவோர் என்பது சாத்திரம். பௌர்ணமின்று மக்கள் பொழுது போக்காகச் செய்த நிகழ்வுகளே பண்டிகையானது.

OOOOO

***அலகு IV - கோள்களும் இயற்கையும்***

## பாடம் 7 – கோள்களும் கடவுளும்

கடவுள் புதிதாய் உருவானதா? கண்டுபிடிக்கப்பட்டதா? இரண்டுமே கற்பனையான பாதுகாவலர் எனலாம். இது நாத்திகமல்ல. ஆத்திகம். நம்மை யாரோ கண்காணிக்கிறார்கள் என்று நம்பினால், நாம் தவறு இழைக்க மாட்டோமல்லவா? அவர்களே கடவுள் ஆகும். தெய்வம் மனுஷ்ய ரு பேண என்றால் தெய்வமும் நம்மைப்போல் இரு கைகள், இரு விழிகள், இரு செவிகளோடுதான் இருப்பார். 4 கைகள், கால்களோடு இயற்கைக்கு மாறாக இருக்க மாட்டார் என்பதே இதன் பொருள். பெரும்பாலும் சமூக அடிப்படையிலேயே கடவுளர் உள்ளர்.

இதில் 1. இந்து, 2. இஸ்லாம், 3. கிறித்தவம், 4. பௌத்தம், 5. சமணம் என்ற 5 மதங்களும் கிரேக்கம் போன்ற மதங்களும் உள்ளன. இவை 1. உருவ வழிபாடு 2. அருவ வழிபாடு என்ற இரண்டு வழிகளில் கருத்து வேறுபாடுகள் உள்ளவை. அவற்றை நீக்கி அவரவருக்குரிய கடவுள் இராசியைக் கண்டு வழிபடலாம்.

உலகம் முழுவதும் இருப்பது ஒரே கடல்நீர்ப் பரப்புதான். அக்கடல்நீர் நாடுகளின் எல்லைகளுக்கு உட்பட்டு, அரபு நாடுகளை ஒட்டியது அரபிக்கடல் என்றும், வங்கத்தை ஒட்டியது வங்கக்கடல் என்றும், இந்தியாவை ஒட்டியது இந்தியப் பெருங்கடல் என்றும் பெயர் பெற்றது. அதுபோல் இறைவனும் ஒரே குணம் பலம் உடையவர். அவ்இறைவன் ஒருவரே. ஆங்கிலேயப் படையெடுப்புக்கு முன்பு தற்போதைய அரபிக்கடல் அப்ர ஸமுத்ரா என்றும், வங்கக்கடல் பூர்வ சமுத்ரா என்றும் அழைக்கப்பட்டன. இது வரலாறு கண்ட உண்மை.

உலகம் முழுவதும் இந்து, முஸ்லீம், கிறித்தவம், சமணம், பௌத்தம் என்ற ஐம்பெரும் மதங்களால் மக்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். மக்களுக்கு இதந்தருபவர் இந்து என்றும், தன்னை நாடி வருபவருக்கு அடைக்கலம் தருவது இஸ்லாம் என்றும், உதார (இரக்க குணம் உள்ளவர்), மங்கள் (ஞானம் ஸ்தானம் பெற்றவர்) என்ற பொருளில் கிறிஸ்தவம் என்றும் பெயர் பெற்றன. செஞ்சிலுவைச் சங்கம், ஆம்புலன்ஸ், மருந்தகம் ஆகியவை கிறித்தவர்களால் நடத்தப்படும் தரும ஸ்தாபனங்கள். பள்ளிக்கூடம் நடத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பெயர்பெற்றன. ஞானம் புத்தியுள்ளவன் புத்தன். முற்றும் துறந்த அமனம் (சமணர்) நிலையிலுள்ளவர் சமணர் என்று பொருள்பட வந்தது.

எல்லா மதமும் அகிம்சையை வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. இதின் உட்பிரிவுகள் மக்கள் தொகைப் பெருக்கத்தால், கருத்து வேறுபாடுகளால் உண்டானவை. தேவையற்ற கருத்து வேறுபாடுகள். மகாயாணம், ஹீனாயானம். பிராட்டஸ்ட்டன்ட், கத்தோலிக்கர், சன்னி முஸ்லீம், இராவுத்தர் இவை யாவும் மற்றும் இந்து மதத்தின் ஆறுபிரிவுகளும் தேவையற்றவை.

ஈசாக் – ஈசன் என்பவை வேக ஒற்றுமையைக் குறிக்கும். டேவிட் தாவீது ஆனதும், யோகப் ஜோஸப் ஆனதும் ஜீஸஸ் இயேசுவானதும், எபிரேயப்ரு மொழியில் ஒய், ஜி என்ற இரண்டு எழுத்தால் தான் பெயர்கள் மாறின. புத்த மதத்தைப் போலவே சமண மதத்திலும் ஸ்வேதாரம்பம், தகம்பரம் போன்ற பிரிவுகளும், திபெத் லாமா போன்ற பிரிவுகளும் உண்டாயின. ஆனால், புத்தரோ இந்து மத அரசரின் மகன் என்றும் அவர் கடலைப் பார்த்ததே இல்லை என்ற விவரமும் ஒரு சிலரே அறிவர். எனவே புத்த மதம் இந்து மதத்தின் கிளை எனலாம். இது உரிமை கொண்டாடும் நோக்கமல்ல. அதை விடுத்து இறைத்தன்மை ஒன்று என்று உணருவோம்.

இயற்கையே இறைவன் என்று அந்தணர்கள் சூரியன், வருணன் என்று காதால் கேட்கப்படும் ஸ்ருதி (வேதவழியைப் பின்பற்றியதால் ஸ்மார்த்தர்) ஆனார் என்றும் அறியலாம். இந்து மதத்தில் கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றுக்குப் பெண் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். நதிகளுக்கும் பெண் பெயர் சூட்டினர். சரஸம் என்றால் அறிவு; ஒளி பொருந்திய நதி சரஸ்வதி. வதனம் என்றால் ஒளிமுகத்திலுள்ள கலைமகள் என்று பெயர். பர்வதராஜன் மகள் (மலை எப்படி கம்பீரமாய் நிற்கிறதோ அப்படி) நிமிர்ந்து நிற்கும் தைரியம் உடையவர் பார்வதி என்றும் இலக்கு அடைவது இலக்குமி என்றும் பெரிய பெயர் இட்டனர். விஷ்ணு என்னும் சொல்லுக்கு எங்கும் பரவியிருப்பவன் என்ற பொருளும், அகண்டு விரிந்த பிரம்மாண்டம் (பேரண்டம்) பிரம்மா என்றும் சொல்லப்பட்டன.

அரபு மொழியில் அல்லா என்றால் இறைவன் என்றும் கூறப்பட்டது. விநாயகன் என்பது தனக்கு மேல் தலைவன் இல்லை என்ற பொருளிலும், சிவம் என்பது அன்பு என்னும் பொருளிலும் பெயர் பெற்றன. இவற்றைப் பார்க்கும்போது எல்லா மதமும் கடவுளைத் தலைவர், அன்புள்ளவர் என்றே சொல்வதை உணர முடிகிறது.

இவையன்றி மனித தெய்வங்களாக மகான்கள் போற்றப்பட்டனர். மேற்கே ஒரே ஒரு ஞானி. அவர் கிறித்து. நடுகீழ்நாட்டில் ஒரே மகான் நபிகள். இந்தியாவிலோ எல்லாருமே ஞானிகள்தாம். இதில் வடஇந்தியா ஞானபூமி என்றும் தென்இந்தியா கர்மபூமி என்றும் பெயர் பெற்றன.

தன்னை உயர்த்திக்கொண்ட அடியார்கள் (அப்பர், சுந்தரர்) நின்ற கோலத்திலும், மக்களுக்கு வழிகாட்டிய குருமார்கள் இராமனுஜர், இராகவேந்திரர் அமர்ந்த கோலத்திலும் காட்சிதருவது குறிப்பிடத்தக்கது. அதேபோல் சிவபெருமான் இல்லாத ஆலயங்களில் அம்மன் அமர்ந்த கோலத்தில் அருள்பாலிப்பதும் யாம் அறிந்ததே. இந்த உண்மை நிலையை அறிந்து ஜோதிடர் பதில் கூற, பலன் கூற வேண்டும்.

உலகில் 43 நாடுகளில் பௌத்த மதம் பரவி உள்ளது. கிறிஸ்தவ மதமோ உலகெங்கும் பரவியுள்ளது. இஸ்லாமும் அப்படியே. இந்து மதமோ ஆரம்பம்-முடிவு அற்று கிளை வேர்விட்டுப் பரவியுள்ளது.

ஒன்பது கிரகங்களும் 12 இராசிகளும் 5 மதங்களுக்குள் அடங்குவனபோல் அடங்கி அடக்கியாள்கிறது. இனி இராசிகளுக்கான கடவுளரைக் காண்போம்.

### 7.1. இராசிகளும் கடவுளும்

1. **மேஷ லக்னமும் மேஷ இராசியும்**

மேஷ இராசிக்காரர்கள் முருகன், இராயப்பர், 13 ஆவது நபி, சித்தார்த்தர், மகாவீரர் ஆகிய இறைநிலையை அவரவர் மதத்துக்குத் தகுந்தாற் போல் வணங்க வேண்டும். இவை மேஷ லக்னங்களுக்கு இஷ்டதெய்வங்கள்.

மேஷ இராசிக்காரர்கள் (அசுபதி, பரணி, கார்த்திகை) பழநி முருகன், மலைப்பொழிவு இயேசு, 16 ஆம் நபி, தியானபுத்தர், நின்றவடிவு மகாவீரர் ஆகியவர்களை வணங்கவேண்டும். இவை அருள் தெய்வங்கள்.

**2. ரிஷப லக்னமும் ரிஷப இராசியும்**

துர்கை, வ்யாகூல மாதா, முகம்மது நபிகள், அமர்ந்த புத்தர், கரம் தூக்கிய மகாவீரரை வணங்க வேண்டும். இது ரிஷப லக்னக்காரர்களுக்குரிய தெய்வங்கள்.

ரிஷப இராசிக்காரர்கள் (கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிஷம்) விநாயகர், பள்ளி கொண்ட பெருமாள், சத்யசாய் பாபா, இடைவிடா சகாய மாதா, சல் உபதெசம், பூர்ணிமா புத்தர், ஜைனரை வணங்க வேண்டும்.

**3. மிதுன லக்னமும் மிதுன இராசியும்**

மிதுன லக்னக்காரர்கள் மகாவிஷ்ணு, சகாயமாதா, நூர்ஜகான், 3 வயது புத்தர், 40 வயது ஜைனரை வழிபட வேண்டும்.

மிதுன இராசிக்காரர்கள் (புனர்பூசம், மிருகசீரிஷம், திருவாதிரை நட்சத்திரக்காரர்கள்) கால பைரவர், உரகசயனார், ஸ்ரீராமர், மலைப்பொழிவு இயேசு, ஹிஜிரா நபி, சின்முத்திரை புத்தர், மகாவீரர் முகவொளியை வணங்க வேண்டும்.

மேஷ லக்ன வைஷ்ணவர்கள் கேசவப் பெருமாளையும், ரிஷப லக்ன வைஷ்ணவர்கள் நாராயணரையும், மிதுன லக்ன வைஷ்ணவர்கள் மாதவப் பெருமாளையும் வணங்க வேண்டும். (நாயுடு ரெட்டியார், ஐயங்கார் தெலுங்கர்களுக்கு.)

**4. கடக லக்னமும் கடக இராசியும்**

கடக லக்னக்காரர்கள் திருச்செந்தூர் முருகன், அன்னை வேளாங்கன்னி மாதா, நாகூர் ஆண்டவரையும், புத்த கயா, கண்மூடிய மகாவீரரையும் வழிபட வேண்டும்.

கடக இராசிக்காரர்கள் (பூசம், புனர்பூசம், ஆயில்யம்) குலதெய்வத்தையும், அதே போல் பௌத்த மதத்தவர், ஜைன மதத்தவர் குலதெய்வத்தையும், வைஷ்ணவர்கள் கோவிந்தராஜப் பெருமாளையும் வழிபட வேண்டும்.

**5. சிம்ம லக்கினமும் சிம்ம இராசியும்**

சிம்ம லக்னக்காரர்கள் சிவபெருமானையும், இதய ஆண்டவரையும், பாத்திமா பீவியையும், தியான புத்தரையும், ஜைனரையும் வழிபட வேண்டும்.

சிம்ம இராசிக்காரர்கள் (மகம், பூரம், உத்திரம்) இராகவேந்திரரையும், மத்தேயுவையும், ஹாஜிக்களையும், கயா யாத்திரை போனவரையும், அங்கோர்வாட் (கிழக்கு நாட்டில் பெரிய கோவில்) போனவரையும் வணங்க வேண்டும். வைஷ்ணவர்கள் (ஐயங்கார்கள்) விஷ்ணுவையும் வழிபட வேண்டும்.

**6. கன்னி லக்னமும் கன்னி இராசியும்**

புதுக்கோட்டை புவனேஸ்வரியையும், நாகர்கோவில் ஆண்டவரையும், புனித சூசையப்பரையும், போதி மரப் புத்தரையும், ஆசி கூறும் மகாவீரரையும் வணங்க வேண்டும்.

கன்னி இராசிக்காரர்கள் (உத்திரம், ஹஸ்தம், சித்திரை ) பூமாதேவியையும், இஸ்ரவேலரையும், மெக்கா விஜய நபியையும், அரண்மனை புத்தரையும், காடு வாழ் மகாவீரரையும் வணங்க வேண்டும். வைஷ்ணவர்கள் மதுசூதனனை வழிபட வேண்டும்.

**7. துலா லக்னமும் துலா இராசியும்:**

மகாலெஷ்மி, படகுறு இயேசு, மெதினா நபி, துயிலெழு புத்தர், மகாவீரரை வழிபட வேண்டும்.

துலா இராசிக்காரர்கள் (சித்திரை, ஸ்வாதி, விசாகம்) சரஸ்வதி, சிலுவை சுமந்த ஏசுபிரான், திராட்சை உண்ட நபி, மௌனபுத்தர் , மகாவீரரை வழிபட வேண்டும். வைஷ்ணவர்கள் த்ரிவிக்ரமரை வழிபட வேண்டும்.

**8. விருச்சிக லக்னமும் விருச்சிக இராசியும்:**

விருச்சிக லக்னக்காரர்கள், வைதீஸ்வரனையும், முக்தி யேசுவையும், முக்தி நபிநாதரையும், சமாதி புத்தரையும், நிர்வாண மகாவீரரையும் வழிபட வேண்டும்.

விருச்சிக இராசிக்காரர்கள் (விசாகம், அனுஷம், கேட்டை நட்சத்திரக்காரர்கள்) பிரம்மா, தியானயேசு, அருள்நபி, நின்றபுத்தர், நின்ற மகாவீரரை வழிபட வேண்டும். வைஷ்ணவர்கள் வாமன தேவரை வழிபட வேண்டும்.

**9. தனுசு லக்னமும் தனுர் இராசியும்**

தனுசு லக்கினக்காரர்கள் அனுமாரையும், அப்பம் தந்த இயேசுவையும், கைசேர்ந்த நபியையும், தருமம் ஏற்கும் புத்தரையும், மகாவீரரையும் வணங்க வேண்டும்.

தனுசு இராசிக்காரர்கள் (மூலம், பூராடம், உத்திராடக்காரர்கள்) குருவாயூரப்பனையும், வீரமா முனிவரையும், 124 ஆம் நபிகளையும், 12 வயது புத்தரையும், 17வயது மகாவீரரையும் வழிபட வேண்டும். வைஷ்ணவர்களோ ஶ்ரீதரப் பெருமாளை வழிபட வேண்டும்.

**10. மகர லக்னமும் மகர இராசியும்:**

மகர லக்கினக்காரர்கள் ஐயப்பனையும், மலைப்போழிவு இயேசுவையும், சீராப்பிரானையும், மௌன புத்தரையும், மகாவீரரையும் வழிபட வேண்டும்.

மகர இராசிக்காரர்கள் (உத்திராடம், திருவோணம், அவிட்டம் நட்சத்திரக்காரர்கள்) ஜெயராமரையும், மாற்குவையும், 12 ஆவது நபிகளையும், உணவருந்து புத்தர், மகாவீரரையும் வழிபட வேண்டும். வைஷ்ணவர்கள் ரிசிகேசரை வழிபட வேண்டும்.

**11. கும்ப லக்னமும் கும்ப இராசியும்:**

கும்ப லக்னம், இராசிக்காரர்கள் நாத்திக எண்ணம் கொண்டவர்கள். இவர்கள் மெய்ஞ்ஞானத்தை விட விஞ்ஞானத்தை நம்புவதால், கடவுளைப் புதிதாய் உருவானவர் என்று கூறுவதால், கோவில் வாயில், பள்ளிவாசல், சர்ச் வாசலைப் பார்த்தாலே போதுமானது. வைணவர்கள் பத்மநாபரை வழிபட வேண்டும்.

**12. மீன லக்னமும் மீன இராசியும்**:

மீன லக்னக்காரர்கள் மீனாட்சியம்மன், படகோட்டி இயேசு, 128 ஆம் நபி, தம்மபத வாக்கியம், ஜைனவழி ஜல வழிபாடு போதுமானது.

மீன இராசிக்காரர்கள் எளிதில் ஏமாறுபவர், சந்தர்ப்பவாதிகள். இவர்கள் யாரை வேண்டுமானாலும் கும்பிடலாம். வைஷ்ணவர்கள் தாமோதரப் பெருமாளை வழிபடவும். ஜனார்த்தரை வழிபடக் கூடாது.

ஒருவர் சிம்ம லக்கினம் மீன இராசி, மேஷம் லக்னம் கடக இராசி என்றால் ஜோதிடர் இராசி லக்னங்களுக்கு உண்டான கடவுளரை, லக்னத்திற்குள்ள கடவுளை அருள் தெய்வமென்றும், இராசிக்குள்ள தெய்வத்தை இஷ்டதெய்வம் என்றும் குறிப்பிட வேண்டும்.

பழங்கால அரசர்கள் நினைவாய், பலிச்சக்கரவர்த்தி தன்னையே இறைவனுக்குக் காணிக்கை ஆக்கியதால் அவர் நினைவாக, பலிகொடுத்தல் என்று அவர் பெயரையே சூட்டியதையும், நீதி தவறா மனுநீதி சோழன் நினைவாய் மனுகொடுத்தல் என்ற பெயரும் உண்டானதை முன்னர்ப் பார்த்தோம். அதற்கிணங்க

சுவாமிகளுக்கு உயிர்ப் பலி கொடுப்பதை நீக்கி, பழம், பூ நிவேதனம் செய்வது நல்லது. இஸ்லாம் என்றாலே அமைதி, சாந்தி என்று பொருள். கிறித்தவம் என்றாலும் கருணையைக் குறிக்கும்.

அதே போல் ஒரு விஷயம். எண்ணியல் (நியூமராலஜி) என்ற பெயரில் புன்யாஜனத்தில் வைத்த பெயரை யாரும் மாற்றியமைக்கக் கூடாது.

சிசேரியனில் குழந்தை பிறந்தால் லக்னத்துக்கு, சுக்கிரனுக்கு, இராசிக்கு 10 இல் செவ்வாய் இருக்கும். பிற தேசத்தில் பிறந்த குழந்தைக்கு அவ்வூர் மதிப்பீட்டுகளிலேயே ஜாதகம் எழுத வேண்டும். இந்திய நேரத்துக்கு (IST) மாற்றி எழுதக் கூடாது.கல்வி பயின்றவர் முகம் ஒளிபெற்று இருப்பதை நாம் அறியலாம். சுக்கிரன் + குரு, லக்கினாதிபதி, இராசியாதிபதியானால் அல்லது பரிவர்த்தனையானால் வல்லரசு ஜாதகம் என்று கூற வேண்டும்.

### 7.2. ஜோதிடர்கள் ஜோதிடத்துக்கப்பால் தெரிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்கள்

1. ஔதாரண்யம் என்றால் கடல். (ஓதம் – கடல்.) ஆரண்யம் காடு. நீர்காடு கடல். அதுவே அந்தணர்கள் சூரிய வழிபாட்டுக்குப் பயன்படும் உத்ரனியானது (சிறு கரண்டி).

2. மமகாரம் (என்னுடையது என்பது) அகங்காரம். நான் என்ற எண்ணம். யான், எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி என்பதற்கிணங்க, இது என்னால் ஆனது, திருமணத்தை நான் முடித்து வைத்தேன் என்று கூறுவதை ஜோதிடர் தவிர்க்க வேண்டும்.

3. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது தவறு. மாட்டு என்றால் பூட்டு என்று பொருள். நல்ல பூட்டுக்கு ஒரு ஜோடி சாவியே போதும் என்பது போல் ஜோதிடர் நான், எனது என்று கூறாதிருப்பது பண்பு.

4. யோகங்கள் மூவகை: அவை : 1) சித்தயோகம், 2) மரணயோகம், 3) அமிர்தயோகம் என்பன. யோகம் என்பது நட்சத்திரங்களுக்கும், கிழமைகளுக்கும் தொடர்புபடுத்தி வருவது. இது பஞ்சாங்கத்தின் முதல் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது.

சித்தயோகத்தில் பிறந்தவர்கள் நல்லாசிரியர்கள். அமிர்தயோகத்தில் பிறந்தவர்கள் பெரும்பதவி வகிப்பர். மரணயோகத்தில் பிறந்தவர்கள் தீய பழக்க வழக்கமுள்ள பண்பாளராவர்.

5. **திதித்வயம், நட்சத்திர லக்ன சந்தி, த்யாஜ்யம்**

ஒரே நாளில் இரண்டு திதி (மதியத்துக்கு மேல்) வருவது திதித்வயம். அமிர்த–சித்த–மரண யோகத்துக்கு இடையே உள்ள பகுதி த்யாஜ்யம். இதைத் தெரிந்துகொள்ளலாம். அவ்வளவே.

ஆனால், குழந்தை பிறந்து ஓரிரு விநாடி, நிமிடங்களில் நட்சத்திரம் மாறுவது நட்சத்திர சந்தி. அதேபோல் குழந்தை பிறந்து ஒரு சில நொடிகளில் லக்னம் மாறுவது லக்ன சந்தி. எனவே ஜாதகம் கணிக்கும் போது நேரத்தைச் சரியாய்க் கேட்க வேண்டும்.

6. கேட்டை, அனுஷம் நட்சத்திரக்காரர்களுக்கு நாய்க்கடி விஷம் ஏறாது. பூசம், கார்த்திகை நட்சத்திரக்காரர்களுக்கு நாய்க்கடி விஷம் ஏறும்.

7. 6 இல் சந்திரன், சூரியன் இருக்கும் காலத்தில் ஜோதிடருக்கு வாக்குப் பலிதம் உண்டாகும். எனவே ஒரு ஜோதிடர் தனது இராசிக்கு 6 ஆம் இராசியில் சூரியன், சந்திரன் இருக்கும் காலத்தைப் பயனபடுத்திக் கொள்ளவும்.

8. லக்னத்துக்கு 2 ஆம் வீட்டை 3 க்கு மேற்பட்ட கிரகங்கள் பார்க்கும் காலமும், பிறந்த ஜாதகத்தில் அவ்வமைப்பு இருப்பினும் வாக்கு பலிதம் உண்டு. 2 இல் சனி இருந்தால் சாபம் பலிக்கும்.

9. துளசி திருமால் உமிழ்நீரில் வந்தது. துளசி வனம் கோவிலுக்கு உகந்தது. பிருந்தாவனம் என்பது சமாதி. அத்துளசி சமாதிக்கு மட்டுமே பயன்பட வேண்டும். கருந்துளசியை விட வெண் துளசி சுவாமிக்கு நல்லது.

10. பிறர் எவ்வளவு பணம் கொடுத்தாலும் பெண் ஜாதகத்துக்கோ ஆண் ஜாதகத்துக்கோ பொருத்தமான தேதியைத் தேர்ந்தெடுத்து புது பொய் ஜாதகத்தை ஒரு ஜோதிடர் எழுதக் கூடாது. ஒழுக்கம் கெடும். அதே போல் முடியை வைத்து மந்திரிப்பது, சித்திரம் வரைவது, பொம்மை செய்து ஆற்றில் விடுவது கூடாது.

11. ஒருவர் போல் படம் வரைந்து அதில் குண்டுசியால் குத்துவதோ சித்திரவதை செய்வதோ கூடாது.

12. 5 ஆம் அதிபதி 7 இல் இருந்து அந்தத் தெசை நடந்தால் பிற மதத்துக்கு மாறுவார்கள் மிருகசீரிஷ நட்சத்திரக்காரர்கள். இமானுவேல் என்பவரை நம்பக்கூடாது

13. 10 ஆம் அதிபதி 6 இல் இருக்க 6 இல் புதன் இருந்தால் விஜிலன்ஸ் ஆபீஸர். பேராசிரியர். இவர்கள் ஜோதிடரையே ஆழம் பார்ப்பவர்கள். எனவே ஜோதிடர் அவ்வமைப்பு உள்ளவரிடம் கவனமுடன் இருப்பது நல்லது.

### 7.3. ஜோதிடமும் கடவுளும்

1. ஜோதிடர்கள் ஜாதகம் பார்க்க வருபவர்களுக்குக் கடவுளாய்த் தெரிவர். இருந்தாலும், ஜோதிடர்கள் ஜோதிடம் பார்க்குமுன் எந்தத் தெய்வத்தை வழிபட வேண்டுமென்றால் மேற்சொன்ன இராசியில் (எது ஜோதிடரின் ஜென்ம இராசியோ அந்தத் தெய்வத்தைக் குறிப்பிடுவதும் அதை வழிபட்டு ஜாதகம் பார்ப்பதையும் வழக்கமாய்க் கொள்ள வேண்டும்.

வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்தில் ஜோதிடர் தான் ஜாதகம் பார்க்கும் இடத்தை ஒரு தூய்மையான, சுகாதாரமான அலுவலகம்போல் வைத்திருப்பது அவசியம். இது ஜாதகம் பார்க்கத் தனியேவரும் பெண்களுக்கு நம்பிக்கையை ஊட்டவல்லதாயும், ஜோதிடர் சகோதரர் போன்றவர் என்ற உணர்வு

வருவதாயும், பயமின்றி இருப்பதாயும் அமையும். ஊதுபத்தி, எலுமிச்சை, காளியம்மன் படம் போன்றவை ஏதும் இல்லாமல் இருப்பது நல்லது. சுவாமிகளை மனத்தில் நினைத்தாலே போதும்.

**2. லம்பிகா யோகம்:**

நாக்கு நுனியை மேலண்ணத்தில் மடித்து வைத்துக்கொண்டு வெகுநேரம் இருப்பது நல்லது. பழம் என்று சொன்னால் 'ழ' என்று வரும் போது நாக்கு மேல் நோக்கி அண்ணத்தில் தொட்டு இருக்குமல்லவா? அந்த நிலையில் நாக்கை வைத்திருப்பது லம்பிகா யோகம். இது மரணத்தருவாயில் செய்தால் சில நாட்கள் உயிரோடு இருக்கலாம். பகவான் இயேசுபிரான் (உத்திரட்டாதி நட்சத்திரம்) அவர் இதைப் பயன்படுத்தியே மீண்டும் உயிர் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அது ஒரு தவம் போன்றது.

3. பௌர்ணமி காலங்களில் நிலவொளி வெள்ளத்தில் மக்கள் கூடிப்பேசி மகிழ்ந்தனர். அதுவே நாளடைவில் ஒவ்வொரு பௌர்ணமியும்திருவிழாவாய் மாற்றப்பட்டுள்ளது. இதற்கும் ஜோதிடத்துக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழுகிறதா? பிறருக்கு விளக்கவே இது.

4. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பண்பாடு இருக்கும். அதை அனுசரித்தே ஜாதகம் பார்க்க வேண்டும். ஓர் இந்து கோவிலுக்குக் கைலி கட்டிச் செல்லக் கூடாது. ஆனால் ஒரு முகமதியரோ கைலியோடுதான் மசூதிக்குச் செல்ல வேண்டும். இந்துக்கள் காலணியைக் கோவிலுக்கு வெளியே விடுவர்; கிறித்தவ அன்பர்களோ காலணியைப் பயன்படுத்துவர். இதை ஒரு கணக்கு ஆய்வாளருக்குப் (ஆடிட்டருக்குப்) பொது அறிவு எப்படித் தேவையயோ அதேபோல் ஒரு ஜோதிடருக்கும் பொது அறிவு தேவை.

ஜாதகத்தில் உள்ள இராசி–அம்ஸம் இரண்டுமே ஒருவரது முற்பிறவியின் செலவு, வரவுக் கணக்கைச் சமப்படுத்திக் காட்டும் இருப்புநிலை ஏடு (அதாவது பேலன்ஸ் ஷீட்). எனவே, ஒரு ஜோதிடர் ஆடிட்டர் போன்று ஜாதகத்தைச் சரி செய்துவிட்டே ஜாதகம் பார்க்க வேண்டும். உனக்குக் கார் வாங்கும் அம்ஸம், வீடு வாங்கும் அம்ஸம் உள்ளது என்று பெரியவர்கள் கூறக் கேட்டது எதைத் தெரியுமா? ஜாதகத்திலுள்ள நாவம்ச நிலையைத்தான் அது கூறுகிறது.

5. **ஆங்கிலேயரும் இந்தியரும்:**

ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் வேறுபாடுகள் உள்ளன. அவை

1. இந்தியர் குடுமி வைத்திருப்பார்கள். ஆங்கிலேயர்கள் தலைமுடியை வெட்டியிருப்பார்கள்.
2. இந்தியர் பசித்திரு, தனித்திரு என்பார்கள். அவர்களோ சோம்பலான மனம் ஒரு பேயின் தொழிற்சாலை என்பர்.
3. நாம் வலக் காலை எடுத்து வைப்போம். அவர்கள் இடம், வலம் என்று தொடங்குவர்.

4. நாம் சட்டையின்றி துண்டோடு உணவருந்துவோம். அவர்களோ முழு ஆடை அணிந்து உணவு உண்பார்கள்.

5. நண்பனின் பெருமையை மனைவியிடம் சொல்லாதவர்கள் ஆங்கிலேயர்கள். நம்மவர் (துரியோதனன்) மனைவியை நண்பருடன் தாயம் விளையாட அனுமதிப்பவர். அதற்காக அமெரிக்கப் பெண்கள் எல்லாரும் கெட்டவர்கள் அல்லர். நம்மவர்கள் எல்லாரும் நல்லவரல்லர். எனவே இடம் அறிந்து பேசுதல் நலம்.

6. ஜாதகம்பார்க்க வருபவர்கள் ஜோதிடரை தங்களைக் காக்க வல்ல கடவுளராய் நினைப்பதால் ஜோதிடம் பார்க்கும் போது, நடுவில் எழுந்து செல்வதைத் தவிர்க்கவும். நகைச்சுவையாகப் (ஜோக்கடிப்பதை) பேசுவதைத் தவிர்க்கவும். கேட்ட கேள்விக்கு ஆறுதலான பதிலைத் தக்க உதாரணங்களுடன் சொல்லவும். நிறைய புராணக்கதைகள் தெரிந்து வைத்திருப்பதும் சம்பந்தப்பட்ட இடத்தில் சொல்வதும் நல்லது.

ஒரு முகமதியருக்கு ஜாதகம் பார்க்கும்போது முகமது நபிகள் புளித்த திராட்சையைப் புன்னகையோடு உண்டதையும், ஒரு கிறித்தவர் வரும்போது இயேசு கடலலையை அடக்கியதாகவும், இந்துக்கள் வரும்போது இராமாயணம், மகாபாரதக் கதையையும் எடுத்துச்சொல்வது நல்லது.

கேள்வி கேட்பது நம்மை கௌவுரவிப்பதற்கே என்றுணர்ந்து தக்க பதில் சொல்வது நல்லது. புன்னகையோடு பதில் சொல்லவும்.

7. **தெசை புக்தி கணக்கிடல்**

தெசாபுக்தி காணும்போது இன்றைய தேதியில் எந்தத் தெசையில் எந்தப் புக்தி நடக்கிறது என்று கண்டறிய, பஞ்சாங்கம் இல்லாத இடத்தில் ஜாதகம் பார்க்க நேரின் ஒருவழி உள்ளது. ஜாதகத்தில் தெசா புக்தி இருப்போடு பிறந்த தேதியைக்கூட்டி இன்றைய நாள் வரை நடப்பு தெசாபுக்தியை பஞ்சாங்கத்தில் தெசாபுக்தி அந்தரம் (24-25 ஆம் பக்கம் பார்க்க) பார்த்துச் சொல்லலாம்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் ஜாதகத்தில் இராகு தெசை சனி புக்தி நடக்கிறது என்றால் பஞ்சாங்கம் இல்லாத இடத்தில் இராகு தெசை சனி புக்தி எவ்வளவு காலம் என்பதை எப்படிக் கண்டறிவது?

வாய்பாடு (சூத்திரம்) : ஒரு தெசையில் புக்தி காலம்=தெசைநாதன் வருடம் × புக்திநாதன் வருடம் / 10 = mm.d

(ஈவு mm = மாதம், டெசிமல் d × 3 = நாள்).

இராகு தெசை 18 வருடம். சனி தெசை 19 வருடம். இந்த இரண்டு வருடங்களையும் பெருக்கவும். அதை 10 ஆல் வகுக்கவும். ஈவும் டெசிமலும் வரும். ஈவு மாதங்களைக் குறிக்கும். நாட்கள் கண்டுபிடிக்க, டெசிமல் எண்ணை 3 ஆல் பெருக்கவும். பெருக்கி வந்த விடையே நாட்களாகும்.

எனவே, 18 × 19 = 342 (இரண்டு வருடங்களையும் பெருக்கல்)

342 / 10 = 34.2 (10 ஆல் வகுத்தல்) (ஈவு = 34. டெசிமல் = 2) எனவே 34 மாதம்

2 × 3 = 6 (டெசிமல் எண்ணை 3 ஆல் பெருக்கல்) எனவே 6 நாட்கள்

இவ்வாறு கணக்கிட்டால் இப்போது வருவது இராகுதெசை சனிபுக்தி காலம் = 34 மாதம், 6 நாட்கள். அதாவது 2 வருடம், 10 மாதம், 6 நாள் எனக் கொள்ளவும்.

இதுவே, சனி தெசை இராகு புக்திக்குச் செல்லும்.

இந்த முறையில் ஒவ்வொரு தெசையிலும் வெவ்வேறு புக்திகளுக்கும் காலம் கண்டுபிடிக்கலாம்.

**எடுத்துக்காட்டு–2:** செவ்வாய் தெசை புதன் புக்தி காலம் எவ்வளவு?

செவ்வாய் 7 வருடம். புதன் 17 வருடம்.

ஆகவே 7 × 17 = 119

119 ஐ 10 ஆல் வகுத்தால், 119 / 10 = 11.9 (ஈவு = 11, டெசிமல் 9) எனவே 11 மாதங்கள்.

9 ஐ 3 ஆல் பெருக்கினால் 9 × 3 = 27 நாள்

எனவே விடை = 11 மாதம் 27 நாள். இதுவே செவ்வாய் தெசை புதன் புக்தி காலம். மேலும் இதுவே புதன் தெசை செவ்வாய் புக்திக்கும் பொருந்தும்.

இவ்வாறு கணக்கிடுவது பழக்கத்தில் வந்துவிடும்.

8. வாய்வுத் தொல்லை ஆஸ்துமாத் தொல்லை உள்ளவர்களை அரசமரம், ஆலமரம் கோயில் சந்நிதியை வலம்வரச்சொல்வதால் நடைப்பயிற்சி உண்டாகும். இடமிருந்து வலமாய்ச் சுற்றுவதே நலம். பூமியும் அப்படியே சுற்றுகிறது. கூரை மின்விசிறி மட்டுமே வலமிருந்து இடமாய் சுற்றும்.

9. சிலர் கனவுக்குப் பலன் கேட்பார்கள். அப்போது கனவுக்குச் சம்பந்தமாய் சற்று சாதகமான பலனைக் கூறவும். சிலர் பகலில் கண்ட கனவுக்குப் பலன் கேட்பார். உடனே பகல் கனவு பலிக்காது என்று சொல்லக் கூடாது பகம் என்றால் கொக்கு. கொக்கு நல்ல மீனுக்காகக் கண்ணை மூடியிருப்பதையே பகக்கனவு பலிக்காது என்றனர். அதுவே பகல்கனவானது. எனவே இவ்வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம்.

10. ஜாதகத்தில் உச்சம், நீச்சமான கிரகங்கள் இருப்பதை விட, ஆட்சி, வர்கோத்தமமுள்ள கிரக அமைப்பே சிறந்தது. எனவே ஒருஜோதிடர் ஜாதகத்தை எடுத்தவுடன் இதனைக் கவனிப்பது நல்லது.

11. ஜோதிடர்கள் வருபவரிடம் ஜாடையாய் இது வேண்டும், அது வேண்டும் என்று எதையும் கேட்கக்கூடாது என்பதை முன்னர்ப் பார்த்தோம். அதேபோல் அலுவலகத்தில் வணிக வாசகம் எதுவும் எழுத வேண்டாம். அதேபோல் தத்துவங்களும் கூடாது. எதிர்மறை வார்த்தைகளும் கூடாது.

1. உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்.

2. தேடாதே தொலைந்து போவாய். அழிக்காதே, அழிந்து போவாய். கேட்காதே. கொடு.

3. எல்லாரையும் பயமுறுத்தாதே. எல்லாருக்கும் பயப்படுவாய்.

4. எதிர்த்தால் எதிர்ப்பார்கள். பணத்தைக் காப்பாற்று. அது உன்னைக் காப்பாற்றும்.

5. உடல் சொன்னபடி நீ கேட்காதே. நீ சொன்னபடி உன் உடல் கேட்கட்டும்.

6. பிறர் உன்னைத் திரும்பிப் பார்க்க நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே.

7. யாரையும் நோக்கிச் செல்லாதே. அவர்கள் உன்னை நோக்கி வருவர்.

மேற்கண்ட வாக்கியங்களை அலுவலகத்தில் வைக்கக்கூடாது. இவை விலக்கப்பட வேண்டியவை.

12. சுக்கிரன் உச்சமானால் இருதார யோகம் என்பதால் கவனமுடன் பலன் பார்க்கவும்.

13. தத்துவம், புராணக் கதை, வேதாசாரம் புத்தக விவரம் முதலியவற்றை உணர்ந்திருப்பது நல்லது.

14. திண்டிவனம்-புளியங்காடு, விருத்தாசலம்-முதுகுன்றம், மைசூரி-மசிஷஊர் (எருமை தேசம்) இது போன்ற ஊர்களின் காரணப் பெயரைத் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லது.

15. ஆண் ஜாதகத்தில் அவருடைய முதல் தெசை முடியும் போது அவருக்குண்டான மனைவி பிறப்பார். இதை வைத்தே கணவர்-மனைவி வயது வேறுபாட்டை அறியலாம் என்று முன்னர்பார்த்தோம். அதனால் தான் ஸ்வாதி நட்சத்திரக்காரருக்கு இராகுதெசை அதிகம் இருப்பதால் 14 வயது குறைந்த மனைவி அமைகின்றனர்.

16. எதில் தனித்துவம் பெறுகிறோமோ அது நமக்கு இல்லை. தமிழாசிரியர், கணக்காசிரியர் பரீட்சை எழுதினால் 100 மதிப்பெண்கள் வாங்குவர். ஆனால் எழுத முடியாதல்லவா?

### 7.4. பொது:

1. பணத்தைத் தொடுவது மாமிசத்தைத் தொடுவது போல: பணத்தைக் கையால் தொடமாட்டேன். தாம்பூலத்தில் வையுங்கள் என்று ஜோதிடர் வந்தவரிடம் ஒருபோதும் சொல்லக் கூடாது. ஜாதகம் பார்க்கும்போது அவர்கள் மகிழ்ச்சியடைய பிறரை அதிகம் புகழ்ந்து பேசுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள். எனவே, புகழ்ந்து பேசவேண்டாம்.

2. பஞ்சபூதங்களில் ஒரு பூதம் மற்றொரு பூதத்தைக் கட்டுப்படுத்தாது. கட்டுப்படுத்தவும் கூடாது. ஆனால், மனிதனோ மனிதனுக்குக் கட்டுப்படுகிறான்.

3. குறிக்கோளின்றி இரு. குறிக்கோள் உன்னைத் தேடி வரும். குறிக்கோளை நோக்கிச் செல்லாதே. குறிக்கோள் உன்னை நோக்கி வரும்.

4. முகமதியர்கள் வாவுல் ஹம்த் என்னும் நதியையும் சிராதுல் முஸ்தஹீம் என்னும் முடியிழை

பாலத்தையும் மரண காலத்தில் கடக்க வேண்டும் என்றும், இந்துக்கள் வைதரணி நதியைக் கடக்க வேண்டும் என்றும் கிறித்துவர்கள் பாவக்கடலை கடக்க வேண்டும் என்று நம்புவதும் தஸ்தகீரைக் கண்டு மனிதன் அச்சமுற்றுள்ளான் என்பது தெரிகிறது. இதனைச் சோதிடர் அறிந்து ஆறுதல் சொல்ல வேண்டும். நாய் ஊளையிடுவது மரணச் செய்தி என்பது யாவரும் உணர்வதே. அருணகிரிநாதர், திருதராட்டிரன், இயேசு மூவரும் உத்திரட்டாதி நட்சத்திரத்தினர். வெருட்சி சகுணம் என்றும் நல் நிமித்தம் நரி ஊளையிட்டது ஒரு சோதிடர் அறிய வேண்டும்.

5. மனித மூக்கு – மகாலெட்சுமி (தனலெட்சுமி)

மனித நாக்கு – வித்யாலெட்சுமி

மனித இதயம் – விஜயலெட்சுமி

மனிதத் தொடை – தைரிய லெட்சுமி ( அதனால் தான் கோழைகளை தொடைநடுங்கி என்கிறோம்)

மனித வயிறு – சந்தான லெட்சுமி

மனிதக் கரம் – ஆதிலெட்சுமி

மனிதப் பாதம் – தான்ய லெட்சமி

மனித மூளை – வீரலெட்சுமி

என்று இருப்பதாக ஜோதிடர் அறிய வேண்டும்.

6. வருபவருள் சிலருக்கு நகைச்சுவையாய்ப் பேசினால் பிடிக்காமல் இருக்கலாம். சூரியன் கல்வி க்ரகம் மற்றவை கல் விக்ரகம் என்பது போன்று பேச வேண்டாம். அவர்கள் பயத்தைப் போக்கும்படி சிறிது நகைச்சுவையாகவும் ஒரு டாக்டரைப் போன்று மெதுவாகவும் பேச வேண்டும். பலன் சொல்ல வேண்டும்.

7. இறந்தவர்களை இறைவன் மீட்பான் என்பதால் சமாதி அமைப்பது கிறித்தவர் நம்பிக்கை. முகம்மதியர் நம்பிக்கை. இந்துக்கள் உடல் எரியூட்டினால் தான் விடுதலை என்பது போன்ற நம்பிக்கை அடிப்படை தெரிந்து பலன் சொல்வது இறையருள் தன்மை.

OOOOO

# பாடம் 8 – இயற்கை தரும் பாடம்

பொதுவாக இயற்கை ஊருக்குள், வீட்டிற்குள் வரக்கூடாது. சுனாமி, கடல், இயற்கை ஊரில் வந்தது. அது பெரிய சேதத்தை உண்டாக்கியதல்லவா? அதே போல் தென்னை ஓலை வீட்டுக்குள் வந்தால் மரண நிகழ்வு என்று பொருள். இதனை உணர்ந்து ஜோதிடர் இயற்கையுடன் ஒன்ற வேண்டும். ஆதி காலத்தில் நாம் வாழும் பூமி போட்டி, பொறாமை, கோபம் தாபம், உயர்வு தாழ்வு ஏதுமின்றி எதைப் பற்றியும் அறியாமல் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு இருந்தது. இருக்கிறது.

பூமி தட்டையானது என்றும், அப்படி இல்லை, அது உருண்டையானது என்றும் நெபுலாவின் சிறு துகள் என்றும் பலவாராய்ப் பேசப்பட்டது. பூமி சூரியனைச் சுற்றுகிறது. இல்லை சூரியன் பூமியைச் சுற்றுகிறது என்ற விதவிதமான வாக்குவாதங்களுக்கு இலக்காகி எதைப்பற்றியும் கவலைப்படாமல் இதுநாள்வரையில் எவ்வித உண்மையையும் கண்டறிய இடம் தராமல் புரியாத புதிராய் மௌனமாய் சுழல்கிறது. பூமியிடம் நாம் கற்க வேண்டியது பொறுமை. மௌனம். பேரிடிகள் விழுந்து–விழும்போதும் மௌனமாய் இருப்பதை உணர்க.

பொதுவாகப் பேசப்படும் வாக்கியங்களுக்கு வேறு பொருள் இருக்கும். அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும் என்ன சம்பந்தம்? என்பாருளர். அமாவாசை தென்புலத்தார்க்கு உள்ளது. அதற்கும் மறுபிறப்புக் கொள்கை இல்லாத இசுலாமியத்துக்கும் என்ன தொடர்பு என்பது பொருளல்ல. இது எதுகை மோனை. சொல்லப் போனால் அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும்தான் நெருங்கிய சம்பந்தம் உண்டு. ஏனென்றால், அவர்கள்தாம் மற்றவர்களைவிட கவனமாய் பிறை பார்ப்பார்கள். பிறையோ சிவன் தலையில் உள்ளது. வேளாங்கன்னி மாதா பிறைமிசை நின்ற கோலமுள்ளவர்.

பேச்சு வழக்கில் குப்பனுக்குக்கூட இது தெரியாது என்பார்கள். குப்பன், குப்புசாமி என்பவர்கள் பெரிய பதவியில் இருக்கவே செய்கின்றனர். மனித இனத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், கருத்துவேறுபாடுகள் இயற்கையிடம் இருப்பதில்லை. எல்லா ஊர்களிலும் மரம் பசுமையாய், வயல்கள் பசுமையாய் ஒரே உயரத்தில் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் மனித இனம் அப்படி இல்லையே. இதுவே இயற்கை நமக்குச் சொல்லித் தரும் பாடம்.

இந்தப் பூமிக்கு உயிருள்ளதா? உயிரற்றதா? தன்னுள் எவ்வளவு மர்மங்களை, தாதுப்பொருட்களை வைத்துக்கொண்டு மனிதர்களுக்கு உதவுகிறது. நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் என்ற பஞ்சபூதங்களால் ஆனதால் இது பிரபஞ்சம் ஆனதா? இடுகுறிப் பெயரா? இந்தப் பூமி யாருக்குச் சொந்தம்? யார் இதனைப் படைத்தது? மனிதன் பூமியைத் தனக்குச் சொந்தமெனக் கொண்டாடி உலகத்தை எப்படிக் கெடுத்து

விட்டான்? இது இயற்கையின் செயலா? கடவுளின் செயலா? இயற்கையே கடவுளா? எண்ணிப் பாருங்கள்.

விண்வெளியில் பாதத்தடம் பதித்த முதல் மனிதர் ஆம்ஸ்ட்ராங் உலகிற்குத் திரும்பியதும் நிருபர்கள் கேட்ட கேள்வி: நிலவிலிருந்து பூமியைப் பார்த்தபோது உங்கள் மனநிலை என்னவாயிருந்தது? முதல் அமெரிக்கர் என்ற நினைவு பெருமிதம் வந்ததா என்று கேட்டதற்கு, அவர் அளித்த பதில்: இல்லை, இல்லை, இந்த அழகான பூமியை மனிதன் எப்படிக் கெடுத்து விட்டான் என்ற வருத்தமே தோன்றியது.

இயற்கையோடு ஒன்றியவர்கள் ஏற்றத்தாழ்வு பார்ப்பதில்லை. ஐந்தறிவுக் கிளியிடம் மனிதன் ஜோதிடம் கேட்கிறான். எறும்புகள் வரிசையாகச் செல்வதைப் பார்ப்பவருக்கு அந்த ஒழுங்கு வருமா? புறா – காகத்தின் ஒற்றுமைதான் நமக்கு வருமா? கூடிவாழ்ந்து உணவு உண்ணல் நம்மிடமுள்ளதா?

இந்த இயற்கையைப் பாருங்கள் எவ்வளவு அழகாய் உள்ளது கடலைப் பாருங்கள் அலையால் மனிதனை வா, வா என்கிறது. ஆழ்கடல் எவ்வளவு அமைதியாய் உள்ளது? அதில் எவ்வளவு இரகசியங்கள் உள்ளன? கரை, தடையில்லா எல்லைகளில்லாக் கடல் ஊருக்குள் வராமல் இருக்கிறது? இது யார் செயல்?

காற்றைப்பாருங்கள். மர இலைகளால் நமக்குச் சாமரம் வீசுகிறது. காற்றின் உருவமென்ன? மனிதர்களோ சிறிதாய் ஏதாவது செய்துவிட்டுப் பெரிதாய்க் காட்டுகின்றனர். காற்றோ சன்னலை அடைத்தால் உள்ளே வருவதில்லை. திறந்தால் வருகிறது. ஆனால், மனிதர்களோ ஏதோ ஒரு நினைவில் கதவை மூடினால் பகைமை பாராட்டி அவ்விடம் செல்வது இல்லை? காற்றின் பெருந்தன்மை நமக்குக் கற்கவேண்டிய பாடம் என அமைகிறது.

நெருப்பைப் பாருங்கள். நாம் அதனைத் தீண்டினாலொழிய நம்மைத் தீண்டுவது இல்லை. உணவு சமைக்க உதவுகிறது. குடுங்குளிரில் குளிர் காய உதவுகிறது. அதன் செயலை எவ்வளவு விலை கொடுத்தாலும் அது ஈடற்றதாகும்.

நிலம் நமக்கு புகலிடம், உணவு தருகிறது.

ஆகாயத்தைப் பாருங்கள். ஆகா! என்ன அதிசயம். விண்மீன்கள், சந்திரன், சூரியன் இவையெல்லாம் நமக்கு வேடிக்கை காட்டவா உள்ளன? அல்லது பொருட்காட்சியகத்தில் உள்ளது போல் எதையும் எதிர்பார்க்காமல் நமக்குப் பணிவிடை செய்கிறதே? நமக்கு மௌனமாய்ப் பாடம் புகட்டுகிறதே? தொடர்ந்து ஒரு வாரம் வேலை செய்தாலே அலுத்துப் போகும் நமக்கு சூரிய–சந்திரர்கள் எல்லாம் கோடானுகோடி மைல்கற்களுக்கு அப்பால் தனிமையில் இருந்து கோடானுகோடி ஆண்டுகளாய் ஒரே வேலையைச் செய்து பொறுமையைப் போதிக்கின்றன. ஆனால், மனிதன் பொறுமையைச் சோதிக்கிறான்.

இயற்கை நம் வீட்டுக் கல்யாண விசேடங்களில் கலந்து கொள்கின்றனவா? அதற்குப் பொழுதுபோக்கு? எண்ணிப்பாருங்கள். ஜப்பான்காரர்கள் 10 யென் நாணயங்களுக்குச் சண்டையிடும் போதும், ஆங்கிலேயர்கள் 10 டாலருக்குச் சண்டையிடும்போதும், இந்தியருக்கு உள்ள மனநிலையில் அதாவது அசாதாரண சலனமின்மை இயற்கையிடம் உள்ளது. இயற்கைக்கு மனிதனின் பயன்பாட்டுக்குள்ள பொருட்கள் தேவையில்லை.

பூமியும் மற்ற கோள்களும் சூரியனோடு இணைந்து எத்தனை ஆண்டுகள் ஒரே விசைவேகத்தில் சுழலுகின்றன? இவை ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்துக்கு வேகத்தைக் குறைத்துக் கொண்டால் அல்லது நின்றால் பனி பெருகும். உருகும். சூடு அதிகமாகும். இவையாவும் அயராமல் தன்னலமின்றி உழைக்கிறதே? இதற்கு மனிதன் காட்டும் நன்றி என்ன?

எது தனியாய் இருக்கிறதோ அதற்குப் பாதுகாப்பு அதிகம். மலையும் கடலும் வெட்டவெளியில் தனித்தனியே நிற்கின்றன. யாராவது கடலிலிருந்து ஒரு குவளை நீரையோ மலையிலிருந்து ஒரு கல்லையோ திருடுகிறார்களா? எடுக்கிறார்களா? இரவில் அவற்றை பார்க்கவோ நெருங்கவோ முடியுமா? எக்காலமும் மழை, பனி, வெப்பத்தில் கேட்பாரற்று கம்பீரமாய் மலை அகண்டு நிமிர்ந்து கம்பீரமாய் நிற்கிறது. கடல் அகண்டு விரிந்து பரந்துள்ளது. இவை நமக்குப் புகட்டும் பாடம் தனிமையில் தைரியம் தன்னம்பிக்கை. அவற்றின் வீரத்தை நாம் கடைப்பிடிக்கலாமே?

நிலக்கடலை தோலோடு ஒட்டாதது போல் நம்மால் இருக்க முடியுமா? கோழி முதலா, முட்டை முதலா? ஆண் முதலா, பெண் முதலா? இதற்கெல்லாம் இன்றும் கூட விடை கிடைக்கவில்லை. நரியின் இராஜதந்திரம் மனிதனிடம் இல்லை. குணம் தான் இருக்கிறது. காக்கைக்கு உடல் கருப்பு. மனிதருக்கோ உள்ளமே கருப்பு. கோடானுகோடி பேர்கள்-மனிதர்கள் நாள்தோறும் பிறந்து, இருந்து, இறக்கும்போது பூமி மட்டும் நிலைத்திருப்பது எதைக் காட்டுகிறது? நிலைத்திருப்பதால் நிலமானது.

60 வருடங்களுக்கு முன்னால் தாத்தா கட்டிய வீடு இன்றும் உள்ளது. தாத்தா இறந்துவிட்டார். இப்போது வீடு மாயையா? தாத்தா மாயையா? தன்னை வெட்டும் மனிதனுக்கு நிழல்தருகிறது மரம். ஒரு மனிதனின் நிழலில் இன்னொரு மனிதன் நிற்க முடியுமா? இந்த மண்ணில்தான் எத்தனை மனிதர்கள், புனிதர்கள். விஞ்ஞானிகள் தங்கள் பாதத்தைப் பதித்தனர்? அவர் தம் பாதச்சுவடகளைப் பின்பற்றினாலே போதுமே? எல்லா நலன்களும் உண்டாகுமே? அதைப் பின்பற்றாதது ஏன்? இப்பூமியில் ஏன் இத்தனை மாற்றங்கள், ஏமாற்றங்கள். எதிர்பார்ப்புக்களே காரணம்.

எல்லா மதமும் என்ன சொல்கின்றன? அன்பாயிரு. உழை, பிறருக்கு உதவு என்றுதானே? அவற்றை மனிதன் பின்பற்றுவதே இல்லையே?

இது ஒருபுறம் இருக்க உலகில் மனித இனம் எவ்வாறு தோன்றியது என்று ஆராய்வோம். ஒரு செல் அமிபாமூலம் தோன்றியதா? ஆதாம் – ஏவாள்தான் முதல் மனித இனத்தவரா? மலை, குகை, மரப்பொந்துகளில் மனிதன் வாழ்ந்தானா? இவை மனிதரால் ஏற்பட்ட கேள்விகள். குரங்கில் இருந்து மனிதன் மாற்றமடைந்தான் என்றால் இப்போதுள்ள குரங்குகள் ஏன் மனிதராய் மாறவில்லை. வால் உள்ள நரம் வால்நரம்–வானரம் வாலில்லா வெறும் நரம், மனிதன் நரம் என்றானது எப்படி? ஆதி உலகம் எப்படி இருந்தது? இப்படித்தான் புல்லாய், பூடாய், புழுவாய், மரமாகி பல்விருகமாகி பறவையாய், பாம்பாகி, வல்லசுரராகி, மனிதராய், தேவராய், பரிணாமமடைந்ததே மனித இனம். இந்தப் பத்துமே தசாவதாரம். வாழ்வாங்கு வாழ தேவனாய் ஆக்கப்படுவார். புத்தர், காந்தி எடுத்துக்காட்டுகள்..

வால்நரம் என்கின்ற குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்று மனித இனம்தோன்றி 80 கோடி ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 1882 இல் டார்வின் சொன்ன கருத்துக்கு எவ்வளவு கேலிப் பேச்சுக்கள் உண்டாயின தெரியுமா? கெட்டதைப் பார்க்காதே; கெட்டதைப் பேசாதே; கெட்டதைக் கேட்காதே என்ற தத்துவத்தைக் காட்டும் மூன்று குரங்குகளின் படத்தையும் டார்வீனையும் வரைந்து, டார்வின் தன் மூதாதயரோடு பேசிக்கொண்டு இருக்கிறார் என்று கேலிச்சித்திரம் வரைந்தது ஓர் ஆங்கில வார இதழ். இன்று டார்வின் பெரிய விஞ்ஞானியாய்க் கருதப்படுகிறார்.

வானத்தைத் தேவர்களையும் பறவைகளையும் தவிர வேறு யாராலும் பார்க்க முடியாது என்று ஒரு பாதிரியார் பிரசங்கத்தில் பேசிக் கொண்டிருந்த போது அவர் மகன் ரைட் சகோதரர்களுள் ஒருவர், வானத்திலிருந்து அன்றய ஆரம்ப ஆகாயவிமானத்தில் இறங்கினான்.

இப்படி விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் போட்டி போட்டுக் கொண்டு மனித இனத்தை வளர்த்தும் இன்னும் நாகரிகம் வளர வேண்டியுள்ளது. டார்வின் சொன்ன கருத்துக்கள் இன்று எவ்விதம் உதவுகின்றன. வால்நரத்திலிருந்து வந்த மனிதன் (நரன்) விலங்குகளாயல்லவா உலவுகிறான்? அக்காலத்தில் அசைவமே சைவமாய் இருந்தது மலைமானையும் கடல் மீனையுமே உண்டனர். மலைமீதிலிருந்து ஜலஜலவென்று விழுவதால் தண்ணீருக்கு ஜலம் என்று பெயர் வைத்தானோ? தண்ணீர் பயன்பாட்டால் உண்டானதே நதி நீர் ஆற்று நாகரிகம். பச்சைக் காய்கறிகளை நெருப்பில் பயனறிந்து சுட்டுண்டதே உணவுவகையானதோ? கல்லால் உரசி, நெருப்பை, பெருங்கனலைப் பெறும் கலையை யார் கற்றுத் தந்தது? இயற்கையே.

ஒரு மரமோ மலையோ உரசுவதில்லை. இலைகளும் முகடுகளுமே உரசுகின்றன என்பதுபோல் பலபலப் பாடங்களை மனிதன் இயற்கையிடம் இருந்து கற்றுக்கொண்டு மென்மேலும் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

எனவே, ஒரு ஜோதிடரும் இவற்றை உணர்ந்து இயற்கை போல், மழை எப்படி ஏழை–பணக்காரர் என்று பாராமல் நீர் தருகிறதோ, கதிரவன்–மதி ஒளி கொடுக்கிறதோ அதுபோல் விருப்பு– வெறுப்பின்றி செயல்பட வேண்டும். விருப்பு வெறுப்பு வாராதிருக்க யாரிடமும் நெருங்கிப் பழகாமல் இருப்பதுவே ஒரே வழி.

இனி ஜாதகம் பார்ப்பது எப்படி என்று காண்போம்.

OOOOO

## *அலகு V – ஜாதகப் பலன் எழுதுவது எப்படி?*

### பாடம் 9 – ஜாதகப் பலன் சொல்லுவது, எழுதுவது எப்படி?

ஜாதகம் பார்க்க வருபவர்கள் ஜாதகத்தைத் தந்தவுடன் மடமடவென்று ஜாதகம் பார்க்க ஆரம்பிக்கக் கூடாது. முதலில் ஜாதகம் சரியாய்க் கணிக்கப்பட்டுள்ளதா? என்று பார்க்க வேண்டும்.

#### 9.1. ஜாதகப் பலன் சொல்லும் முறை

**1. முதல் படி:** (பிறந்த மாதம் சரியா என ஆய்வு செய்தல்)

ஜாதகத்தில் எந்த இராசியில் சூரியன் இருக்கிறது என்று பார்க்கவும். மேஷத்தில் சூரியன் இருந்தால் இவர் சித்திரை மாதம் பிறந்தாரா? என்று கேட்கவும். மீனத்தில் இருந்தால் பங்குனியில் பிறந்தவரா? என்று கேட்கவும். சூரியன் எந்தக் கட்டத்தில் உள்ளதோ அந்த மாதத்தைக் குறிப்பிட்டுக் கேட்க வேண்டும். அவர்கள் ஆமாம் என்று சொன்ன பின் அடுத்த படிக்குச் செல்லவும்.

**2. இரண்டாம் படி:** (பிறந்த லக்னம் (நேரம்) சரியா என ஆய்வு நெய்தல்)

சூரியன் எந்த வீட்டில் உள்ளதோ அதிலிருந்து லக்னம் உள்ள வீடு வரை காலை 6-8 மணி, 8-10 மணி என்று 2 மணி நேரம் கூட்டிப் பார்க்கவும். ஒரு லக்னத்திற்கு 2 மணி நேரம் என்பதால் ஒரு நாளைக்கு 12 லக்னங்கள் வரும். எடுத்துக்காட்டாக, ஒருவர் சித்திரை மாதம் பிறந்து சிம்மம் லக்னத்தில் பிறந்திருந்தார் என்றால், சித்திரை மாதத்திற்கு முதலில் மேஷம் காலை 6-8 மணி. அடுத்து ரிஷபம் காலை 8-10 மணி. மிதுனம் காலை 10-12 மணி. கடகம் பகல் 12-2 மணி. சிம்மம் நண்பகல் 2-4 மணி என்று சிம்மம் வரை எண்ணி, குழந்தை மதியம் 2-4 மணிக்குள் பிறந்ததா? என்று கேட்க வேண்டும். அவர்கள் ஆமாம் என்று சொன்னால் பிறந்த நேரம் சரி எனக் கொள்ளவும்.

பின், குரு – சனி இரண்டையும் பார்த்துப் பிறந்த வருடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். ஜாதகத்தில் முன்பகுதியைப் படித்துப் பார்க்காமல் இராசிக் கட்டத்தை வைத்தே பிறந்த நேரம், மாதம், வருடத்தைத் தெரியப்படுத்தி கண்டுபிடிக்கப் பழக வேண்டும். இது பழக்கத்தில் வரும்.

**3. மூன்றாம் படி**

லக்னத்தில் இருந்து 12 வீடுகளில் உள்ள கிரகங்களைத் தொடர்புபடுத்தி பலன்கள் கூற வேண்டும். லக்னாதிபதி முதல் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 ஆம் அதிபதிகள் லக்னத்தில் இருந்து எங்கு உள்ளனர் என்று கண்டு கூற வேண்டும்.

**4. நான்காம் படி :** பின்னர் நடப்பு குரு, சனி, இராகு-கேதுக்கள் பெயர்ச்சி பலன், நடப்பு தெசா புக்தி பலன் கூற வேண்டும்.

**5. ஐந்தாம் படி:** இறுதியில் அவர்களுடைய அதிர்ஷ்ட எண், நிறம், கிழமை, கல் முதலியவற்றைக் கூறி முடிக்க வேண்டும். இதுவே ஜாதகம் பார்க்கும் முறை. பலன் சொல்லும் முறை.

### 9.2. ஜாதகம் பலன் எழுதுவது எப்படி?

ஜாதகம் நேரில் பார்த்து பலன் சொல்வதற்கும் ஜாதகப் பலன்கள் எழுதியனுப்புவதற்கும் நிறைய விஷயங்கள் கிடைக்கும். அதற்குரிய 6 குறிப்புகள் அடங்கிய படிவம் கீழே தரப்படுகிறது.

**படிவம்**

வளர்ந்து வரும் கணினி யுகத்தில் அப்படியே பலன்களை அனுப்பி விடலாம். இருப்பினும் அதைவிட வாடிக்கையாளர்கள் ஜோதிடர் கையால் பலன்கள் எழுதுவதையே விரும்புவர். ஜாதகப் படிவம் 8 பக்கங்களாய், 40 பக்கமுள்ள ஒரு நோட்டுப் புத்தகத்தில் பலன்கள் எழுதலாம். அவை:

**1. பக்கம் 1:** ஜாதகரின் பெயர் மற்றும் ஊர்:

**2. பக்கம் 2:** கடவுள் வாழ்த்து

**3. பக்கம் 3:**

நலம். (க்ஷேமம்)

எப்போ தகத்துள் நினைப்பார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல். – ஔவையார்.

அ. பெயர் :

ஆ. ஜென்ம நட்சத்திரம் :

இ. ஜென்ம இராசி :

ஈ. ஜென்ம லக்கினம் :

உ. பிறந்த தேதி :

*****

1. அதிர்ஷ்ட எண் :
2. அதிர்ஷ்டக் கல் :
3. அதிர்ஷ்டக் கிழமை :
4. அதிர்ஷ்ட திசை :
5. அதிர்ஷ்ட நிறம் :
6. அதிர்ஷ்ட வயது :
7. அருள் தெய்வம் :
8. இஷ்ட தெய்வம் :

9. தவிர்க்க வேண்டிய நாள் :

10. **செவ்வாய் தோஷம்** :

1. லக்கினம் :
2. இராசி :
3. சுக்கிரன் :

**4. பக்கம் – 4**

11. வர்கோத்தமம் :

12. ஆட்சி :

13. உச்சம் :

14. நீச்சம் :

15. பரிவர்த்தனை :

16. யோகம் :

17. வெளிநாட்டு யோகம் :

18. இலாபம் தரும்தொழில் :

19. விரயம் தரும் தொழில் :

20. இலாபம் தருபவர் :

21. விரயம் தருபவர் :

22. தந்தை வழி உறவு :

23. தாய் வழி உறவு :

24. நண்பர்கள் :

25. விரோதிகள் :

26. குணநலன்கள் :

**5. பக்கம் – 5:**

27. வாழ்வு :

28. குடும்பம் :

29. சகோதரம் :

30. தாயார் :

31. பூர்வபுண்ணியம் (கல்வி) :

32. நோய் :

33. மணவாழ்வு (கணவர்/மனைவி) :

**6. பக்கம் 6**

34. ஆயுள் :

35. தந்தை :

36. தொழில் :

37. இலாபம் :

38. நஷ்டம் :

39. குருப் பெயர்ச்சி பலன்கள் :

**7. பக்கம் 7**

40. சனிப் பெயர்ச்சி பலன்கள் :

41. இராகு-கேது பெயர்ச்சி பலன்கள் :

42. லக்னம் இராசி நட்சத்திர எண் பலன்கள் :

43. பிறந்த மாதம், வருடம், கிழமை பலன்கள் :

44. செய்யக் கூடியவை :

45. செய்யக் கூடாதவை :

**8. பக்கம் 8**

46. மரம் :

47. மூல மந்திரம் :

48. பார்வை பலன்கள்

    1. குரு :

    2. சனி :

    3. செவ்வாய் :

49. இராசி பலன்கள் :

50. சேரும் காய், கனிகள் :

51. சேரும் ஆடை, அணிகலன்கள் :

52. சேரும் மலர் :

53. விளையாட்டு :

54. சேராத எண் :

55. சேராத நிறம், மலர் :

56. சேராத காய், கனிகள் :

57. சேராத ஆடை, அணிகலன் :

**9. பக்கம் 9**

58. தெசா புக்தி பலன்கள் :

59. தெசா புக்தி விவரம் :

1.

2.

3.

4.

5.

6.

60. பொது :

61. வருடபலன்கள் (தெசை புக்தி விரிவு பலன்கள்) :

| வ.எண் | முதல் | வரை | தெசை | புக்தி | குரு | சனி | பலன்கள் |
|---|---|---|---|---|---|---|---|

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

**குறிப்பு:**

1. சில ஜாதகத்தில் வர்கோத்தமமோ உச்சமோ இருக்காது. வரிசையாய் வரவேண்டிய அவசியமில்லை. வர்கோத்தமம் இல்லையெனில் அதை நீக்கி, அடுத்துள்ளதை எழுதவும்.

2. வாழ்வு, குடும்பம் என்பதற்கு 3 அடி இடம் விட்டால் போதும்.

3. எண் 26-27க்கு விளக்கம் நடுபக்கம் ஜாதகம் எழுத வேண்டும்.

4. ஜாதகர் ஜாதகம் கணித்திருந்தால் கையொப்பமிடவும்.

5. வாடிக்கையாளர்கள் ஜாதகத்தைத் தந்து, ஜாதகப்பலன்கள் எழுதச்சொன்னால் ஜாதகத்தின் பின்புறம் கிரக பாத சாரங்களுக்குக் கீழ் நகல் என்று எழுதவும்.

இது வரை ஜாதகப் படிவம் பற்றிப் பார்த்தோம்.

இனி ஓர் எடுத்துக்காட்டு மூலம் ஒரு ஜாதகத்துக்கு முழுப் பலன்கள் எழுதுவது எப்படி என்று பார்ப்போம்.

OOOOO

# பாடம் 10 – ஜாதக முழுப்பலன்: ஓர் எடுத்துக்காட்டு

*கீழ்க்காணும் ஜாதகத்துக்கு முழுப்பலன் எழுதுக.*

ஷேமம்.

ஜெனனீ ஜென்ம சௌக்யானாம் வர்த்தனீ குல சம்பதாம்

பதவி பூர்வ புண்யானாம் லிக்யதே ஜென்ம பத்ரிகா.

ஸ்வஸ்திஸ்ரீ மன்மத வருடம், பங்குனி மாதம், 22 ஆம் தேதி (உ) (04-04-2016) திங்கட்கிழமை கிருஷ்ணபக்ஷம் வாதஸி (44.35), சித்தயோகம், சூரியோதயம் 6.12க்கு, உதயாதி நாழிகை 29.58க்கு, மாலை மணி 6.11 க்கு (இராசி. இருப்பு 1.21), கன்னி லக்னத்தில், கும்பம் இராசியில், மகரம் நவாம்ஸத்தில், சதயம் நட்சத்திரம் 2-ஆம் பாதத்தில், அதன் ஆதியந்த பரம நாழிகை 57.16 க்கு 22.52 கழிய, 34.24 இருக்க, இராகு தெசை கர்பசெல் போக, 10 வரு. 9 மீ. 22 நாள் இருக்க, சிரஞ்சீவி. பிரகதீஷ் சுபஜெனனம்.

| | | | |
|---|---|---|---|
| சுக் சூரி | புத | | |
| சந் கே | இராசி | | |
| | | | குரு ரா |
| | செ சனி | | ல |

| | | | |
|---|---|---|---|
| | ல | கே | புத |
| | நவாம்ஸம் | | சுக் |
| சந் சூரி | | | |
| | சனி ரா | செ குரு | |

– சுபமஸ்து–

**கிரக பாத சாரங்கள்**

1. சூரியன் : ரேவதி – 2 ஆம் பாதம்
2. சந்திரன் : சதயம் – 2 ஆம் பாதம்
3. செவ்வாய் : அனுஷம் – 3 ஆம் பாதம்
4. புதன் : அசுபதி – 3 ஆம் பாதம்
5. குரு : பூரம் – 3 ஆம் பாதம்

6. சுக்கிரன் : பூரட்டாதி – 4 ஆம் பாதம்

7. சனி : அனுஷம் – 4 ஆம் பாதம்

8. இராகு : பூரம் – 4 ஆம் பாதம்

9. கேது : பூரட்டாதி – 2 ஆம்பாதம்

10. லக்னம் : ஹஸ்தம் – 1 ஆம்பாதம்

இவண்,

இடம்:

நாள்:

(நகல்)

ஜாதகம் வேறு ஒருவர் எழுதி இருந்தால் அடைப்பில் நகல் என்று எழுதலாம். ஜோதிடரே கணித்திருந்தால் அடைப்புத் தேவையில்லை. இப்போது ஜாதக நகல் கொடுத்துள்ளதால் நகல் என்று எழுதி உள்ளது.

முதலில் வாடிக்கையாளர் கொடுத்த பிறந்த தேதி மற்றும் விவரம்: சிர.பிரகதீஷ் 04-04-2016 மாலை 6.11 மணி.

குழந்தை சிசேரியனில் பிறந்துள்ளதா? என்று முதலில் கேட்டறியவும். சிசேரியன் என்றால் ஜாதகத்திலேயே செவ்வாய், சுக்கிரனுக்கு அல்லது சந்திரனுக்கு அல்லது லக்னத்துக்கு 10 இல் இருக்கும்.

அடுத்த கேள்வி. குழந்தை வெளிநாட்டில் பிறந்துள்ளதா? என்று கேட்கவும். குழந்தை வெளிநாட்டில் பிறந்திருந்தால் அந்த ஊர் மணி நிமிடங்களிலேயே ஜாதகம் கணித்து பலன்கள் சொல்லி எழுத வேண்டும். இந்திய நேரம் கூடாது.

இனி பலன்கள்:

**பக்கம் எண் 1**

சிரஞ்சீவி. பிரகதீஷ் ஜாதகம் மற்றும் பலன்கள்

(திருச்சிராப்பள்ளி)

**பக்கம் எண் 2**

உ (அல்லது) 986 (அல்லது) †

கடவுள் வாழ்த்து ஏதாவது மூன்று பாடல்கள்.

(*அவரவர் மதத்திற்கிணங்க 3 பாடல்கள். இது பிரிவினை நோக்கமல்ல.)

இந்துக்கள் ஜாதகம் எனில்  உ என்றும்,

முகம்மதியர் ஜாதகமெனில் 786 என்றும்,

கிறித்தவர் ஜாதகம் எனில் † என்றும் எழுதவும்.

**பக்கம் 3**

நலம் (க்ஷேமம்)

*எப்போ தகத்துள் நினைப்பார்க் கிடரில்லை*

*கைப்போ தகத்தின் கழல்.* – ஔவையார் – *இது இந்துக்களுக்கு.*

*God loves all, lives in all and gives all.* – *இது ஆங்கிலத்தில் ஜாதகம் எழுதும் போது.*

*எல்லார்க்கும் எல்லாம் இனிதளிக்கும் நல்லுள்ளத்(து)*

*அல்லாவைப் போற்றின் அருளுண்டாம்.* – *இது முகமதியர்களுக்கு.*

*பாலன் இயேசு பாதம் பணிவார்*

*சீலம் பெறுவார் சிறந்து.* – *இது சிறித்தவர்களுக்கு.*

(* பின்னர் 3 ஆம் பக்கம் தரப்பட்டுள்ள படிவத்தை எழுதவும். இதில் (அ) முதல் (உ) வரையில், 1 முதல் 10 வரையில் எப்படி வேண்டுமானாலும் மாற்றி எழுதலாம். தவறில்லை. ஆனால் (அ) பெயர் என்பதும், (10) செவ்வாய் தோஷம் என்பதும் மட்டும் மாறக்கூடாது. இப்போது:)

| | | |
|---|---|---|
| (அ) பெயர் | ; | சிரஞ்சீவி. பிரகதீஷ் |
| (ஆ) ஜென்ம நட்சத்திரம் | : | சதயம்-2 ஆம் பாதம் |
| (இ) ஜென்ம இராசி | : | கும்பம் |
| (ஈ) ஜென்ம லக்னம்: | : | கன்னி லக்னம் |
| (உ) பிறந்த தேதி: | : | 04-04-2016 (திங்கட்கிழமை) |

*****

| | | |
|---|---|---|
| 1. அதிர்ஷ்ட எண்: | : | 8 (8, 17, 26 தேதிகள்) ஆகஸ்ட், அஷ்டமி, கார்த்திகை விசேஷம். |
| 2. அதிர்ஷ்டக் கிழமை | : | செவ்வாய் |
| 3. அதிர்ஷ்டநிறம் | : | வெளிர் பச்சை |
| 4. அதிர்ஷ்டதிசை | ; | வடமேற்கு |
| 5. அதிர்ஷ்டவயது | ; | 9, 17, 26, 35, 48, 59, 79 |
| 6. அதிர்ஷ்டக்கல் | : | பவழம் |

7. அருள் தெய்வம் : விஷ்ணு

8. இஷ்ட தெய்வம் : ஐயனார்

9.தவிர்க்க வேண்டிய நாள் : வியாழன்

**10. செவ்வாய் தோஷம்:**

1. லக்கினத்துக்கு : 3
2. இராசிக்கு : 10 செவ்வாய் தோஷம் இல்லை. சுத்த ஜாதகம் (சிசேரியன்)
3. சுக்கிரனுக்கு : 9

---

*இக்குறியீடு உள்ள விவரங்கள் மாணவர்களுக்காகத் தரப்பட்டுள்ளன. இவற்றை ஜாதகப் பலனில் எழுதக் கூடாது.

*பெயர், நட்சத்திர பாதம் எல்லாம் ஜாதகக் கட்டத்துக்கு மேலே எழுதப்பட்டிருக்கும்.

* அதிர்ஷ்ட எண் என்பது பிறந்த தேதி + மாதம் + வருடம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை. அதாவது 4+4+2+0+1+6 = 17. எனவே 1 + 7 = 8. அட்டமி 8ம் நாள் ஆகஸ்ட் கார்த்திகை 8 ஆம் மாதம். இப்படி எண்ணுக்குத் தக்க எழுத வேண்டும்.

*செவ்வாய் ஆட்சி என்பதால் சிவப்பு பவழக்கல். புதன் நல்ல இடத்தில் இருப்பதால் நிறம் பச்சை. கன்னி லக்னம் என்பதால் அதற்கு ஏழாவது வீடு வடமேற்கு, அதிர்ஷ்ட வயதுகள் தெசா புக்திக்குத் தக்க எவை என்று கண்டு எழுதுக.

*லக்னத்துக்கு 10 ஆம் வீடு திருமாலைக் குறிக்கும். (மிதுனம்-புதன்வீடு). எனவே அருள் தெய்வம் விஷ்ணு என்று கொள்க.

* லக்னத்துக்கு 5 ஆம் விடு சனி என்பதால் இஷ்ட தெய்வம் ஐயனார் என்று கொள்க.

இராசிக்குத் தக்கன தெய்வம். அருள்தெய்வம் என்பது லக்னத்துக்கு 10 ஆம் வீட்டு தெய்வத்தையும், இஷ்ட தெய்வம் என்பது 5 ஆம் வீட்டு தெய்வத்தையும் குறிக்கும்.

* 12 இல் குரு இருப்பதால் தவிர்க்க வேண்டிய நாள் வியாழன். 6, 8, 12 இல் உள்ள கிரகங்களுக்கேற்ப தவிர்க்க வேண்டிய நாளை எழுதவும். கிரகங்கள் நீச்சம் 6, 8, 12 இல் இருந்தால் அதற்குத் தக்கவாறு எழுதவும். 6, 8, 12 இல் கிரகங்கள் இல்லாமல் இருந்தாலோ, எந்தக் கிரகமும் நீச்சமாகவில்லை என்றாலோ, தவிர்க்க வேண்டிய நாள் – அதற்கு எதிரில் இல்லை என்று எழுதவும்.

* செவ்வாய் 1, 2, 4, 7, 8, 12 இல் லக்னத்துக்கு, இராசிக்கு, சுக்கிரனுக்கு இல்லாவிடில் சுத்த ஜாதகம்.

சிறிது இருந்தால் 3% அல்லது 30% என்று மனஆய்வில் கண்டபடி எழுதலாம்.

* லக்னத்துக்கு, இராசிக்கு, சுக்கிரனுக்கு 10 இல் செவ்வாய் இருந்தால் சிசேரியன் என்று குறிப்பிடவும். இக்குழந்தை சிசேரியனில் பிறக்காவிடிலும் இக்குழந்தைக்கு 20 ஆண்டுகளுக்குப் பின் திருமணமான பின் பிறக்கும் குழந்தை சிசேரியனில் பிறக்கும். இத்துடன் முதல் 3 பக்கங்கள் முடிகின்றன.

* இனி பக்கம் 4 இல் மேற்கண்ட ஜாதகத்தைத் தொடர்ந்து எழுதவும்.)

**பக்கம் – 4**

11. வர்கோத்தமம் : சனி – சகோதர மேன்மை.

12. ஆட்சி : செவ்வாய் – தீவுக் கூட்டவாசம்.

13. உச்சம் : சுக்கிரன் – குடும்ப மேன்மை, மணவாழ்வில் இரண்டாம் முறை வெற்றி

14. நீச்சம் : இல்லை (*எதுவும் எழுத வேண்டாம்.)

15. பரிவர்த்தனை : குரு, சூரியன் : தாயார், மனைவி வழி சுகம். (*4-7 ஆம் அதிபதிகள் என்பதால்.)

16. யோகம் : குரு சந்திர யோகம் : தியாகி.

17. வெளிநாட்டு யோகம் : 80% கிழக்கு நாடு (*கடகத்தில் கிரகம் இல்லாததால் 80%)

18. இலாபம் தரும் தொழில் : பெட்ரோல் (*11 ஆம் வீடு கடகம்.)

19. விரயம் தரும் தொழில் : உணவகம் (*12 ஆம் வீடு சூரியன்.)

20. இலாபம் தருபவர் : மாமா வழியில் ( *11 ஆம் வீடு சந்திரன் என்பதால்.)

21. விரயம் தருபவர் : சிற்றப்பா வழியில் (*12 ஆம் வீடு சூரியன் என்பதால்)

22. தந்தை வழி உறவு : வீண்விரயம் தருவர் (* இராகு இருக்கும் இடம் = 12)

23. தாய்வழி உறவு : துணைதருவர். (*கேது இருக்கும் இடம் 6 இல்)

24. நண்பர்கள் : சகோதர வழியில் (*5 ஆம் இடம் சனி+செவ்வாய்)

25. விரோதிகள் : ரியல் எஸ்டேட் காரர்கள். ( *6 ஆம் இடம் சனி+செவ்வாய்)

26. குணநலன்கள் : (*லக்கினம் முதல் வரிசையாக கிரகமுள்ளதற்குப் பலன்)

- மென்மையானவர். மேன்மையானவர். ( * கன்னி லக்னம் என்பதால்) .
- சகோதர மேன்மை உண்டு. (*3 இல் சனி+செவ்வாய் இருப்பதால்)
- பணமுடை அற்றவர். (*6 இல் சந்திரன் + கேது)
- மணவாழ்வில் இரண்டாவது முறை வெற்றி. (*7 இல் சுக்கிரன் உச்சம் – சூரியன்)
- மாவுப் பொருள் உண்பதால் அஜீரணம். (*8 இல் புதன்)

– வீண் அலைச்சல். (*12 இல் குரு, இராகு இருப்பதால்)

(*இப்படி தவிர்த்து பலன்களை எழுதவும். இது மாணவர்களுக்காக.)

(* வர்கோத்தமம் என்பது இராசி–அம்ஸத்தில் ஒரு கிரகம் ஒரே இராசியில் இருப்பது. இதெல்லாம் முன்னரே பார்த்தது. உச்சம், நீச்ச பலன்களைப் படித்து எழுதவும்.

*சிம்மம் லக்னம் என்றால் முன்கோபமுள்ளவர் என்று எழுதவும்.

*3 நீர்க் கட்டங்களிலும் கிரகங்கள் இருந்தால் 100% வெளிநாட்டு யோகம் உள்ளது என்றும், 10 ஆம் அதிபதிக்குத் தக்க நாடுகளின் பெயர் எழுதவும். உலக வரைபடம் பின் பக்கத்தில் உள்ளது. அதைப் பார்த்து எழுதுக.

*இராகு தந்தை வழி உறவையும், கேது தாய் வழி உறவையும் குறிக்கும்.

*யோகங்களும் அதன் பலன்களும் பகுதியைக் கற்றறிருந்து எழுதவும். இந்த ஜாதகத்தில் அனபா யோகம், குரு சந்திரன், குரு சண்டாள யோகங்கள் உள்ளன. அதன் பலன்களை எழுதவும்.
இத்துடன் 3 ஆவது பக்கம் முடிகிறது.)

**பக்கம் 5**

**27. வாழ்வு**

வெண்மைநிறப் பொருளால் ஆதாயமும், கேட்டரிங் அறிவும் உள்ளவர். விமானத்துறையில் உள்ளவர் உதவுவார். மின்னியல், இரசாயனம், மருத்துவத்துறையில் இலாபமுண்டு. சீன மாடல் வெள்ளை நிற வீடு கட்டுவார். அஜீரணமுண்டு.

(*இவை லக்னாதிபதி புதன் 8 இல் இருப்பதால், 8 வயிற்றைக் குறிப்பதால், அலுமினியம் போன்ற வெண்பொருட்களை மாவைக் குறிப்பதால் செவ்வாய் வீட்டில் இருப்பதால் எழுதப்பட்டது.)

**28. குடும்பம்**

சிறு குடும்பம். கடலோர ஊர்வாசம். பெண்குழந்தை பாக்கியம் உண்டு. வங்கி கடன் வாங்குவார். வீண் விரையம் தடைபடும்.

(* 2 ஆவதுவீடு குடும்ப ஸ்தானம். அந்த அதிபதி சுக்கிரன் 7 இல் இருப்பதாலும் மீனம் கடலோர ஊர்வாசம் என்றும், குரு, சூரியன் பரிவர்த்தனை ஆவதால் வங்கி கடன் பற்றியும், விரயாதிபதி சூரியனுடன் சுக்கிரன் சேருவதால் வீண்விரையம் என்றும், பரிவர்த்தனையானதால் வீண் விரையம் தடைபடும் என்றும் பலன் எழுத வேண்டும்.

இப்படி பன்னிரு பாவங்களுக்கும் எழுதவும். 27–38 வரையிலான பன்னிரு பாவங்களை வரிசை

மாறாமல் எழுத வேண்டும். மற்றபடி மாற்றி மாற்றி எழுதலாம். வர்கோத்தமமோ உச்சமோ இல்லையெனில் எழுதவே வேண்டாம். வர்கோத்தமம் இல்லை என்று எழுத அவசியம் இல்லை.)

**29. சகோதரம்**

3-1=2 சகோதரி பலமுண்டு. (*3 இல் இரு கிரகங்கள் இருப்பதால்)×

**30. தாயார்**

வீண் விரையமும் வாய்வுப் பிடிப்பும் உள்ளவர். கல்வி அறிவு போதிய அளவே இருக்கும். வீண் மனபயம் உள்ளவர். (*4 ஆம் அதிபதி 12 இல் மறைவதால் இராகுவுடன் இருப்பதால்.)

**31. பூர்வ புண்ணியம்**

பி.ஈ, எம்.பி.ஏ. சிராமிக் தொழில். மின்னியல் அறிஞர். செங்கல் வீடு (சிவப்பு ஆக்ஸைடு வீடு) கட்டுவார். (* இது சனி-செவ்வாயை அடிப்படையாய் வைத்து எழுதியது.)

**32. நோய்**

காது வலி

**33. மணவாழ்வு**

மனைவி மாநிறம். தாயாருக்கு அறிமுகமானவர். ரமணி, ரோஜா போன்ற பெயர். 3 வயது இளையவர். இரண்டாம் முறையே மணவாழ்வில் வெற்றி உண்டு. வடமேற்கு திசை. அசுபதி நட்சத்திரம். 28 வயது மணவயது.

(* இது 7 இல் சுக்கிரன் உச்சமாவதால், சூரியனுடன் சேருவதால் எழுதப்பட்டது.)

**34. ஆயுள்**

81 வயது.

(*லக்னாதிபதி இருக்கும் இடத்திலிருந்து செவ்வாய் 8 இல் இருப்பதால் 8 × 10 = 80 வயது.)

8 இல் புதன் இருப்பதால் கண்டம் இருக்காது.

**35. தந்தை**

கட்டுமானப் பணி செய்வார். இராமர் பெயர். (சுக்கிரன் சூரியனுடன் சேருவதால்.) 79 வயது இருப்பார்.

(*லக்னத்துக்கு 7 இல் சுக்கிரன் (9 ஆம் அதிபதி) + சூரியன். 7 × 10 + 9 = 79 வயது.)

**36. தொழில்**

(* தொழில் ஸ்தானத்துக்கு லக்னம், 5 ஆம் வீடு, பத்தாம் வீட்டை ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். அதன்படி லக்னம் மற்றும் 10 ஆம் அதிபதி புதன். 5 ஆம் அதிபதி சனி. புதன் வயிற்றைக் குறிக்கும்.

புதன்  8 இல் இருப்பதால்)

கேட்டரிங் அல்லது மெடிக்கல், இஞ்சீனியர். எம்.பி.ஏ. படித்து நிர்வாகியாவார்.

(*இதனை மேலாளர் நிர்வாகம் (கேட்டரிங்) அல்லது மேலாளர் நிர்வாகம் (மருத்துவ மனை) என்று எழுதவும்.)

**37. இலாபம்**

ஏற்றுமதியால்.   (* 11 ஆம் அதிபதி சந்திரன் நீர் இராசி என்பதால் இப்படி எழுதவும்.)

**38. நட்டம்**

ஒப்பந்தத் தொழிலால், மனைவி வழியால் நட்டம். (குரு + சூரியன் பரிவர்த்தனை. விரயாதிபதி என்பதால்.)

(*மாமாங்க வருடம் பிறந்ததால் மனைவி ஸ்தானத்தில் (7 இல்) சூரியன் இருப்பதால் இப்படி எழுதவும்.)

( * பக்க எண்கள் மாறுபடலாம். அதனால் பாதிப்பு இல்லை. சிலருக்கு அதிக விவரங்கள் வரும். சிலருக்குக் குறைந்த விவரங்கள் வரும்.)

**39. குரு பெயர்ச்சி பலன்கள்**

(* குழந்தை கும்பம் இராசி என்பதாலும், குரு தற்போது 2017 இல் 8 இல் இருப்பதாலும் குரு 8, 9, 10, 11, 12, 1 ஆகிய வீடுகளில் இருக்கும் போது நிகழவிருக்கும் பலன்களை எழுதவும். கும்பம் இராசியில் இருந்து குரு 8 இல் உள்ளது.) எனவே,

2017 இல் உடல் உபாதை.    2018 இல் தந்தை வழி மேன்மை.

2019 இல் இடமாற்றம். வீடு, ஊர், தொழில் மாற்றம்.    2020 இல் இலாபம்.

2021 இல் சுப மூவிரயம்.    2022 இல் தீர்த்த யாத்திரை.

**40. சனிப் பெயர்ச்சி பலன்கள்**

(*சனி கும்பம் இராசிக்குத் தற்போது 10 இல் உள்ளதால்)

2017 இல் இடமாற்ற சிந்தனை.

2017-19 இல் மனதிற்கினிய சம்பவம் (*சனி இலாபம் ஸ்தானத்தில் இருப்பதால்.)

2019-26 இல் உடலுபாதை   (*ஏழரைச் சனி நடப்பதால்.)

2026-28 இல் கல்வி மேம்பாடு.

**41. இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்**

2017 இல் (1-7 இல்) கனவுத் தொல்லை.    2018 இல் பணவரவு.

2019 இல் தோல் அலர்ஜி.    2020 இல் பயண இலாபங்கள்.

(*இராகு-கேது இராசிக்கு 1-7, 12-6, 11-5 ஆகிய இடங்களில் உள்ள பலன்கள்.)

(இவை யாவும் பழக்கத்தில் வரும். அதுவரை ஜாதகம் இராசிக்குப் பஞ்சாங்கத்தில் கடைசிப் பக்கம் கோச்சாரப் பலன்களைப் பார்த்துப் பழகவும் அல்லது முந்தைய பாடங்களைப் படிக்கவும்.)

**42. லக்னம், இராசி, நட்சத்திரம் எண் பலன்கள்**

மூலை வீடு வாங்குவார். (முனை லக்னம்) (பெண் இராசி லக்னம் என்பதால்.)

பிறரை அணுகத் தயங்குவதால் நல்ல வாய்ப்புக்களை இழப்பார்.

எடுபடாத கடின உழைப்பாளி. (*கும்பம் இராசி என்பதால்).

நேர் பார்வை உள்ளவர். அசோக் என்பவரால் நலம். சைக்கிள் கடைக்காரரால் நலம். பக்கத்து வீட்டுக்காரர் விரோதமுண்டு. ரோஷமுள்ளவர். (*8 ஆம் எண் என்பதால்)

அடைப்புக்குறி ()யில் உள்ளதை விட்டு விட்டு மற்றவற்றை எழுத வேண்டும். சிம்மம் லக்னம் என்றால் மன தைரியமுள்ளவர் என்று லக்னத்துக்குத் தக்கவாறு எழுதவும். முன்பாடத்தில் லக்னம், இராசி, நட்சத்திரம் பலன்களைப் பார்க்கவும்.

**43. பிறந்த மாதம், வருடம், கிழமை பலன்கள்**

(*குழந்தை பிறந்த மாதம் (தமிழ்), வருடம், கிழமை பலன்கள் பாடம் படித்து எழுதவும்.)

அழகர். எதிலும் கடைசி முறை வெற்றி உண்டு. சிவனருள் உள்ளவர்.

**44. செய்யக் கூடியவை**

1. பீட்ரூட், தக்காளி, இரத்தப் பரிசோதனை செய்யலாம். (*செவ்வாய் ஆட்சி என்பதால்.)
2. விஞ்ஞானியாகலாம். (பௌதீகம்).
3. பிரஞ்ச் மொழி படிக்கலாம்.
4. கஜலெஷ்மி பூஜை செய்யலாம்.
5. இந்தோனேஷியா போகலாம்.

**45. செய்யக் கூடாதவை**

1. முகநூல் திறந்து செய்யக்கூடாது.
2. வேகமாய் ஓடக் கூடாது.
3. சித்தா மருந்துண்ணக் கூடாது. உயரமான இடத்தில் ஏறக் கூடாது.
4. கிண்டல் பேச்சு கூடாது.
5. சொல்லிக் காட்டக் கூடாது.

(* பொதுவாய் சதயம் நட்சத்திரக்காரர்கள் முகநூலினால் துன்பமுறுவர். 12 இல் இராகு இருப்பதால்

ஓடக்கூடாது. செவ்வாய் + சனி சித்தா மருந்து எதிர்விளைவை உண்டாக்கும். 12 இல் குரு இருப்பதால் உயரமான இடத்தில் விழுவார் (ஏறினால்). பொதுவாய் கும்ப இராசிக்காரர்கள், லக்னகாரர்கள் கிண்டல் பேசுவார்கள். சொல்லிக் காட்டுவார்கள். இவற்றையெல்லாம் சோதிடர் காரணத்தைக் கூறாமல் செய்யக்கூடாதவையில் 5 விவரங்கள் எழுத வேண்டும். கிரக அமைப்பைப் பொறுத்து எழுதவும். இவை பழக்கத்தில் வந்துவிடும்.)

**46. மரம் :** அத்தி மரம் வளர்ப்பது நல்லது. (*பார்வை: 36 ஆம் பக்கம்.)

**47. மூல மந்திரம்**

(* இருகிரகங்கள் ஒரே ராசியில் இருந்தால் (6, 8,12 இல் மறையாதிருக்க ண்டும். இந்த ஜாதகத்தில் செவ்வாய், சனி சேருவதால் செவ்வாய் முருகனுக்கும், சனி காளிக்கும் அதிபதி என்பதால், )

ஓம்ஸ்ரீ காளிசுப்ரம்மணியாய நம:

என்று மூன்று முறை ஒவ்வொரு நாளும் சொல்ல வேண்டும். (*லக்னத்துக்கு மூன்றில் இருப்பதால்) இதனால் மனவல்லமை கூடும். (* என்று எழுதவும்.)

**48. பார்வை பலன்கள்**

(*மூன்று பார்வை பலம் பெற்ற குரு, சனி, செவ்வாய் லக்னத்தில் இருந்து பார்க்கும் வீட்டைப் பற்றி எழுதவும். இந்த ஜாதகத்தில் குரு 12 இல் இருந்து 4, 6, 8 ஆகிய இடங்களைப் பார்ப்பதாலும், சனி 3 இலிருந்து 5, 9, 12 ஆம் வீடுகளைப் பார்ப்பதாலும், செவ்வாய் 3 இலிருந்து 6, 9, 10 ஆம் வீடுகளைப் பார்ப்பதாலும் கீழ்க்காணும்படி பலன் எழுதவும்.)

குரு : தாயாருக்கு நலம். கடனடையும். சுக ஜீவனமுண்டு

சனி : புத்திரரால் இலாபமின்மை, தந்தைவழி இழப்பு. தூக்கமின்மை.

செவ்வாய் : கடன் அடைபடுதல். பூமி இலாபம். தொழில் வளம்

**49. இராசி பலன்கள்**

(*சந்திரனுக்கு 1 இல் கேது, 2 இல் சுக்கிரன் + சூரியன், 3 இல் புதன். 7 இல் குரு + இராகு, 10 இல் சனி + செவ்வாய் இருப்பதால்×) கோச்சார பலன் பக்கம் எண் பஞ்சாங்கம் 26)

மறதி, கவலை, பணவரவு, வீண் வேலை, சிறுநோய், பெண் / ஆண்களால் நலம், வீண்விரயம்.

கொத்தவரை, புடலங்காய், மாம்பழம், பேயன்பழம்

**51. சேரும் ஆடைஅணிகலன்கள்**

குஜராத் ஆடை , மாணிக்கம்

**52. சேரும் மலர்**

அல்லி மலர்

**53. விளையாட்டு**

மலையேற்றம்

**54. சேராத எண்**

5, (5, 14, 23). 8 க்கு விரோதம்.

**55. சேராத நிறம்**

வெள்ளை ஆகாது. (*6 ஆவது இராசி கடகம். சந்திரன். வெள்ளை)

**56. சேராத காய், கனிகள்**

பலா, வெண்டை, பேரீட்சை, வாழை. (*கடகம் இராசிக்கானது.)

**57. சேராத மலர்**

மல்லிகை

**58. சேராத ஆடை, அணிகலன்கள்**

உள்ளுராடைகள், முத்து

(*கும்பத்துக்கு 6 ஆவது இராசிக்குண்டானது ஆகாதவை.) (சிம்ம இராசியானால் மீன இராசிக்கு உண்டானவை ஆகாது. மேஷ லக்னம் / இராசியானால் சிம்ம லக்னம்/இராசிக்கு உண்டானவை ஆகாது எனக்கொள்ளவும். அதாவது லக்னம், இராசிக்கு 6 ஆம் இராசிக்கு உண்டானவைகள் சேராது.)

**59. தெசா புக்தி பலன்கள்:**

இராகுதெசையில் வீண் அலைச்சலும், குரு தெசையில் சிங்கப்பூர் தொடர்பும், சனி தெசையில் கூட்டுக் குடும்பமும், புதன் தெசையில் தொழில் வளமும், கேது தெசையில் பணவரவும், சுக்கிரன் தெசையில் குடும்பம் இலாபமும் உண்டாகும். பின்யோக ஜாதகம்.

(*இராகு 12 இல் இருப்பதால் வீண் அலைச்சல் என்றும், குரு சிம்மத்தில் இருப்பதால் சிங்கப்பூர் தொடர்பு என்றும், சனி சகோதர ஸ்தானத்தில் இருப்பதால் கூட்டுக்குடும்பம் என்றும், கிரகங்கள் எந்த வீட்டிலுள்ளனவோ அதற்கான பலன்களை எழுதவும். இது சோதிடர்களுக்கு.)

(*ஜாதகருக்கு இராகு, குரு ஆகியவை 12 இல் மறைந்து விட்டதால், 27 வயது முதல் அதிர்ஷ்டம் வரும் என்பதால், பின்யோக ஜாதகம் என்று எழுத வேண்டும்.)

**60. தெசா புக்தி விவரம்:**

1. 04-04-2016 - 26-01-2027 -இராகுதெசை
2. 26-01-2027 - 26-01-2043 - குருதெசை
3. 26-01-2043 - 26-01-2062 - சனிதெசை
4. 26-01-2062 - 26-01-2079 - புதன் தெசை
5. 26-01-2079 - 26-01-2086 - கேது தெசை
6. 26-01-2086 - 26-01-2106 - சுக்கிரன் தெசை

(* ஜாதகக்கு இராகு, குரு ஆகியவை 12 இல் மறைந்து விட்டதால் 27 வயது முதல் அதிர்ந்டம் வரும் என்பதால் பின் யோக ஜாதகம் என்று எழுத வேண்டும்.)

***தெசா புக்தி கணக்கு:**

| | | | |
|---|---|---|---|
| பிறந்த தேதி | : | 04-04-2016 | + |
| இராகு தெசை இருப்பு | : | 22-09- 10 | |
| | | 26-01-2027 | வரை |
| குரு தெசை | : | 16 | வருடம் |
| | | 26-01-2043 | வரை |
| சனி தெசை | : | 19 | வருடம் |
| | | 26-01-2062 | வரை |
| புதன் தெசை | : | 17 | வருடம் |
| | | 26-01-2079 | வரை |
| கேது தெசை | : | 7 | வருடம் |
| | | 26-01-2086 | வரை |
| சுக்கிரன் தெசை | : | 20 | |
| | | 26-01-2106 | வரை |

(*பிறந்த தேதியிலிருந்து இருப்பு தெசை காலம், அடுத்தடுத்து ஒவ்வொரு தெசையின் வருடங்களை வரிசையாகக் கூட்டினால், ஒவ்வொரு தெசையும் எது வரை நடைபெறும் என்று கணக்கிடலாம்.)

(*மேற்கண்ட கணக்கு முறை சோதிடருக்காகப் போடப்பட்டது. இதனை நோட்டில் எழுத வேண்டாம்.)

**61. பொது:**

கேது – இராகுவுக்கு இடைப்பட்ட காலத்தை விட சுக்கிரன் தெசை நலம் தரும். 27-08-17 முதல் 30 வருடம் சுகமும் வெற்றியும் உண்டு.

(*இப்பகுதியில் சோதிடர் தான் சொல்ல விரும்புவதை எழுதலாம்.)

**62. தெசா புக்திகள் விரிவு பலன்கள்**

தெசா புக்திகள் கணக்கிடும்போது பஞ்சாங்கத்தின் உதவியோடு கணக்கிடலாம். இராகு தெசையில் 9 புக்திகள் உள்ளன. எல்லா தெசைகளுக்கும் 9 புக்திகள் உள்ளன. ஒரு மாதம் 28 தேதிகள், இன்னொரு மாதம் 29 தேதிகள், வேறு ஒரு மாதம் 31, 30 தேதிகள் என்று வருவதால் எப்படிக் கணக்கிடுவது? பொதுவாக ஒரு மாதத்திற்கு 30 நாட்கள் மட்டுமே என்று கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

எடுத்தக்காட்டாக, இராகுதெசை புதன் புக்தி 08-01-2017 அன்று தொடங்குவதால் அதனுடன் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட புதன் புக்திக்கான 30 மாதம் 18 நாட்களைக் கூட்ட வேண்டும். அதாவது 2 வருடம் 6 மாதம் 18 நாள் புதன் புக்தி என எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி வரிசையாய் 6தெசைகளுக்கும் அடித்தல் திருத்தல் இன்றி ஒரு தாளில் எழுதிக் கொள்ளவும். பேனாவில் எழுதுவதைவிட பென்சிலால் எழுதுவது உத்தமம்.

இதனை இவ்வாறு கணக்கிடவும்:

| | |
|---|---|
| | நா. மா. வருடம் |
| இராகு தெசை புதன் புக்தி தொடக்கம் | : 08-01-2017 + |
| புதன் புக்தி | : 18- 6- 2 |
| | ---------------- |
| | : 26-07-2019 வரை |
| அடுத்து, கேது புக்தி | : 18 - 0 - 1 |
| | ---------------- |
| | : 14-08-2020 வரை |

30 நாட்கள் ஒரு மாதம் என்ற கணக்கில் மாதத்தைக் கணக்கிடவும்.

இந்த முறையிலேயே ஒரு தெசையில் எல்லா புக்திக்கும் கணக்கிடவும். இப்படி வரிசையாக 6 தெசைகளுக்கும் அடித்தல், திருத்தலின்றி ஒரு தனித் தாளில் எழுதிக் கொள்ளவும். பேனாவால் எழுதுவதை விட பென்சிலால் எழுதுவது உத்தமம். ஜாதகம் எழுதக் கற்கும்போது இதைப் பயன்படுத்தி சோதிடர் ஜாதகக் கிரகநிலைக்குத் தக்கவாறு 6 தெசைகளோ, 5 தெசைகளோ கணக்கிடலாம். (வேறு தனித்தாளில் எழுதவும்.)

எடுத்துக்காட்டாக, கீழே 2 தெசைகளுக்குப் புக்தி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

**இராகு தெசை புக்திகள்**

| | | |
|---|---|---|
| | 08-01-2017 | |
| புதன் புக்தி | 18- 6- 6 | |
| | 26-07- 19 | வரை |
| கேது புக்தி | 18- 0 - 1 | |
| | 14-08- 20 | வரை |
| சுக்கிரன் புக்தி | 0- 0- 3 | |
| | 14-08- 23 | வரை |
| சூரியன் புக்தி | 24-10- 0 | |
| | 08-07- 24 | வரை |
| சந்திரன் புக்தி | 0- 6- 1 | |
| | 08-01- 26 | வரை |
| செவ்வாய் புக்தி | 18- 0- 1 | |
| | 26-01- 27 | வரை |

**குரு தெசை புக்திகள்**

| | | |
|---|---|---|
| | 26-01- 27 | |
| குரு புக்தி | 18- 1 - 2 | |
| | 14- 03- 29 | வரை |
| சனி புக்தி | 12- 6 -2 | |
| | 26-09- 31 | வரை |
| புதன் புக்தி | 6 - 3 - 2 | |
| | 02 -01 - 34 | வரை |
| கேது புக்தி | 6 - 11 - 0 | |
| | 08-12- 34 | வரை |
| சுக்கிரன் புக்தி | 0 - 8 - 2 | |
| | 08 - 08 - 37 | வரை |
| சூரியன் புக்தி | 18 - 9 - 0 | |
| | 26 - 05 - 38 | வரை |
| சந்திரன் புக்தி | 0 - 4- 1 | |
| | 26 - 09 - 39 | வரை |
| செவ்வாய் புக்தி | 6- 11 - 0 | |
| | 02- 09- 40 | வரை |
| இராகு புக்தி | 24 - 4 - 3 | |
| | 26- 01 - 43 | வரை |

க்ஷேமம்

**தெசாபுக்தி விரிவு பலன்கள்**

| வ.எண் | முதல் | வரை | தெசாபுக்தி | | கோச்சாரம் | | பலன்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தெசை | புக்தி | குரு | சனி | |
| 1 | 08-01-17 | 26-07-19 | இராகு | புத | 8-10 | 10-11 | தந்தை வழி நலம், இடமாற்றம் பொருள் வரவு கல்வி மேம்பாடு |
| 2 | 26-07-19 | 14-08-20 | இராகு | கேது | 11 | 11 | மருத்துவச் செலவுகள், எதிர்பாராத விரையம் |
| 3. | 14-08-20 | 14-08-23 | இராகு | சுக் | 11-2 | 12 | வெற்றிகள், நண்பரால் உதவி |
| 4. | 14-08-23 | 08-07-24 | இராகு | சூரி | 3 | 1 | பூமி இழப்பு |
| 5. | 08-07-24 | 08-01-26 | இராகு | சந் | 3-5 | 2 | வெண்பொருள் ஆதாயம், மனமகிழ்ச்சி, புத்திர மேன்மை |
| 6. | 08-01-26 | 26-01-27 | இராகு | செவ் | 6 | 2 | பூமி இலாபம், மன அமைதி குறைவு, இடமாற்றம். |
| 1. | 26-01-27 | 14-03-29 | குரு | குரு | 6-3 | 3 | தாயார், மனைவி வழி நலம், ஆபரண லாபம். |
| 2. | 14-03-29 | 26-09-31 | குரு | சனி | 8-10 | 4 | வாகனத்தில் இடர், இட மாற்றங்கள் |
| 3. | 26-09-31 | 02-01-34 | குரு | புதன் | 10-1 | 5 | வழக்கு வெற்றிகள் |
| 4. | 02-01-34 | 08-12-34 | குரு | கேது | 2 | 5 | மருத்துவச் செலவு |
| 5. | 08-12-34 | 08-08-37 | குரு | சுக் | 2-5 | 6 | பொருளாதார மேன்மை |
| 6. | 08-08-37 | 26-05-38 | குரு | சூரி | 6 | 7 | உஷ்ண நோய், வீண் மனபயம் |
| 7. | 26-05-38 | 26-09-39 | குரு | சந் | 7 | 8 | பொருள் தொலைவது, மாற்றங்கள் |
| 8. | 26-09-39 | 02-09-40 | குரு | செவ் | 7-10 | 8 | வெளிவட்டார மேன்மை, வெப்பநோய் |

| வ.எண் | லிருந்து | வரை | தெசாபுக்தி | | கோச்சாரம் | | பலன்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தெசை | புக்தி | குரு | சனி | |
| 9. | 02-09-40 | 26-01-43 | குரு | இராகு | 10-1 | 9 | இடமாற்றம் இலாபம்,<br>தற்காலிக இடமாற்றம். |
| 1. | 26-01-43 | 29-01-46 | சனி | சனி | 11-4 | 10-11 | சகோதர மேன்மை, காரிய பலிதம் |
| 2. | 29-01-46 | 08-10-48 | சனி | புதன் | 4-6 | 11 | வெண்மை நிறப்பொருள் இலாபம் |
| 3. | 08-10-48 | 17-11-49 | சனி | கேது | 6 | 12 | குடும்பத்தி சுப காரியத் தடைகள் |
| 4. | 17-11-49 | 17-01-53 | சனி | சுக் | 6-8 | 1 | வெற்றிகள் |
| 5. | 17-01-53 | 29-12-53 | சனி | சூரி | 8 | 1-2 | வேதாந்த எண்ணம் |
| 6. | 29-12-53 | 29-07-55 | சனி | சந் | 8-9 | 2 | வீடு கட்டுதல் முதலியவற்றால்<br>நலம் |
| 7. | 29-07-55 | 08-09-56 | சனி | செவ் | 10 | 3 | புத்திரர்களால் நலம் |
| 8. | 08-09-56 | 14-07-59 | சனி | இராகு | 10-1 | 3-4 | கவலைகள் தடைகள் . |
| 9. | 14-07-59 | 26-01-62 | சனி | குரு | 1-4 | 4 | சுமூகலாபம் |
| 1. | 26-01-62 | 23-06-64 | புதன் | புதன் | 4-6 | 5 | தொழில் மேன்மைகள்,<br>அலுமினியப் பொருட்கள் வரவு |
| 2. | 23-06-64 | 20-06-65 | புதன் | கேது | 7 | 6 | வழக்கு வெற்றிகள் |
| 3. | 20-06-65 | 20-04-68 | புதன் | சுக் | 7-10 | 7 | சுபகாரியங்கள் |
| 4. | 20-04-68 | 26-02-69 | புதன் | சூரி | 11 | 8 | எதிர்பாராத நன்மைகள் |
| 5. | 26-02-69 | 26-07-70 | புதன் | சந் | 12 | 9 | பயணங்கள் |
| 6. | 26-07-70 | 23-07-71 | புதன் | செவ் | 1 | 9 | திர்த்த யாத்திரை |
| 7. | 23-07-71 | 11-02-74 | புதன் | இராக | 1-4 | 10 | போராட்டவெற்றி |
| 8. | 11-02-74 | 17-05-76 | புதன் | குரு | 4-6 | 10-11 | கவலைகள் |
| 9.. | 17-05-76 | 26-01-79 | புதன் | சனி | 6-9 | 11 | வீடு மாற்றங்கள் |
| 1. | 26-01-79 | 23-08-80 | கேது | கேது | 10 | 12 | ஓட்டு வீட்டு வாசம் |

( * இக்குறியிட்ட கட்டங்களில் கவனம் தேவை.)

**குறிப்புகள் :**

1. குழந்தை வெளிநாட்டில் பிறந்திருந்தால் அந்த நாட்டின் மணி நிமிட நேரத்திலேயே ஜாதகம் கணிக்க வேண்டும். இந்திய நேரம் மணி நிமிடத்துக்கு மாற்றக்கூடாது.

2. பரணி நட்சத்திரம் மரண – அமிர்தயோகத்துக்கு உட்படாது. எல்லாக்கிழமைகளிலும் சித்தயோகமே பெறும்.

3. புனர்பூசம், பூரம், சுவாதி, பூராடம், உத்திரட்டாதி 5 நட்சத்திரங்களும் மரணயோகத்திற்கு உட்படாது.

4. 6 இல் இராகு உச்சமானால் தோல் பை (லெதர் பேக்) வாணிபம் செய்வார்.

5. 5 இல் செவ்வாய் உச்சமானால் மாசுக்கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

6 சென்னை, ரங்கூன், மங்களூர் ஒரே நேர்க்கோட்டில் உள்ளன. இவையெல்லாம் சோதிடர் மனத்தில் கொள்ள வேண்டும்.

7. ராமா ராமா ராமா என்று மூன்று முறை சொன்னால் 1000 முறை ராமநாமம் சொன்னபலன் என்பர். அது எப்படி?

யரல வழள என்பதில் இரண்டாவது எழுத்து = ர

ஙஞணநமன என்பதில் ஐந்தாம் எழுத்து = ம

ரா × ம ரா × ம ரா × ம

2 × 5 2 × 5 2 × 5

10 × 10 = 100, 100 × 10 = 1000. இது தான் எழுத்தின் இரகசியம்.

**8. நாடுகள் விவரம்**

ஜாதகத்தில் எந்த இராசி கட்டத்தில் கிரகங்கள் இருக்கிறதோ அதற்கேற்ப இந்தியாவில் உள்ள இடங்களுக்கு அந்த ஜாதகர் போக வாய்ப்பு உண்டு. அதேபோல், எந்த அம்சக் கட்டத்தில் கிரகங்கள் இருக்கிறதோ அதற்கேற்ப வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும் உண்டு.

| **இராசி** | **இந்திய மாநிவங்கள்** | **வெளிநாடுகள்** |
|---|---|---|
| 1. மேஷம்: | ஹரியானா, நியூடெல்லி, காஷ்மீர், மேற்கு வங்காளம் | (சீனா, ரஸ்யா, யுரேசியா) |
| 2. ரிஷபம்: | அருணாசல பிரதேசம் | (திபெத்,நேபால்,ஐரோப்பா) |
| 3. மிதுனம்: | அஸ்ஸாம், நாகலாந்து, மேகாலயா, மேற்கு வங்காளம் | (கொரியா) |
| 4. கடகம்: | பீகார் ஒரிசா, மத்தியப் பிரதேசம் | (ஜப்பான்) |
| 5. சிம்மம்: | ஆந்திரா | (மலேசியா, சிங்கப்பூர்) |

| | | |
|---|---|---|
| 6. கன்னி: | தமிழ்நாடு | ( ஆஸ்திரேலியா) |
| 7. துலாம்: | அந்தமான் | (இலங்கை) |
| 6. விருச்சிகம்: | இலட்சத்தீவு | (தென்ஆப்பிரிக்கா) |
| 9. தனுசு: | கேரளா | (அரபு நாடுகள்) |
| 10. மகரம்: | கர்நாடகா | (மடகாஸ்கர் தீவு) |
| 11. கும்பம்: | மகாராஷ்ட்ரா, குஜராத், ராஜஸ்தான் | (தென் அமெரிக்கா) |
| 12. மீனம்: | பஞ்சாப் | (பாகிஸ்தான், வடஅமெரிக்கா, அலாஸ்கா) |

இதுவரை தெசா புக்தி பலன்களைக் கால அட்டவணைப்படி எழுதலாம். தெசாபுக்தி விவரத்தையும் தெசா புக்தி கணக்குப் போட்டதையும் சரி பார்த்துக் கொள்வது நல்லது. அதாவது 26-01-2027 முதல் 26-01-2043 வரை குரு மகா தெசை நடக்குமல்லவா? அதில் 26-01-27 முதல் குருதெசை குருபுக்தி , அடுத்து சனி புக்தி என்று இராகுபுக்தி வரை 9 புக்திகளையும் கூட்டிப் பார்த்து, இறுதியில் 26-01-2043 உடன் தெசை முடிய வேண்டும். இல்லையென்றால் கூட்டல் தவறாகும்.

தெசாபுக்தியை அடுத்து குரு-சனி என்று எழுதப்பட்ட இடத்தில் கும்ப இராசியில் இருந்து கணக்கெடுக்கவும். வேறு நட்சத்திரம் எனில் அந்தந்த இராசியில் இருந்து குரு, சனி எத்தனையாவது வீட்டில் உள்ளார் என்று கணக்கிட்டு பலன்கள் எழுதவும். போகப்போக பழக்கத்தில் வந்துவிடும்.

இதுதான் ஜாதகம் கணிக்கும் முறை, பலன்கள் எழுதும் முறை அல்லது சொல்லும் முறை. இந்த விவரங்களைப் படித்துவிட்டு நாம் முழுதும் கற்றுவிட்டோம் என்று நம்புவது கூடாது. வளர்ந்து வரும் விஞ்ஞான மாறுபாடுகள் நிகழநிகழ, அதற்குத் தக்கவாறு பலன்களை மாற்ற வேண்டும். தெசாபுக்தி அட்டவணையில் இராகுபுக்தி, கேதுபுக்தி அல்லது நீச்ச கிரக புக்தி, குரு 6 இல், சனி 8 இல் இருக்கும் போதுள்ள இடத்தில் × குறியீடு போட்டு எச்சரிக்கை செய்யலாம்.

மூல மந்திரம் என்பது இந்துக்களுக்கு மட்டுமின்றி அனைத்து மதத்தவருக்கும் உண்டல்லவா? அப்போது எப்படி எழுதுவது?

கிரகங்களுக்குத் தகுந்தவாறு இந்துக்களுக்கு பாடல்கள், சுலோகங்கள் எழுதலாம். கிறித்தவர்களுக்கு அதிகாரம் 3, 7, 12 போன்ற எண்களைத் தரலாம். அதேபோல் முகம்மதியர்களுக்கும் ஜைனர்களுக்கும் அப்படியே செய்யலாம்.

செய்யக்கூடாதவை பகுதியில் நட்சத்திரப்படி பலன்கள் எழுதவும். எடுத்துக்காட்டாக, மூலம்,

திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் நாய் யோனி பெற்றவர். இவர்கள் பூனை வளர்க்கக் கூடாது என்று எழுதவும். அவிட்டம், பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள் சிங்கம் யோனி உள்ளவர். இவர்;களுக்கு யானை பகை மிருகம் என்பதால் யானையின் அருகே செல்லக்கூடாது என்று எழுதவும். இவையெல்லாம் பழக்கத்தில் வரும்.

செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை இரண்டும் 5 கருத்து எழுதினால் போதுமானது. இவை நட்சத்திர இராசி எண், லக்னத்தைப் பொறுத்து எழுதவும். எடுத்துக்காட்டாக, ரிஷப லக்னம், 3 ஆம்தேதி பிறந்தவர் மகம் என்றால் எம்.பி.ஏ. படிக்கலாம் என்று எழுதவும். பூனை வளர்க்கக்கூடாது என்று எழுதவும். 3 ஆம் தேதி பிறந்தவர்கள் ஆராய்ச்சி செய்யலாம் என்று எழுதவும்.

ஒரு சோதிடருக்குச் சமுதாயக்கடன் இருப்பதால் மரம் சொல்லி, சுற்றுபுறச் சூழலை வளர்க்கச் சொல்லலாம்.

முழு நினைவோடு ஏழை, பணக்காரர்கள் பாகுபாடின்றி அனைவருக்கும் சேவை செய்து வெற்றி பெற வாழ்த்துக்கள்.

OOOOO

# தாள் - 2 சோதிடக் கூறுகள்

## வினாத்தாள்

**பாடம் 1 – திருமணப் பொருத்தம்**

1 . வேதைப் பொருத்தத்தை 5 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

2. கணப்பொருத்தம் எத்தனை வகைப்படும்? அதன் பண்புகள் யாவை?

3. சஷ்டாஷ்டக தோஷம் என்றால் என்ன? அதன் விளைவுகள் என்ன?

4. பொருத்தம் பார்க்கப் பயன்படும் 8 நிலைப்பாடுகளின் படிவம் வரைக.

5. ரஜ்ஜு, யோனிப் பொருத்தம் பற்றி விளக்குக.

6. ஏதேனும் ஐந்து பெண் நட்சத்திரங்களுக்குத் திருமணப் பொருத்தம் சேரும் ஆண் நட்சத்திரங்கள், சேராத நட்சத்திரங்கள் எவை?

**பாடம் 2 – ஜாதகக் கணிதமும் பஞ்சாங்கப் படிப்பும்**

1. பஞ்சாங்கம் என்றால் என்ன? அவை எத்தனை வகைப்படும்?

2. உதயாதி நாழிகை, ஆதியந்த பரம நாழிகை கணிப்பது எப்படி?

3. குழந்தை பிறந்த லக்னம் கணிக்கும் முறையை விளக்குக.

4. குழந்தை பிறந்த அம்ச லக்னம் கணிக்கும் முறையை விளக்குக.

5. குழந்தை பிறந்த நட்சத்திர பாதம் (அம்ச சந்திரன்) கணிக்கும் முறையை விளக்குக.

6. குழந்தை பிறந்தபோது இருப்பு தெசை கணிக்கும் முறையை விளக்குக.

7. சூரிய உதயம் காலை 6.07 மணி. குழந்தை பிறந்த நேரம் மாலை 4.33 மணி. அன்றைய மேஷம் இருப்பு 5.03 நாழிகை விநாடி எனில் லக்னம் என்ன வரும்?

**பாடம் 3 – இராசியும் பொதுத் தன்மைகளும்**

1. மேஷபம், ரிஷபம் இராசிகளுக்குரிய பழங்கள் எவை?

2. மிதுனம், கடகம் இராசிகளுக்குரிய பூக்கள் எவை?

3. ஏதேனும் இரண்டு இராசிகளுக்குரிய காய்கறிகள், பயிர்கள் எழுதுக.

4. ஏதேனும் இரண்டு இராசிகளுக்குரிய மரங்கள், விளையாட்டுகள் எழுதுக.

5. 12 இராசிக்குரிய மரங்களை எழுதுக.

6. விலை ஏற்றம் இறக்கம பற்றி குறிப்பு எழுதுக.

**பாடம் 4 – சோதிடர் கடைப்பிடிக்க வேண்டியவை**

1. சோதிடருக்கான ஐந்து தகுதிகள் எழுதுக.
2. ஜாதகம் பார்க்கும் விதிமுறைகள் 10 கூறுக.
3. திருமணப் பொருத்தம் பார்க்கும்போது தெசா சந்தி, தொடர்தெசை பார்ப்பது எப்படி? விளக்குக.

**பாடம் 5 – பரிகாரங்கள்**

1. பரிகாரங்கள் என்ற பெயரில் செய்யக்கூடாதவை எவை?
2. மூன்று பரிகாரங்கள் யாவை?
3. மரம் வளர்ப்பதன் பயன் என்ன?
4. யாருக்குத் தானம் செய்யலாம்?
5. யார் எந்தப் பொருளைத் தானம் செய்யலாம்?

**பாடம் 6 – அறிந்ததும் அறியாததும்**

1. பின்யோக ஜாதகம் என்றால் என்ன?
2. 60, 80, 100 ஆண்டுகளின் சிறப்பியல்புகள் எவை?
3. திதிகள் எத்தனை நாள் கொண்டவை? வரிசைப்படுத்துக.
4. மேல்நோக்கு நாள், கீழ் நோக்கு நாள், சமநோக்கு நாள் இவற்றைப் பற்ஷ் விளக்குக.
5. பத்துக்கட்டளைகள், தசாவதாரம் ஒப்பிடுக.

**பாடம் 7 – கோள்களும் கடவுளும்**

1. கடலோரமுள்ள ஸ்தலங்கள் பற்றிய விவரம் கூறுக.
2. வெட்டவெளி உருவ–அருவ வழிபாடுகள் யாவை?
3. ரிஷபம், கடகம், சிம்மம் இராசியினர் வழிபாட்டு முறைகள் யாவை?
4. லம்பிகா யோகம் என்றால் என்ன?
5. சோதிடர்கள் வழிபாட்டுமுறைகள் யாவை?

**பாடம் 8 – இயற்கை தரும் பாடம்**

1. பஞ்சபூதங்களின் இயல்புகள் எவை?
2. பூமி, விண்வெளி பற்றி குறிப்பு வரைக.

**பாடம் 9 – ஜாதகப் பலன் சொல்வது, எழுதுவது எப்படி?**

1. ஜாதகப் பலன் சொல்வதற்கான ஐந்து படிகளை விளக்குக.
2. ஜாதக பலன் படிவத்தை வரைக.

**பாடம் 10 – ஜாதக முழுப் பலன் – ஓர் எடுத்துக்காட்டு.**

1. ஏதேனும் பத்து தலைப்புகளில் ஜாதகப் பலன்கள் எழுதுக.
2. ஒரு ஜாதகருக்கு இராகு தெசை முடிவு 10-03-2019 எனில் குரு தெசையில் 9 புக்திகளைக் கணக்கிட்டு அந்தக் காலங்களை வரிசையாக எழுதுக.

OOOOO